பக்கங்கள்: 48
விலை: 40

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 | கதிர் 75 | தை 27ஆம் நாள் | ஞாயிற்றுக்கிழமை | 10 பெப்ரவரி 2019 | வள்ளுவர் ஆண்டு 2050

### விபத்தில் ஒருவர் சாவு

வவுனியா, பெப். 10
வவுனியாபுளியங்குளம் பகுதியில் நேற்றுமாலை இடம்பெற்ற விபத்தில் >> 04

# புதிய அரசமைப்பு வேண்டாம் எனக் கூறும் மகிந்தவா தமிழருக்கு தீர்வைத் தரப்போகிறார்?



## கேள்வி எழுப்புகிறார் ரணில்

கொழும்பு, பெப்ரவரி 10

புதிய அரசமைப்பு வேண்டாம். அது நாட்டைத் துண்டாக்கும் என்று நாட்டு மக்களைக் குழப்பி பரப்புரைகளை மேற்கொண்டுவரும் மகிந்த ராஜபக்சவா மீண்டும் ஆட்சிக்கு வந்ததும் தீர்வுத் திட்டத்தை முன்வைக்கப்போகின்றார்? அவர் மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் தமிழ் மக்களையும் ஏமாற்ற முற்படுகின்றார்.

இவ்வாறு தெரிவித்துள்ள தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, தாம் முன்னெடுத்த புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி தொடரும் என்று குறிப்பிட்டுள்ளார். >> 04

## வடக்கில் முதன்முறையாக பௌத்த மாநாடு விரைவில்

### ஆளுநர் ராகவன் ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப். 10
வடக்கு மாகாணத்தில் பௌத்த மாநாடொன்றை முதற்தடவையாக நடத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வவுனியாவில் எதிர்வரும் மார்ச் மாதம் 22ஆம் திகதி இந்த >> 04

தமிழ் மக்களை திருப்திப்படுத்தலாம்

## தமிழ் அரசியல்வாதிகளை திருப்திப்படுத்த முடியாது

### கூறுகிறார் மகிந்த ராஜபக்ச



கொழும்பு, பெப். 10
அதிகாரப் பரவலாக்கல் என்பது மக்களைத் திருப்திப்படுத்துவதாக இருக்க வேண்டுமே அன்றி >> 04

## கஞ்சாவுடன் சிப்பாய் கைது

### வவு. பொலிஸார் தெரிவிப்பு

வவுனியா, பெப். 10
வவுனியா நொச்சிமோட்டை பாலத்துக்கு அருகில் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் கேரளக் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் இராணுவச் சிப்பாயைக் கைது செய்துள்ளதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர். >> 04



## அரசமைப்புத் திருத்தம் ஊடாக தமிழருக்குத் தீர்வு வழங்குவேன்

### இந்தியாவில் மகிந்த தெரிவிப்பு

கொழும்பு, பெப். 10
அரச தலைவர் தேர்தலில் சிறந்த வேட்பாளர் ஒருவரைப் போட்டியிட வைப்பேன். அந்த வேட்பாளர் வெற்றி >> 04

யாழ்ப்பாணம், வவுனியாவில்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், பெப். 10
யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம் முன்பாகவும், வவுனியா வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் முன்பாக வும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுக >> 04

தெல்லிப்பழையில்

## வீட்டாரைத் தாக்கி துணிகரக் கொள்ளை

தெல்லிப்பழை, பெப். 10
அரச அலுவலர்களான கணவன் மற்றும் மனைவியை >> 04

கொள்ளைச் சந்தேகநபரை

## வீதிவீதியாக இழுத்துச் சென்று முறையாகக் கவனித்தனர் மக்கள்

### கடும் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்ப்பு



>> 46

## 17 கிலோகிராம் கஞ்சா யாழ்ப்பாணத்தில் மீட்பு

### சந்தேக நபரும் கைது

யாழ்ப்பாணம், பெப். 10
கஞ்சா கைமாற்றும் நடவடிக்கையின்போது வடமராட்சி கிழக்கு தாளையடிப் பகுதியைச் சேர்ந்த 37 வயது சந்தேக நபரையும், >> 04

வடக்கு கல்வித் துறையில்

## பாலியல் துன்புறுத்தல்களை விசாரிக்க விசாரணைக்குழு

### ஆளுநர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப். 10
வடக்கு மாகாணக் கல்வித்துறையில் பெண்களுக்கு எதிராக இடம் >> 04

SDB TOP SAVER
20 வருட பூர்த்தியை முன்னிட்டு
சேமிப்பு கணக்குக்கு வழங்கும்
10%
அதிகூடிய வட்டி
• எச் சந்தர்ப்பத்திலும் பணத்தை மீளப்பெறும் வாய்ப்பு
• SDB VISA Debit Card வசதி மற்றும் SMS சேவை
• வட்டி வீதம் 10% (வ.தே.வ 10.46%) வரை*
011 5 411 411
SDBவங்கி
சனச அபிவிருத்தி வங்கி பிஎல்சீ, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையினால் விஷேடமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. Fitch Rating BB+ (stable), Reg No: PB62PQ

# மீண்டும் எம்முடன் முட்டி மோதுகின்றார் மைத்திரி

## நாட்டின் நற்பெயரை அவர் பாதுகாக்க வேண்டும் என வலியுறுத்துகிறார் ராஜித

கொழும்பு, பெப். 10

2018 ஒக்ரோபர் 26 அரசியல் சூழ்ச்சியூடாக ஆட்சியைக் கவிழ்த்து எம்முடன் பகிரங்கமாக முரண்பட்ட அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, 52 நாள்களின் பின்னர் ஓர் இணக்கத்துக்கு வந்து நாம் மீளவும் ஆட்சியமைக்க உதவினார். ஆனால், அவர் மீண்டும் எம்முடன் முட்டி மோதுகின்றார். இவ்வாறு ஐக்கிய தேசிய முன்னணியின் மூத்த உறுப்பினரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

எதிரணியின் வீண்வம்புக் கருத்துக்களை செவிசாய்க்காமல் நாட்டு மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு அரச தலைவர் செயற்பட வேண்டும். நாட்டின் நற்பெயரை அவர் பாதுகாக்க வேண்டும், எனவும் ராஜித வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவருக்கு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசு முழு ஒத்துழைப்புகளையும் அன்றும் வழங்கி வந்தது. இன்றும் வழங்கி வருகின்றது. ஆனால், அவர் எம்மைத் தவறாக எடைபோடுகின்றார். தலைமை அமைச்சர், சபாநாயகர் மற்றும் அமைச்சர்களுடன் அரச தலைவர் மீண்டும் முட்டி மோதுகின்றார். இது நாட்டின் அரசியலுக்கு அழகு அல்ல. இதை உணர்ந்து அரச தலைவர் செயற்பட வேண்டும்.

அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கில் கூட்டு அரசு அமைக்கும் யோசனையை ஐக்கிய தேசிய முன்னணி முன்வைக்க வில்லை. மைத்திரிபால சிறிசேன அரச தலைவரானவுடன் கூட்டு அரசு அமைக்கும் யோசனைக்கு ரணில் விக்கிரமசிங்க முழு ஆதரவு வழங்கினார். இதை மைத்திரிபால சிறிசேன மறக்காமல் இருந்தால் சரி - என்றார். (ஒ.5.22)

# நெல் கொள்வனவு ஆரம்பம் நிர்ணய விலை அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 10

பெரும்போகத்துக்குரிய நெல்க் கொள்வனவை நெல்சந்தைப்படுத்தும் அதிகாரசபை மேற்கொள்ளவுள்ளதால் வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த விவசாயிகள் இது தொடர்பில் கமநலசேவைகள் திணைக்களங்களின் உதவி ஆணையாளர்களைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

நெல் சந்தைப்படுத்தும் சபையானது வடக்கு மாகாணத்தில் உள்ள விவசாயிகளிடமிருந்து இந்தப் பெரும்போகத்தில் 40 ஆயிரத்து 800 மெற்றிக் தொன் நெல்லைக் கொள்வனவு செய்யத் திட்டமிட்டுள்ளது.

ஒரு கிலோ சம்பா 41 ரூபாவுக்கும், ஒரு கிலோ நாடு 38 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்படவுள்ளன. யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களில் எதிர்வரும் வாரங்களில் கொள்வனவு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம் செய்திக்குறிப்பை அனுப்பிவைத்துள்ளது.

தற்போது அறுவடை செய்கின்ற நெல்லை சம்பா ரூபா 41 வீதமும், நாடு ரூபா 38 வீதமும் நெல்சந்தைப்படுத்தும் சபை, மற்றும் கூட்டுறவுச்சங்கங்கள் ஊடாகக் கொள்வனவு செய்யவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதற்கான நிதி ஏற்பாடுகளை மாவட்டச் செயலகம் மேற்கொண்டுள்ளது.

இந்தக் கொள்வனவானது நெல் சந்தைப்படுத்தும் சபையால் எதிர்வரும் புதன் கிழமையிலிருந்து ஆரம்பிக்கப்படவுள்ளது. இது தொடர்பாக கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரைத் தொடர்பு கொள்ள வேண்டப்படுகின்றீர்கள் - என்றுள்ளது. (ஒ.5.21.213)



## சட்டவிரோத மணல் அகழ்வு: உழவியந்திரங்கள் கைப்பற்றப்பட்டன

முல்லைத்தீவு, பெப். 10

முல்லைத்தீவு உடையார்கட்டுப் பகுதியில் நஞ்சுண்டான் ஆற்றுப்பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 4 உழவு இயந்திரங்களைக் கைப்பற்றியுள்ளதாகவும், அவற்றின் சாரதிகளையும் நேற்றுக் கைது செய்துள்ளதாகவும் சிறப்பு அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.

நஞ்சுண்டான் ஆற்றுப்பகுதியில் அரச காட்டுக்குள் அனுமதி இன்றி சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்டவேளையில், இவர்களை கைது செய்து புதுக்குடியிருப்பு பொலிஸாரிடம் ஒப்படைத்ததாக கிளிநொச்சி மாவட்ட சிறப்பு அதிரடிப் படையினர் தெரிவித்தனர். (ஒ.5.ரி3)





*யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் இ.சபாலிங்கத்தின் 100 ஆவது பிறந்த தின நிகழ்வு பாடசாலை அதிபர் சதா. நிமலன் தலைமையில் நேற்று கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலர் இ.இளங்கோவன், யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் இ.விக்னேஸ்வரன், கலாநிதி ஆறுதிருமுருகன், கல்லூரியின் பழைய மாணவர்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர்.* (எ-8)



## விழிப்புணர்வு நடைபவனி

யாழ்ப்பாணம், பெப். 10

உலக புற்றுநோய் தினத்தை முன்னிட்டு செலான் வங்கியின் அனுசரணையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையும் வடமராட்சி வலயக் கல்வி அலுவலகமும் இணைந்து நடத்திய 'புற்றுநோய் விழிப்புணர்வு நடைபவனி' நேற்றுக் காலை 7 மணிக்கு நெல்லியடி செலான் வங்கியில் ஆரம்பித்து பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் நிறைவு பெற்றது.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் மருத்துவ அதிகாரிகள், ஊழியர்கள், வடமராட்சி கல்வி வலய உயர் அதிகாரிகள், ஊழியர்கள், செலான் வங்கியின் முகாமையாளர்கள், ஊழியர்கள், பொதுமக்கள் உள்பட பலரும் கலந்து கொண்டனர். (ஒ.5)

## பருத்தித்துறை - பொன்னாலை வீதியில் நேரக் கட்டுப்பாடு தளர்த்தப்படுகின்றது

யாழ்ப்பாணம், பெப். 10

பருத்தித்துறை - பொன்னாலை வீதியில் காலையில் போக்குவரத்துச் செய்யும் நேரம் ஒரு மணித்தியாலத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த சில நாள்களாக அதிகாலை 4 மணிக்கு அந்த வீதி திறக்கப்படுகின்றது.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற கூட்டத்தில் பொன்னாலை பருத்தித்துறை வீதி தொடர்பாகவும் ஆராயப்பட்டது. அதிகாலையில் தொடருந்து நிலையத்துக்குச் செல்வோர், கடற்றொழிலுக்குச் செல்வோர் அந்த வீதியைப் பயன்படுத்துவதால் மக்களின் நலன்கருதி வீதியை அதிகாலை 4 மணிக்குத் திறக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இவ்வாறானதொரு நிலையிலேயே அந்த வீதி அதிகாலை 4 மணிக்குத் திறக்கப்பட்டு போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படுகிறது. அந்த வீதியினூடான போக்குவரத்துக்கள் இரவு 9 மணியுடன் நிறுத்தப்படுவதாலும் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். இரவு 10 மணிவரையாவது வீதி திறக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ.5.21.26)

# மன்னாரில் மீனவர் படகு ஓடை அமைக்க விதித்த தடை நீக்கம்

மன்னாரில் மீனவர்களின் படகுப் போக்குவரத்துக்காக ஓடைகள் அமைக்க வன ஜீவராசிகள் திணைக்களம் விடுத்திருந்த தடையை நீக்கி, உடனடியாக அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வகை செய்யுமாறு அமைச்சர் ஜோன் அமரதுங்க உத்தரவிட்டுள்ளார்.

இந்தத் தகவலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் மீனவர்களின் போக்குவரத்துக்காக 11 ஓடைகள் அமைக்க ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி ஒதுக்கியிருந்தது. இந்த நிதி கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருந்தது. அவற்றில் 7 ஓடைகள் அமைக்கப்பட்டன. ஏனைய 4 ஓடைகளையும் அமைக்கும் நடவடிக்கைகளுக்கு வனஜீவராசிகள் திணைக்களம் தடை விதித்திருந்தது. பனங்கட்டிக்கொட்டு, பள்ளிமுனை, பாப்பாமோட்டை, கள்ளியடி ஆகிய இடங்களில் அமைக்கத் திட்டமிடப்பட்டிருந்த ஓடைகளுக்கே தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்த விடயம் தொடர்பாக வன ஜீவராசிகள் திணைக்கள அமைச்சர் ஜோன் அமரதுங்கவைச் சந்தித்துக் கலந்துரையாடப்பட்டது. இந்த ஓடைகளை அமைக்க அனுமதிக்க வேண்டும் என்றும், பள்ளிமுனை, குழுவில் ஆகிய இரு கிராமங்களில் வனஜீவராசிகள் திணைக் களம் ஆளுகை செய்யும் மக்கள் குடியிருப்புப் பிரதேசங்களை விடுவிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. அங்குள்ள ஆயிரத்து 350 குடும்பங்களில் 350 குடும்பங்கள் நிலம் இன்றி வாழ்கின்றனர். அவர்களின் நிலத் தேவையைப் பூர்த்தி செய்ய வும், வீட்டு வசதியை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரப்பட்டது.

அதையடுத்து ஓடைகள் அமைப்பதற்கு விதிக்கப்பட்ட தடையை உடனடியாக நீக்குங்கள் என்று திணைக்கள அதிகாரிகளுக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-105)

# போதைப்பொருள் வர்த்தகர்களுக்கு மறைமுகமாக உதவுகின்றார் ரணில்

## இது படுகேவலம் என்கிறார் விமல்

கொழும்பு, பெப். 10
நாட்டைச் சீரழித்துக் கொண்டிருக்கும் போதைப் பொருள் வர்த்தகர்களுக்கு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்கவும் அவரின் சகாக்களும் மறைமுகமாக உதவுகின்றார்கள். இது படுகேவலமானது. இவ்வாறு சாடினார் மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச. அவர் மேலும் தெரிவித்ததாவது:
உள்நாட்டில் இருக்கும் போதைப் பொருள் வர்த்தகர்களுக்கும் வெளிநாட்டில் வசிக்கும் இலங்கையைச் சேர்ந்த போதைப் பொருள் வர்த்தகர்களுக்கும் ரணில் அரசு உதவிகளை வழங்கி வருகின்றது. இது அரச தலைவருக்கும் தெரிந்த விடயம். போதைப்பொருள் வர்த்தகர்களுக்கு எதிராகவும் அவர்களுக்குப் பக்கபலமாக இருக்கும் அரச தரப்பினருக்கு எதிராகவும் அரச தலைவர் தாமதிக்காமல் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.
மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் போதைப்பொருள் வர்த்தகர்களுக்கு முடிவு கட்டப்பட்டிருந்தது. பாதாள உலகக் குழுக்களின் கொலை வெறியாட்டங்களும் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டிருந்தன.
ஆனால், 2015ஆம் ஆண்டுக்குப் பின்னர் நாட்டில் போதைப் பொருள் வர்த்தகத்துக்கும் பாதாள உலகக் குழுக்களின் கொலை வெறித்தனங்களுக்கும் ரணில் அரசு புத்துயிர் கொடுத்துள்ளது. இதற்கு உடன் முடிவுகட்டப்பட வேண்டும் - என்றார்.
(ஒ.5.22)

## தொடர்கின்றது பொலிஸ் வேட்டை

# மதுஷவின் சகாவுடைய கார் கஞ்சாவுடன் கண்டுபிடிப்பு!

**கொழும்பு, பெப்.10**
**டுபாயில் கைது செய்யப்பட்ட போதைப்பொருள் வர்த்தகர் மாக்கந்துர மதுஷவின் சகாவும், அவருடன் கைது செய்யப்பட்டவருமான பிரபல நடிகர் ரயன் வேன் ரோவன் பயன்படுத்திய மகிழுந்து (கார்) கைப்பற்றப்பட்டுள்ளது. அந்த மகிழுந்தில் 5 கிலோ 750 மில்லி கிராம் கேரளாக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.**

மாலை வெலிகம, மிரிஸ்ஸ பிரதேசத்தில் உள்ள விடுதி ஒன்றில் இருந்தே இந்த மகிழுந்து கைப்பற்றப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப் பட்டது. அந்த விடுதியின் உரிமையாளர் ஹெட்டிஹேவா எனப்படும் மதுஷவுடன் சேர்த்து சுரன்பி சுத்தா என்பவரும் கைது செய்யப் பட்டார்.
பிரபல நடிகர் ரயன் வேன் ரோவன் வெளிநாடு செல்வதற்கு முன்னர், சில தினங்கள் இந்த விடுதியில் தங்கியிருந்துள்ளார் என்றும், பின்னர் இருவருடன் சேர்ந்து வெளிநாடு சென்றுள்ளார் என்று பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. வெலிகம பொலிஸாரால் சுரன்பி சுத்தாவின் மூத்த சகோதரரனிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த மகிழுந்து நடிகர் ரயன் வேன் ரோவன் வைத்திருந்த மகிழுந்து என்று அவர் தனது வாக்குமூலத்தில் கூறியுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்று வெலிகம பொலிஸார் தெரிவித்தனர். (எ)




# திருநெல்வேலி வியாபாரிகள் புறக்கணிப்புப் போராட்டம்!

## பிரதேச சபையினர் அடாவடி எனக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், பெப். 10
நல்லூர் பிரதேச சபையின் செயற்பாட்டைக் கண்டித்து திருநெல்வேலி சந்தை வியாபாரிகள் நேற்றுப் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். பிரதேச சபைவழங்கிய உறுதிமொழியை அடுத்துப்போராட்டம் கைவிடப்பட்டது.
திருநெல்வேலி பொதுச் சந்தையில் நடைபாதைக்கு இடையூறாக ஒரு வியாபாரி நடந்து கொண்டார் என்று தெரிவித்து அவருடைய வியாபார உரிமத்துக்கு நல்லூர் பிரதேச சபை தற்காலிகமாகத் தடை விதித்ததுடன், அந்த வியாபாரி மீது விசாரணையும் முன்னெடுக்கப்பட்டது. வியாபாரி தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை அநியாயமானது. நல்லூர் பிரதேசசபை அடாவடியாக நடந்துகொள்கிறது என்று குற்றஞ்சாட்டியே திருநெல்வேலிச் சந்தை வியாபாரிகள் நேற்றுத் தமது வியாபார நடவடிக்கைகளைப் புறக்கணித்தனர்.
சந்தைக்குச் சென்ற உப தவிசாளர் மற்றும் சந்தைக் குழுவினர் வியாபாரிகளுடன் பேச்சு நடத்தினர். சந்தையில் போதிய இடவசதிகள், மலசலகூட வசதி இல்லாதமை தொடர்பாகச் சுட்டிக்காட்டிய வியாபாரிகள், அவற்றைச் சீர் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினர்.
அவை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதேச சபையினர் உறுதியளித்ததைத் தொடர்ந்து வியாபாரிகள் தமது போராட்டத்தைக் கைவிட்டனர்.
இது தொடர்பாக பிரதேச சபையின் தவிசாளர் த.தியாகமூர்த்தி தெரிவித்ததாவது
திருநெல்வேலிச் சந்தைப் பகுதியின் மேல் தள நடைபாதையில் பொதுமக்களுக்கு இடையூறாகச் சிலர் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தனர். இடையூறாக இருக்கவேண்டாம் என்று அவர்களுக்குப் பல தடவைகள் அறிவுறுத்தியும் கேட்கவில்லை. எழுத்து மூலமாக அறிவுறுத்தியிருந்த நிலையில் அவர்களை அப்புறப்படுத்தினோம். எனினும் ஒரு சில வியாபாரிகள் எம்முடன் முரண்பட்டனர். இதனால் பொலிஸாரின் உதவி கோரப்பட்டது. பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுக்க முற்பட்டனர். மனிதாபிமான அடிப்படையில் நாம் மீண்டும் அறி வுறுத்தினோம் - என்றார்.
(த-8)

# கோபுரத்துக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம், பெப். 10
யாழ்ப்பாணம் தாவடி சிறி அம்பலவாண கந்தசாமி ஆலய பஞ்ச தள இராஜ கோபுரத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று காலை 8.50 மணிக்கு இடம்பெறவுள்ளது.
கணபதி கோமம் மூல மூர்த்திக்கு சிறப்பு அபிஷேகப் பூஜைகளைத் தொடர்ந்து பஞ்ச தள இராஜ கோபுர அடிக்கல் நடும் நிகழ்வு இடம் பெறும்.
(த-8)

யாழ் மண்கும்பான் வெள்ளைப்புற்றடி

ஸ்ரீ வீரகத்தி விநாயகர்
மகா கும்பாபிஷேகம்
2019.02.11
இன்று (10.02.2019) ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிமுதல் விநாயகர் வழிபாடு. விஷேசசந்தி. யாகபூஜை. விசேடதிரவிய ஹோமம். தீபாராதனை. கீதாஞ்சலி தேவார திருமுறை பாராயணம் பிரசாதம் வழங்கல். மாலை 5 மணிமுதல் விநாயகர் வழிபாடு. பஞ்சசுத்தி. விம்பசுத்தி. யாகபூஜை. நியாசம். திரிசதி ஹோமம். பச்சிமசந்தானம். தீபாராதனை. வேதஸ்தோத்திர திருமுறை பாராயணம். பிரசாதம் வழங்கல்.

உதயா ஜுவல்லர்ஸ்
79,81 Kasthuriyar Road, Jaffna, Sri Lanka.
021 222 4434, 021 221 6877
uthayaajewellers4434@gmail.com
www.facebook.com/uthayaajewellers

# திருநெல்வேலி சந்தையில் வெற்றிலை துப்பாதீர்கள்!

## பிர்தேச சபையினர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், பெப். 10
திருநெல்வேலிச் சந்தை வளாகத்தில் வெற்றிலை உமிழ்ந்து துப்புவதை உடன் தவிர்க்க வேண்டும். வெற்றிலையை உமிழ்ந்து கண்ட கண்ட இடங்களில் துப்புவோர் பிடிபட்டால் அவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் தா.தியாகமூர்த்தி தெரிவித்தார்.
சந்தை வளாகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கழிவு சேகரிப்புப் பெட்டிகளில் வெற்றிலையை உமிழ்ந்து துப்பமுடியும். கண்ட கண்ட இடங்களில் வெற்றிலையை உமிழ்ந்து துப்புவதால் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுகின்றன.
கடந்த மாதத்திலும் இவ்வாறு வெற்றிலையை உமிழ்ந்து துப்பிய ஒருவருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார். (த-17)

உ
ஓம் சுவாமியே சரணம் ஐயப்பா
தசாகாதி கிருஹயஜ்ஞ அழைப்பு
நிகழும் விளம்பி வருஷம் தை மாதம் 19ஆம் நாள் (02.02.2019) சனிக்கிழமை காலமான எங்கள் குடும்பத் தலைவர்
சிவஸ்ரீ தாணு.வாசுதேவக் குருக்கள்
அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.
தை மாதம் 28ஆம் நாள் (11.02.2019) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு தசாகம்
தை மாதம் 29ஆம் நாள் (12.02.2019) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு ஏகோதிஷ்டம், மாசிகம்
மாசி மாதம் முதலாம் நாள் (13.02.2019) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு சபிண்டீகரணம்
மாசி மாதம் 2ஆம்நாள் (14.02.2019) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு கிருஹயஜ்ஞம், மதியபோசனம்.
இந் நிகழ்வில் கலந்துகொண்டு ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.
குறிப்பு:- இந்த அழைப்பைத் தனிப்பிட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும்
"சபரீச வாசம்" முருகன் கோயிலடி, தாவடி மேற்கு
குடும்பத்தினர்.
077 845 3766


## காணாமல்...

ளால் கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது. 'மறைக்கப்படும் நீதியை வெளிப்படுத்தக் கோரி' எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம் முன்னால் மௌனமாக, வாய்களைக் கறுப்புத் துணியால் கட்டிக் கவனவீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டது. அதேவேளை வவுனியாவில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர்களை ஏமாற்றிய இரண்டாவது ஆண்டை முன்னிட்டு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

**யாழ்ப்பாணம்**

சமூக வலைத்தளங்களின் நண்பர்களின் ஏற்பாட்டில் ஒருங்கிணைக்கப்பட்ட இந்தப் போராட்டம் காலை 10.20 மணியளவில் ஆரம்பமாகியது. வாய்களை கறுப்புத் துணிகளினால் கட்டி, கைகளில் 'தந்தை இருக்கிறாரா? இல்லையா? என்பதை அறியாமல் தவிக்கும் பிள்ளைகளுக்கு விடையளிப்பது யார்?', 'ஐயா அரச தலைவர்!! சந்தேகப்படும் இடங்களை பார்வையிட அனுமதிப்பேன் என்று கூறியது நாடகமா?', 'தமிழ் மக்கள் பிரதிநிதிகளே எமது மக்களின் கண்ணீர் உங்களுக்கு வெறும் தண்ணீரா?', 'கடத்தல்காரர்களை தண்டிக்க தயங்கும் அரசே! குற்றவாளிகளை காப்பாற்றவா உனக்கு மக்கள் ஆணை வழங்கினார்கள்' போன்ற பதாகைகளைக் கைகளில் ஏந்தியும், தீபம் ஏற்றி வைத்தும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

40 நிமிடங்கள் தொடர்ந்த கவனவீர்ப்பு போராட்டத்தின் நிறைவில் ஆளுநர் அலுவலகம் நோக்கி பேரணியாக சென்று, அங்கு ஆளுநரின் பொது உறவுகள் அதிகாரியிடம் அரச தலைவருக்கான கோரிக்கைகள் அடங்கிய மூன்று மனுக்கள் போராட்ட ஏற்பாட்டாளர்கள் சார்பிலும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பிலும் கையளிக்கப்பட்டன.

இதேவேளை, ஆளுநரிடம் மனுக் கையளிக்கச் சென்றபோது, நால்வர் மட்டுமே உள்ளே செல்ல முடியும் என்று பொலிஸார் தெரிவித்ததால் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பொலிஸாருடன் முரண்பட்டனர்.

இதன்போது, உணர்ச்சிவசப்பட்ட தாய் ஒருவர் 'பொலிஸாருக்கு எதிராக விமர்சனத்தை முன்வைத்ததுடன் 'சிங்களவன் சதி செய்கிறான். எங்கட பிள்ளைகள் எங்கை என்று சொல்லு. மகிந்த கள்ளன் எங்க போட்டான். மைத்திரிக் கள்ளன் எங்க போட்டான். எங்கட பிள்ளைகளை விடு. தமிழீழ ஆட்சியில் நாம் துன்பம் இல்லாமல் இருந்தோம். எங்கட பிள்ளைகளை விடு நாங்கள் வாயைமூடிக்கொண்டு செல்வோம்' என்று கண்ணீர் மல்க அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ச ஆகியோருக்கு எதிராகக் கருத்துத் தெரிவித்தார்.

**வவுனியா**

வவுனியா வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு முன்பாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் நேற்று மதியம் 1 மணியளவில் அவர்கள் போராட்டத்தில் ஈடுபடும் கொட்டகைக்கு முன்பாக கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக தொடர் உணவு ஒறுப்புப் போராட்டத்தை முன்னெடுத்தபோது போராட்டக்காரர்களை அரசின் பிரதிநிதியாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் சந்தித்திருந்தார். அலரி மாளிகையில் தலைமை அமைச்சரைச் சந்தித்து அவர்கள் பிரச்சினைகள் குறித்துப் பேச ஏற்பாடு செய்தார். தலைமை அமைச்சருடன் சந்திப்பு இடம்பெற்றது. அந்தச் சந்திப்பு நடைபெற்று இரண்டு ஆண்டுகளை முன்னிட்டே கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, சிங்களத்தலைமைக்கும், பௌத்தத்துக்கும் அடிமைகளாகிய சுமந்திரனும், சம்பந்தனும் எங்கள் பேச்சின்போது அரசுடன் சேர்ந்து, தமிழர்களை ஏமாற்றிய இரண்டாவது வருடம் இன்று என்று எழுதப்பட்ட பதாகையைத் தாங்கியிருந்தனர். (ஒ.5,8,37,106,110)

## வடக்கில்...

மாநாடு நடத்தப்படவுள்ளதாக வட மாகாண ஆளுநர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் சிங்கள மொழியில் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவிலுள்ள சிறி போதிதக்ஷணாராமய விகாரையில் இந்த மாநாட்டை நடத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வடக்கு - கிழக்கு பிரதான பௌத்த பிக்குவும், விகாராதிபதியுமான சியம்பலாகஸ்வெள விமலசார தேரரின் முழுமையான அனுசரணையின் கீழும், வட மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனின் கருப் பொருளின் கீழும் பௌத்த மாநாடு நடத்தப்படவுள்ளது.

புத்த சாசன அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா, இதற்கான முழுமையான ஒத்துழைப்புகளை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் வட மாகாண ஆளுநர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

வட மாகாணத்தில் வாழ்கின்ற பௌத்த மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் மற்றும் சவால்களை அடையாளம் கண்டு கொள்வதே இந்த மாநாடு நடத்தப்படுவதன் முக்கிய நோக்கம் என்று வட மாகாண ஆளுநர் கூறியுள்ளார். அத்துடன், வட மாகாணத்தில் வாழ்கின்ற பௌத்த மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை, பௌத்த கோட்பாடுகள் மற்றும் தர்மத்தின் ஊடாக எவ்வாறு தீர்த்துக் கொள்வது என்பது குறித்து, பௌத்த பிக்குகளுடன் கலந்துரையாடல்களை நடத்தி, அதற்கான தீர்வை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பதாகவும் வட மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் குறிப்பிட்டுள்ளார். (ஒ.5)

## விபத்தில்...

மேசன் தொழிலாளி ஒருவர் சாவடைந்துள்ளார்.

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற இலகுரக வாகனம் புளியங்குளம் முத்துமாரி நகருக்கு அண்மையில் பயணித்துக் கொண்டிருந்த போது வீதியால் திரும்ப முற்பட்ட உந்துருளியுடன் மோதியதிலேயே விபத்து ஏற்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

உந்துருளியில் சென்ற நபர் தூக்கிவீசப்பட்டு படுகாயமடைந்திருந்தார். அவரை மீட்டு வவுனியா மருத்துவமனையில் சேர்ப்பித்தபோதும் அவர் உயிரிழந்துள்ளார். புளியங்குளம் முத்துமாரிநகரைச் சேர்ந்த கந்தசாமி சத்தியநாதன் (வயது48) என்ற குடும்பத் தலைவரே சாவடைந்துள்ளார். (ஒ.5,110)

## வீட்டாரைத்...

அச்சுறுத்தித் தாக்கி 17 பவுண் நகையைக் கொள்ளையர்கள் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. காயமடைந்த மனைவிக்கு 6 இழை தையல் போடப்பட்டுள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

தெல்லிப்பழை கட்டுவன் புலம் வீதி, கட்டுவன் பகுதியில் இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 1.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் தெரிவித்ததாவது: குளியலறை ஜன்னல் ஊடாக வீட்டுக்குள் 3 கொள்ளையர்கள் நுழைந்துள்ளனர். நித்திரையில் இருந்த வீட்டாரை எழுப்பி, அவர்களைக் கத்தி முனையில் அச்சுறுத்தி இருத்தியுள்ளனர். வீடு முழுவதும் சல்லடை போட்டுத் தேடியுள்ளனர். வீட்டிலிருந்த தாலிக் கொடி, காப்பு, சங்கிலி உள்பட 17 பவுணைக் கொள்ளையடித்துள்ளனர். 20 ஆயிரம் ரூபா பணத்தையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

இளவாலைப் பகுதியில் உள்ள பாடசாலையில் உப அதிபராகக் கடமையாற்றுபவருடைய வீட்டிலேயே இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. அவரது மனைவி தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் பணியாற்றுகின்றார். அவர் தலையில் தாக்கப்பட்டமையால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

குற்றத் தடயவியல் பொலிஸார் சம்பவ இடத்துக்கு மோப்ப நாய்களுடன் சென்று விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஒ.5,21,26)

## 17 கிலோகிராம்...

அவரிடமிருந்து 17 கிலோ 560 கிராம் கஞ்சாவையும் கைப்பற்றியுள்ளதாகப் யாழ்ப்பாண மாவட்டப் புலனாய்வுப் பொலிஸார் தெரிவித்தனர்.

கஞ்சா கடத்தல் தொடர்பில் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் வழங்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண பிரதேச பொலிஸ் அத்தியட்சகரின் தலைமையிலான பொலிஸ் குழுவினர் தேடுதல் நடவடிக்கையை முடுக்கிவிட்டனர். யாழ்ப்பாணம் செம்மணி வீதிப் பகுதியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய ஒருவரை பொலிஸார் விசாரணைக்கு உட்படுத்தினர். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் 17 கிலோ 560 கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். அவர் வடமராட்சி கிழக்கிலிருந்து விற்பனைக்காக கஞ்சாவைக் கொண்டு வந்துள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர். (ஒ.5,8,21,26,106)



## புதிய...

முன்னாள் அரச தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்ச தமிழ் ஊடகங்களின் ஆசிரியர்களை கடந்த செவ்வாய்க்கிழமை சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார். இதன்போது, இனப் பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளை கூட்டமைப்பே குழப்பியது என்றும், எதிர்காலத்தில் ஆட்சிக்கு வந்தால் தமிழ் மக்களுடன் பேச்சு நடத்தி தீர்வை வழங்குவேன் என்றும் கூறியிருந்தார்.

மகிந்தவின் இந்தக் கருத்துத் தொடர்பாக தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்டபோதே அவர் தெரிவித்ததாவது:

தமது ஆட்சியின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைப் பல தடவைகள் பேச்சு மேசைக்கு அழைத்த மகிந்த ராஜபக்ச, இறுதியில் அவர்களை ஏமாற்றினார். இதனால் அன்று தமிழ் மக்களும் ஏமாற்றப்பட்டார்கள். இவ்வாறு செய்த மகிந்த, எந்த முகத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் தமிழ் மக்களுடன் நேரடியாகப் பேசி தீர்வுத் திட்டத்தை முன்வைக்கப்போகின்றார்? ஆட்சியைப் பிடிப்பதற்காக மீண்டும் தமிழர்களை ஏமாற்றும் விதத்தில் கருத்துக்களை அவர் வெளியிடுகின்றார்.

ஆனால், 2015ஆம் ஆண்டு நடைபெற்ற அரச தலைவர் தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் நாடளாவிய ரீதியில் வாழும் தமிழ் மக்கள் மகிந்த ராஜபக்சவுக்கு தமது வாக்குகளினால் பதிலடி கொடுத்து விட்டார்கள். அவர்கள் மிகவும் தெளிவாக இருக்கின்றார்கள். புதிய அரசமைப்புக்கு தமிழ் மக்கள் மட்டுமல்ல மூவின மக்களுமே ஆதரவு வழங்கத் தயாராக இருக்கின்றார்கள். ஆனால், மகிந்த அணியினர் உள்ளிட்ட சில அரசியல்வாதிகள் தான் இனவாத ரீதியில் பரப்புரைகளை மேற்கொண்டு புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான பணிகளுக்கு முட்டுக்கட்டை போட்டு வருகின்றார்கள். எனினும், புதிய அரசமைப்பு உருவாக்கத்துக் கான வழிநடத்தல் குழு விரைவில் கூடும். அதன்போது அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானம் எடுப்போம் - என்றார். (ஒ.5,22)

## அரசமைப்புத்...

பெறுவார். அவர் வெற்றிபெற்ற பின்னர் அரசமைப்பில் நான் திருத்தத்தை மேற்கொள்வேன். அதனூடாகவே தமிழ் மக்களுக்கான தீர்வுத் திட்டத்தை முன்வைப்பேன். நாட்டைத் துண்டாக்கும் புதிய அரசமைப்புக்கு இடமளிக்கமாட்டேன். இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் முன்னாள் அரச தலைவருமான மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள மகிந்த ராஜபக்ச, பெங்களூரில் 'த ஹிந்து' பத்திரிகையால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாநாட்டில் நேற்றுப் பங்கேற்று உரையாற்றினார். இதன்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகள் இரண்டு முறை பாரதூரமான முறையில் வீழ்ச்சியடைந்தன. 1980ஆம் ஆண்டிலும், 2014ஆம் ஆண்டிலும் இரு நாடுகளுக்கு இடையிலான இரு தரப்பு உறவுகளில் வீழ்ச்சி ஏற்பட்டன. 2014ஆம் ஆண்டு இந்தியாவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் பின்னர் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. ஆளும் கட்சியாக இருந்த கட்சி இலங்கை உடனான உறவுகளை மதிக்கும்போது, ஆட்சிக்கு வரும் கட்சியும் அதனைச் செய்ய வேண்டும்.

இந்தியாவும் இலங்கையும் அயல் நாடுகள் என்பதுடன் ஒரே குடும்பம். குடும்பப் பயணம் எப்போதும் சுமுகமாக இருப்பதில்லை. செயற்பாட்டு ரீதியான உரையாடல்கள் மூலம் தவறான புரிதல்களைத் தவிர்த்துக்கொள்ள முடியும்.

இலங்கையும் இந்தியாவும் சுயநலத்துக்காகச் செயற்பட்ட சிலரால் அச்சுறுத்தல் மற்றும் பயங்கரவாதத்தை எதிர்நோக்கியிருந்தது. அந்த வகையில் 1980ஆம் ஆண்டு காலப்பகுதியில் விடுதலைப்புலிகள் இந்தியாவில் பாதுகாப்புப் பெற்றதுடன், தலைமை அமைச்சராக இருந்த ராஜீவ் காந்தியின் உயிரையும் இறுதியில் பறித்துள்ளனர். இந்தக் காலகட்டத்திலேயே இலங்கை இந்திய உறவில் பிளவு ஏற்பட்டது. இதன்போது இழைக்கப்பட்ட தவறுகளில் இருந்து பாடம் கற்க வேண்டும்.

இலங்கையில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சி தவறான பாதையில் பயணிக்கின்றது. இந்த ஆட்சியைக் கவிழ்த்தே தீருவேன்.

இலங்கையின் தற்போதைய அரசமைப்புக்கமைவாக எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் நான் போட்டியிட முடியாது. அதனால் சிறந்த வேட்பாளர் ஒருவரைப் போட்டியிட வைப்பேன். அந்த வேட்பாளர் வெற்றி பெறுவார். அவர் வெற்றிபெற்ற பின்னர் அரசமைப்பில் நான் திருத்தத்தை மேற்கொள்வேன். அதனூடாகவே தமிழ் மக்களுக்கான தீர்வுத் திட்டத்தை முன்வைப்பேன். நாட்டைத் துண்டாக்கும் புதிய அரசமைப்புக்கு இடமளிக்கமாட்டேன் - என்றார். (ஒ.5,22)

## கஞ்சாவுடன்...

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த பேருந்தை நொச்சிமோட்டைப் பாலத்துக்கு அருகில் பொலிஸார் வழிமறித்து சோதனை நடத்தினர். இதன்போதே 200 கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஒ.5,110)

## பாலியல்...

பெறும் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களை விசாரணை செய்வதற்கு குறைகேள் விசாரணைக் குழுவை அமைக்க வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தீர்மானித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தின் கல்வித்துறையில் பணிபுரியும் பெண்கள் பாலியல் ரீதியில் துன்புறுத்தப்படுவது தொடர்பிலும் பால்நிலை சமத்துவம் இல்லாமை தொடர்பிலும் ஆளுநரின் கவனத்துக்கு அதிகளவான முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டு வருவதையடுத்து இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு அவற்றுக்கு தீர்வுகளை வழங்குவதற்கு குறைகேள் விசாரணைக் குழுவை நிறுவ ஆளுநர் தீர்மானித்துள்ளார் என்று ஆளுநர் அலுவலகம் செய்தி வெளியிட்டுள்ளது.

மூன்று பேரடங்கிய இந்த விசாரணைக் குழுவில் இரு பெண்கள் உள்ளடக்கப்படவுள்ளதுடன் அதில் ஒருவர் முறைப்பாட்டாளர்களால் முன்மொழியப்பட்டவராகவும் இருப்பார்.

இதேவேளை வடக்கு மாகாணத்தின் கல்வித்துறையை மேம்படுத்தும் நோக்கில் வடக்கு மாகாண கல்வியமைச்சுக்கு தமது ஆலோசனைகளையும் சரியான வழிகாட்டுதல்களையும் வழங்குவதற்கு 15 பேரடங்கிய மூத்த கல்வியலாளர் சபையை நிறுவுவதற்கும் ஆளுநர் தீர்மானித்துள்ளார். இந்தச் சபைக்கான உறுப்பினர்களை நியமிப்பதற்கு ஆளுநர் நடவடிக்கை எடுத்துள்ளார் என்று அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ.5,21)

## தமிழ்...

அரசியல்வாதிகளைத் திருப்திப்படுத்துவதற்காக அல்ல. இலங்கையில் தமிழ் மக்களைத் திருப்திப்படுத்த முடியும். ஆனால், தமிழ் அரசியல்வாதிகளைத் திருப்திப்படுத்த முடியாது. அதுதான் எனக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினை. இவ்வாறு மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ள மகிந்த ராஜபக்ச, பெங்களூரில் 'த ஹிந்து' பத்திரிகையால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாநாட்டில் நேற்றுப் பங்கேற்று உரையாற்றினார். அவரது உரை முடிந்த பின்னர், தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வு தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

**போராட்டம்**

பெங்களூரில் நடைபெற்ற கருத்தரங்குக்கு இனப்படுகொலையாளன் மகிந்த ராஜபக்சவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதைக் கண்டித்து மே 17 இயக்கம் சார்பில் நேற்றுக் காலை ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

# கூட்டு அரசு உருவாவதற்கு கூட்டமைப்பிலும் எதிர்ப்பு!

## டலஸ் எம்.பி. கூறுகின்றார்



கொழும்பு, பெப். 10

**கூட்டு அரசை அமைப்பதற்கான தீர்மானம் மீதான வாக்கெடுப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்துக் கொள்ளாமல் இருக்கவே தீர்மானித்துள்ளது. எனினும் கூட்டமைப்பின் சில உறுப்பினர்கள் இந்தத் தீர்மானத்துக்குத் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர். கூட்டமைப்பினர் இன்றும் ஒரு தரப்பினரது கட்டளைகளுக்கு இணங்கவே அரசியல் தீர்மானங்களை முன்னெடுக்கின்றனர்.**

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டு அரசு அமைக்கப்படும்பொழுது எந்தத் தன்மையிலான முறைகளைச் செயற்படுத்த வேண்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டு கூட்டு அரசு ஒன்று முறையாகவே அமைக்கப்பட்டது. இந்த விடயத்தில் நாடாளுமன்றத்தில் எந்தவிதமான எதிர்ப்புக்களும் இடம்பெறவில்லை. குற்றஞ்சாட்டும் அளவுக்குக் குறைபாடுகள் ஏதும் காணப்படவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி முறையற்ற விதத்தில் செயற்படுகின்றது. கூட்டு அரசை உருவாக்கும்பொழுது முறையான அம்சங்களைப் பின்பற்றவில்லை. தமது அரசியல் தேவைகளையும், கட்சியின் முரண்பாடுகளுக்கானதீர்மானங்களையும் மாத்திரமே மறைமுகமாகச் செயற்படுத்தியுள்ளது. இவர்களது செயற்பாடுகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைத் தவிர அனைத்துக் கட்சிகளும் எதிர்ப்பையே வெளிப்படுத்தியுள்ளனர்.

தமிழ் தேசிய கூட்டமைப்பினர் இன்றும் மேற்குலகத்தவர்களின் கட்டளைகளுக்கு இணங்கவே அரசியலில் செல்வாக்குச் செலுத்தி வருகின்றனர். இவர்களின் தரப்பிலும் ஒரு சிலர் தேசிய அரசுக்கு எதிராகச் செயற்படத் தீர்மானித்துள்ளனர். அது வரவேற்கத்தக்கது.

அபுதாபியில் கைதுசெய்யப்பட்டுள்ள பாதாளக் குழுத் தலைவன் உள்ளிட்டவர்கள் தொடர்பில் இன்று மாறுபட்ட, பொய்யான தகவல்களே மக்கள் மத்தியிலும் பேசப்படுகின்றன. கம்புறுப்பிடிய பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது - என்றார். (த-31)

# சிறுவனின் உடல் கிணற்றில் மீட்பு!

வவுனியா, பெப். 10

வவுனியாவில் ஆறு வயதுச் சிறுவன் ஒருவன் கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளான்.

இந்தச் சம்பவம் வவுனியா, கற்குளத்தில் நடந்துள்ளது. சிவானந்தன் சர்வின் (வயது-6) என்ற சிறுவனே உயிரிழந்துள்ளான்.

உறவினரின் அந்தியேட்டிக் கிரியை ஒன்றுக்குச் சிறுவன் பெற்றோருடன் சென்றுள்ளான். நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் சிறுவன் காணாது போயுள்ளான். அதையடுத்து அனைவரும் சிறுவனைத் தேடியுள்ளனர். ஆனால் சிறுவனைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

நேற்றுக் காலையும் சிறுவனைத் தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. வீட்டிலிருந்து சிறிது தூரத்தில் உள்ள பொதுக் கிணற்றில் தேடியபோது சிறுவன் சடலமாகக் கண்டுபிடிக்கப்பட்டான் என்று தெரிவிக்கப்பட்டது.

சடலம் மீட்கப்பட்டு வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக சிதம்பரபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். மூன்று மாதங்களுக்கு முன்னர் தொடருந்தில் மோதி உயிரிழந்த பெண்ணின் 90ஆம் நாள் அந்தியேட்டி நிகழ்வில் கலந்துகொள்வதற்காகவே மணிபுரத்தில் இருந்து கற்குளத்துக்குச் சிறுவனும், பெற்றோரும் சென்றிருந்தனர் என்று கூறப்படுகின்றது. (த-110)

# மருத்துவமனைக் கட்டடங்கள் அமைக்க சீனா 60 கோடி ரூபா!

கொழும்பு, பெப். 10

நாடு முழுவதுமுள்ள 13 மருத்துவமனைகளுக்கு சீனாவின் 60 கோடி நிதி உதவியில் புதிய கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளன. அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளது. சில மருத்துவமனைகளுக்கு உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கென்று மேலும் 60 கோடி ரூபா நிதி கிடைக்கவுள்ளது.

இவ்வாறு சுகாதார இராஜாங்க அமைச்சர் பைஷல் காஷிம் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு சுகாதார அமைச்சில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சீன அரசின் 60 கோடி நிதி உதவியினூடாக நாடு முழுவதுமுள்ள 13 மருத்துவமனைகளுக்கு புதிய கட்டடங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. இந்த வேலைத் திட்டத்துக்கு அமைச்சரவையின் அங்கீகாரமும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டடங்களுக்குத் தேவையான மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கும் 60 கோடி நிதி கிடைக்கவுள்ளது.

மகியங்கனை, மீறிகம, அளுத்கம, மெதிரிகிரிய, கல்பிட்டி, ஏறாவூர், சம்பாந்துறை, பொத்துவில் உள்ளிட்ட 13 இடங்களிலுள்ள மருத்துவமனைகளுக்கே இந்தக் கட்டடங்கள் வழங்கப்படவுள்ளன. இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று தொடக்கம் எதிர்வரும் 15 திகதி வரை நடைபெறவுள்ளது.

மருத்துவ உபகரணங்களுக்கென்று கிடைக்கும் நிதியில் இரத்தினபுரி மற்றும் பதுளை மாவட்ட வைத்தியசாலைகளுக்கு எம்.ஆர்.ஐ இயந்திரங்கள் இரண்டும் பெற்றுக்கொடுக்கப்படவுள்ளன. கம்பஹா, மன்னார், கல்முனை மற்றும் மாத்தளைப் பகுதிகளைச் சேர்ந்த மருத்துவமனைகளுக்கு நான்கு சி.ரி இயந்திரங்கள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

அதேபோன்று சுகாதார இலத்திரனியல் அட்டைகளை பெற்றுக்கொடுப்பதற்கான பணிகளும் இடம்பெறுகின்றன. இந்த இலத்திரனியல் அட்டைகளினூடாக ஒவ்வொரு அரசமருத்துவமனைகளுக்கும் இடையிலானதொடர்பை அதிகரிக்கக் கூடியதாக அமைவதுடன் நோயாளர்கள் தொடர்பான விவரங்களைமுழுமையாகப் பெற்றுக்கொள்ளவும் முடியும். ஒவ்வொரு மருத்துவமனைக்கும் இடையிலான தொடர்புகளை வளர்ப்பதனூடாக மருந்துகளுக்கான வீண் செலவுகளையும் தவிர்த்துக் கொள்ள முடியும் - என்றார். (த-31)

# வாகன இறக்குமதித் தடை 3 மாதங்களுக்குள் நீங்கும்!

## நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 10

இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியைக் கட்டுப்படுத்தும் நோக்கில் தீர்வையற்ற வாகன அனுமதிப் பத்திரம் ஊடான வாகன இறக்குமதி இடைநிறுத்தப்பட்ட நிலையில் அதனை மூன்று மாதங்களுக்குள் தளர்த்த நடவடிக்கை எடுக்கப்படும். அதன்மூலம் அரச துறை அலுவலகர்கள் தமது அனுமதிப்பத்திரத்தின் ஊடாக வாகனங்களை இறக்குமதி செய்ய முடியும்.

இவ்வாறு நிதி இராஜாங்க அமைச்சர் எரான் விக்ரமரத்ன தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:

அரச துறையில் பணியாற்றும் அலுவலர்களுக்கான இறக்குமதித் தீர்வையற்ற வாகன அனுமதிப் பத்திரம் நீக்கம் செய்யப்படவில்லை. அதனைப் பயன்படுத்தி இறக்குமதி செய்ய இடைநிறுத்திவைக்கப்பட்டுள்ளது. டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதியை தளம்பலின்றிப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செயற்பாட்டுரீதியான நடவடிக்கையே இறக்குமதித் தீர்வையற்ற வாகனஇறக்குமதியை இடைநிறுத்தக்காரணம். எனினும், எதிர்வரும் மூன்று மாதங்களுக்குள் தீர்வையற்ற வாகன அனுமதிப் பத்திரத்தைப் பெறுவதன் ஊடாக வாகனங்களை இறக்குமதி செய்ய முடியும் - என்றார்.

இதேவேளை, அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் வீழ்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்காக கடந்த செப்ரெம்பர் 30ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் செயற்பாடு ஒரு வருட காலத்துக்கும் அரச ஊழியர்களுக்கான வாகன உரிமப்பத்திரம் வழங்கும் செயற்பாடு 6 மாதங்களுக்கும் இடைநிறுத்தப்பட்டிருந்தது. (த)

# இராஜதந்திரக் கடவுச்சீட்டு தொடர்பில் விசாரியுங்கள்

## அமைச்சர் மங்கள கோரிக்கை



கொழும்பு, பெப். 10

டுபாயில் பிரபல பாதாள உலகக் குழுத் தலைவன் மாகந்துர மதூஷ் உள்பட 25 பேர் கைது செய்யப்பட்டவர்களில், இராஜதந்திரக் கடவுச்சீட்டு வைத்திருந்த நபர் யார் என்பது குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று நிதி அமைச்சர் மங்கள சமரவீர கோரியுள்ளார்.

நிதி அமைச்சர் மங்கள சமரவீர பொலிஸ்மா அதிபருக்கு எழுதியுள்ள கடிதத்தில் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார். மாகந்துர மதூஷ் கைது செய்யப்பட்ட சமயத்தில் இராஜதந்திர கடவுச்சீட்டுடன் கைது செய்யப்பட்ட நபர் தனது ஊடக இணைப்புச் செயலர் என்று பொய்ப் பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

> “அவ்வாறு தான் யாருக்கும் இராஜதந்திரக் கடவுச்சீட்டைப் பெற்றுக் கொடுக்கவில்லை என்று அவர் கூறியுள்ளார்.

இராஜதந்திரக் கடவுச்சீட்டுடன் கைது செய்யப்பட்ட நபருக்கும் தனக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று இரண்டு ஊடகவியலாளர் சந்திப்புகளின் போதும் தான் தெரிவித்திருந்த போதும் தனக்கு எதிரான பரப்புரைகள் இடம்பெறுகின்றன என்று அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். அவ்வாறு தான் யாருக்கும் இராஜதந்திரக் கடவுச்சீட்டைப் பெற்றுக் கொடுக்கவில்லை என்று அவர் கூறியுள்ளார்.

இந்தப் பொய்ப் பரப்புரை காரணமாக தனது 30 வருட காலத்துக்கும் மேற்பட்ட அரசியல் வாழ்க்கைக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், தனது நற்பெயருக்குக் களங்கம் ஏற்பட்டுள்ளது என்று அமைச்சர் மங்கள சமரவீர தனது க்டிதத்தில் கூறியுள்ளார். (த)

# போதைக் கடத்தலைத் தடுக்க படகுகளுக்கு ஜி.பி.எஸ். வசதி

கொழும்பு, பெப். 10

மீனவர் என்ற போர்வையில் போதைப் பொருள் கடத்தல், சட்டவிரோத கொடுக்கல் வாங்கல், பன்னாடுகளுக்குச் செல்வது ஆகியவற்றைத் தடுப்பதற்காக அடையாள அட்டை மற்றும் அனைத்து மீன்பிடி வள்ளங்களுக்கும் ஜி.பி.எஸ். தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் பி.ஹரிசன் தெரிவித்துள்ளார்.

கடற்றொழில் திணைக்கள பிரச்சினைகள் தொடர்பில் அதிகாரிகளுடன் நடைபெற்ற பேச்சின்போது இதனை அமைச்சர் தெரிவித்தார். கடற்றொழிலாளர்கள் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

துறைமுகங்களிலிருந்து செல்லும் கடற்றொழிலாளர்களின் கைவிரல் இயந்திரத்தில் தமது ஆள் அடையாளத்தை உறுதி செய்தபின்னர் கடலுக்குச் செல்ல வேண்டும் என்றும் அவசர அறிவிப்பு காலநிலை இடர் தொடர்பாக அறிவிப்பதற்கும் குறுந் தகவல்களைப் பரிமாறுவதற்கும் 2 மாதங்கள் காலப்பகுதிக்குள் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அதிகாரிகள் இதன்போது தெரிவித்தனர்.

இதற்கான பரிந்துரை 2019ஆம் ஆண்டு வரவு-செலவுத்திட்ட முன்மொழிவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடற்றொழிலாளர்களை வலுவூட்டும் நோக்கில் கடற்றொழிலாளர்களுக்கு வீடுகளை அமைப்பதற்காக வழங்கப்படும் கடன் உதவியின் வரையறையை அதிகரிப்பதற்கும் கடற்றொழிலுக்கான உபகரணங்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கும் அமைச்சரவை மூலமாக எதிர்பார்ப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் திலிப் வெத ஆராய்ச்சி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (த)

# ஆசிரியர்களின் தண்டனை மாணவர்களைச் செதுக்கும்

## மருத்துவர் சுதர்சன் சுட்டிக்காட்டு

**முல்லைத்தீவு, பெப். 10**

**மாணவர்கள் ஒழுக்க சீலர்களாகவும் சிறந்த கல்விமான்களாகவும் வரவேண்டும் என்ற நோக்கத்துக்காகவே ஆசிரியர்கள் மாணவர்களைத் தண்டிக்கின்றனர். தண்டனை மூலமாக மாணவர்களைச் செதுக்குகின்றார்கள். அதைப் புரிந்துகொள்ளாத இன்றைய சமுதாயம், ஆசிரியர்கள் தண்டித்தால் சிறுவர் பாதுகாப்புப் பிரிவுக்கு அறிவிக்கிறது. இது பிள்ளைகளில் அக்கறையுள்ளவர்கள் செய்யும் செயலாகக் கருத முடியாதுள்ளது.**

இவ்வாறு மருத்துவர் கே.சுதர்சன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு முள்ளியவளை தமிழ் வித்தியாலய மெய்வன்மைப் போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

**திருத்துவதில் சிரமம்**

இன்று சிறுவர்களைக் கண்டிக்கக் கூடாது, தண்டிக்கக்கூடாது. அது தண்டனைக்குரிய குற்றம் என்பதும் ஒரு பூதாகரமான பிரச்சினையே. அதானால் ஆசிரியர்கள் பிள்ளைகளுடன் கண்டிப்பாக நடக்க முடியாது பாடசாலைகளில் சிரமப்படுகின்றனர் என்பதில் சந்தேகமே இல்லை.

முன்னைய காலங்களிலும் ஆசிரியர்கள் மாணவர்களைக் கண்டித்தனர், தண்டித்தனர். அதனால் பாடசாலைகள் விரும்பத்தகாதவையாக மாறிவிடவில்லை. அந்தக் கண்டிப்பில் அரவணைப்பும் உள்ளது. அவர்கள் கோபப்படுகின்றனர் என்றால் அது எம்மை வளர்த்து விட வேண்டும் என்பதற்காகவே என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

**முழு மனது இல்லை**

நான் மருத்துவர் என்ற வகையில் மருத்துவமனைக்கு வரும் சிறுவர்கள், பெற்றோர்களுடன் உரையாடும் சந்தர்ப்பங்கள் கிடைக்கும். அப்போது சிறார்களின் கல்வி நிலை, ஒழுக்கம் என்பவை தொடர்பாகவும் கலந்துரையாடுவதுண்டு. அதில், இப்போது ஆசிரியர்கள் பயந்த நிலையிலேயே மாணவர்களுக்குக் கற்பித்து வருகின்றனர் என்ற விடயத்தை உணர்ந்து கொண்டுள்ளேன்.

அதற்கு முழுக் காரணம் இன்றைய சமுதாயமே. எதிலும் ஆசிரியர்களைக் குறைகாணும் மனநிலையை மாற்றிக் கொள்ள வேண்டும். எமது சமூகத்தில் சிறந்த ஆரோக்கியமான குழந்தைகள் வளர வேண்டும். அவர்கள் எதிர்காலத்தில் சிறந்த கல்விமான்களாக வர வேண்டும். அதைப் பெற்றோர்களும் உணர வேண்டும் என்று மருத்துவர் சுதர்சன் மேலும் தெரிவித்தார். (த-ரி3)

# சட்டவிரோத மதுபானத்துக்கு பொலிஸார் பொறுப்புக் கூறும் புதிய சுற்றறிக்கை வரவுள்ளது

## கூறுகிறார் மைத்திரிபால



கொழும்பு, பெப். 10

தமது அதிகார எல்லைக்குள் சட்டவிரோத மதுபானங்கள் இருக்குமாயின் அந்தப் பிரதேசத்துக்குப் பொறுப்பான பொலிஸ் பொறுப்பதிகாரியும் மூத்த பொலிஸ் அதிகாரியும் முழுமையாக பொறுப்பு கூற வேண்டும் என்ற புதிய சுற்றறிக்கை அடுத்தவாரம் வெளியிடப்பட உள்ளதாக அரச தலைவர் மைத்திரிபால தெரிவித்தார்.

'எழுச்சிபெறும் பொலன்னறுவை' மாவட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு உதவிகள் வழங்குவதற்காக நேற்றுப் பிற்பகல் பொலன்னறுவை புதிய நகர நீர்ப்பாசன விளையாட்டரங்கில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

கிராமிய வறுமையை அதிகரிப்பதற்கு முக்கிய காரணமாகவுள்ள சட்டவிரோத மதுபானத்தையும் முழுமையாக ஒழிப்பதற்குத் தேவையான நிகழ்ச்சித்திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும். குடும்ப வாழ்க்கையையும் சமூகத்தையும் அதேபோன்று நாட்டின் பிள்ளைகளின் எதிர்காலத்தையும் இருளில் தள்ளிவிடும் சட்டவிரோத மதுபானத்துக்கு எதிரான நிகழ்ச்சித்திட்டத்தையும் நாட்டினதும் பிள்ளைகளினதும் எதிர்காலத்துக்காக எனது பதவிக்காலத்தில் நடைமுறைப்படுத்துவேன் என்றார். (ஒ.5)

# மெய்வன்மைப் போட்டிகள்



முல்லைத்தீவு, பெப்.10

முல்லைத்தீவு யோகபுரம் மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் பாடசாலை மைதானத்தில் அண்மையில் அதிபர் கு.ஜெகதீஸ்வரன் தலைமையில்

இடம்பெற்றன. நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன், சிறப்பு விருந்தினர்களாக துணுக்காய் பிரதேசசபை உப தவிசாளர் ந.சிவகுமார், துணுக்காய் கோட்டக்கல்வி அதிகாரி சி.செல்வரட்ணம் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஜ-74)

# அரச தலைவர் தேர்தலுக்கு முன்னர் மாகாணசபைத் தேர்தல் நடந்தேதீரும்

## அடித்துக் கூறுகிறார் மைத்திரிபால

கொழும்பு, பெப். 10

அரச தலைவர் தேர்தலுக்கு முன்னர் மாகாண சபைத் தேர்தல் நடைபெறுவது உறுதியானதாகும். இது தொடர்பில் சட்ட ரீதியாக எழுந்துள்ள பிரச்சினைகள் தீர்க்கப்படும். இவ்வாறு அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். பொலன்னறுவையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: அரச தலைவர் தேர்தல் உரிய காலத்தில் இடம்பெறும் என்றாலும் சிலர் கூறுவது போன்று அதனை பலவந்தமாக நடாத்துவதற்கு எவருக்கும் முடியாது. நாட்டின் எதிர்கால நலனுக்காக பல்வேறு தீர்மானங்களை மேற்கொள்ள கடந்த நான்கு வருட காலப்பகுதியில் அரச தலைவர் என்ற வகையில் நடவடிக்கை எடுத்தேன். இன்று பெரிய சமூக சவாலாக மாறியிருக்கும் போதைப்பொருள் கடத்தல் மற்றும் குற்றங்களை தடுப்பதற்காக முன்னெடுக்கப்படும் விரிவான நிகழ்ச்சித் திட்டத்துக்கு முக்கியத்துவம் வழங்கி வருகின்றேன். இதற்காகப் பொலிஸ் திணைக்களத்தை வரலாற்றில் முன் எப்போதும் இல்லாத வகையில் பலப்படுத்தி உள்ளேன். அதில் மேலும் சில முக்கிய மாற்றங்களை அடுத்த சில மாதங்களில் மேற்கொள்வேன் என்றார். (ஒ.5)





வவுனியா,பெப். 10

வவுனியா ஒலுமடு தமிழ் மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் பாடசாலை மைதானத்தில் அதிபர் கு.விமலேந்திரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றன. நிகழ்வில் முதன்மை விருந்தினராக கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் கலந்து கொண்டார். (ஐ)





வவுனியா. பெப்.10

வவுனியா பட்டிக்குடியிருப்பு அ.த.க.பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் பாடசாலை மைதானத்தில் கடந்த சனிக்கிழமை அதிபர் க.பாஸ்கரன் தலைமையில் இடம்பெற்றன. (ஐ)



*கிளிநொச்சி முழங்காவில் தேசிய பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் பாடசாலை மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றன. அதில் நடைபெற்ற விநோத உடைப் போட்டியில் புகைப்பதால் ஏற்படும் பாதிப்புத் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாணவன் கலந்துகொண்டான். அது மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றுள்ளது.* (ஜ-212)

# குண்டுச் சன்னங்களுடன் வடக்கில் இன்றும் மக்கள்

## அகற்றினால் உயிராபத்துக்கள் ஏற்படும் என்ற அச்சத்தில் அதைச் சுமக்கும் அவலம்

**யாழ்ப்பாணம், பெப்.10**

**உள்நாட்டுப் போர் முடிந்து 10 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் துப்பாக்கிச் சன்னங்களையும், குண்டுச் சன்னங்களையும் உடலில் தாங்கியவாறு வடக்கில் இன்றும் பலர் வாழ்கின்றனர். அவர்கள் அதனால் பல்வேறு துன்பங்களையும் அனுபவித்து வருகின்றனர்.**



நன்றி - முகநூல்

**மாறாத வடு**

உள்நாட்டுப் போர் 2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் முடிவுறுத்தப்பட்டது. போரை முடிவுறுத்துவதற்காக இலங்கை இராணுவம் நடத்திய தாக்குதலில் பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர், காயமுற்றனர். அவற்றின் வடுக்கள் தற்போதும் அந்த மக்களின் உடல்களில் உள்ளன. இழந்த அவயங்களாக, தழும்புகளாக அவற்றை இன்றும் தமிழ் மக்கள் தாங்கியுள்ளனர்.

**இரும்புச் சன்னங்கள்**

இவர்களை விடவும் இன்னும் ஒரு தொகுதி மக்கள் தமது உடல்களில் வெடிபொருள்களின் இரும்புச் சன்னங்களைத் தாங்கியவாறு தினமும் சொல்லொனாத் துயரங்களைத் தங்கியவாறு வாழ்க்கையை நகர்த்தி வருகின்றனர். துப்பாக்கிச் சன்னங்களும், வெடிகுண்டுச் சன்னங்களும் அவர்களின் உடலைக் கிழித்து உள்நுழைந்து புதைந்து போயுள்ளன. இவ்வாறு பாதிப்புக்குள்ளான ஆயிரக் கணக்கானோர் அதிலிருந்து மீளும் வழி தெரியாது தடுமாறி வருகின்றனர்.

தாக்குதலில் குழந்தைகளும் தப்பியிருக்கவில்லை. அவர்களின் பிஞ்சு உடலிலும் இரும்புச் சன்னங்கள் தங்கியிருந்தன. அந்தக் குழந்தைகள் தற்போது வளர்ந்து பெரியவர்களாகியுள்ள நிலையில் அவர்கள் இரும்புச் சன்னங்களால் பெரும் இன்னல்களை எதிர்கொண்டுள்ளனர்.

**வலி தாங்கும் வாழ்வு**

யாழ்ப்பாணம், நாவாலியில் உள்ள சிறுமி ஒருவரும் இந்தப் பாதிப்புக்குள்ளாகியுள்ளார். போர் இடம்பெற்றபோது குழந்தைப் பருவத்தில் இருந்த அந்தச் சிறுமியின் கையை சன்னம் ஒன்று பதம் பார்த்திருந்தது. அந்தச் சன்னம் கைக்குள்ளேயே தங்கிவிட்டது.

அந்தச் சிறுமி தற்போது தனது கையைக் கொண்டு காரியங்களை ஆற்றிக் கொள்ள முடியாத நிலையில் உள்ளாள். எழுதுவதிலும் சிரமத்தைத் எதிர்கொண்டுள்ளாள். கைக்குள் தங்கியுள்ள இரும்புச் சன்னம் அவளது எதிர்காலத்தையும் கேள்விக் குறியாக்கியுள்ளது.

கிளிநொச்சியைச் சேர்ந்த பெண் ஒருவரும் தனது வலியைப் பகிர்ந்து கொண்டுள்ளார். காலில் துளைத்த துப்பாக்கிச் சன்னம் உள்ளேயே தங்கி விட்டது. அவ்வப்போது பெரும் வலி ஏற்படும். வலியுடன் வாழப் பழகிக் கொண்டேன் என்று வேதனையுடன் கூறுகின்றார். இவ்வாறு பலர் வலிகளைச் சகித்து வாழ்வை நகர்த்திக் கொண்டுள்ளனர்.

**அச்சமே காரணம்**

உடலில் தங்கியுள்ள இரும்புச் சன்னங்களை நீக்குவதில் உள்ள அச்சமே அவர்கள் வலியைச் சகித்து வாழ நிர்ப்பந்திக்கின்றது. உடலில் தங்கியுள்ள இரும்புச் சன்னத்தை அகற்ற முற்படும்போது அதன் பக்கவிளைவாக உடற்பாகங்கள் இயங்காது போகும் ஆபத்து இருப்பதை அடுத்தே அவர்கள் அந்த இரும்புச் சன்னங்களை அகற்றத் தயங்குகின்றனர்.

"போரால் பாதிக்கப்பட்டு உடலில் சன்னங்களுடன் வாழ்ப்பவர்கள் மருத்துவமனைகளுக்குச் சென்று அதற்கான சிகிச்சைகளை மேற்கொள்ளுங்கள் என்று சில ஆண்டுகளுக்கு முன்னர் கோரியிருந்தோம். பலர் சிகிச்சை பெற்றனர். ஆனால் அவர்களின் விவரங்கள் தற்போது எம்மிடம் இல்லை. அதன் பின்னர் எவரும் அவ்வாறான சிகிச்சைக்கு வருவதில்லை." என்று வடக்கு மாகாணச் சுகாதாரப் பணிப்பாளர் மருத்துவர் கேதீஸ்வரன் "உதயனுக்கு" தெரிவித்தார்.

**என்னதான் தீர்வு**

நித்தமும் வலி தாங்கி வாழ்ந்து கொண்டிருக்கும் இவர்களுக்கு என்னதான் தீர்வு?. இது தொடர்பாக அவர்களுக்கு உரிய மருத்துவ ஆலோசனைகளை வழங்கி அவற்றை அகற்றுவது தொடர்பாக அரசு சிறப்பு வேலைத் திட்டம் ஒன்றை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகின்றது. இவ்வாறான பாதிப்புக்குள்ளானவர்களின் விவரங்களைத் திரட்ட வேண்டியதும் அவசியமாகும். இந்த விடயத்தில் அரசும், மருத்துவத் துறையினரும் இணைந்து காத்திரமான நடவடிக்கை ஒன்றை எடுக்க வேண்டும் என்பது பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. (எ-21)

## விபத்துக்களில் இளைஞர்கள் காயம்

சாவகச்சேரி, பெப். 10

வெவ்வேறு இடங்களில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இருவேறு சாலை விபத்துக்களில் இரு இளைஞர்கள் காயமடைந்தனர். இவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

சாவகச்சேரி கல்வயல் பகுதியில் சாலையில் சென்ற உந்துருளி சாலையின் குறுக்கே ஓடிய நாயுடன் மோதி தூக்கி வீசப்பட்டு ஒருவர் காயமடைந்தார். அவரே மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மற்றவர் கொடிகாமம் வெள்ளாம்போக்கட்டியில் இடம்பெற்ற சாலை விபத்தில் காயமடைந்தார். (ம-9)

## உருவச்சிலை திறப்பு விழா

அச்சுவேலி, பெப். 10

பிரபல கூட்டுறவாளரும், சமூக சேவகருமாகிய அமரர் திருமதி வேதவல்லி கந்தையாவின் உருவச்சிலை திறப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நீர்வேலி கந்தசாமி கோவிலடியில் நடைபெறவுள்ளது.

நீர்வேலி தெற்கு ஸ்ரீமுருகன் மாதர் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் திருமதி ருக்மணி ஆனந்தவேலின் தலைமையில் நடைபெறும் விழாவில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.வாகீசன் கலந்து கொண்டு சிலையைத் திறந்து வைக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுக் கலாசாலையின் அதிபரும் மாவட்ட கூட்டுறவுச் சபையின் செயலருமான திருமதி வேதவல்லி செல்வரத்தினம் கலந்து கொள்ளவுள்ளார். (ம-11)

## கீரிமலையில் பார்த்தீனிய ஒழிப்பு இன்று

யாழ்ப்பாணம், பெப். 10

கீரிமலை கருகம்பனை இந்து இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் பார்த்தீனிய ஒழிப்பு செயற்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

நகுலேஸ்வரம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலேயே இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-114)

## யாழ்ப்பாணத்தில் டெங்கு குறைவு

யாழ்ப்பாணம், பெப். 10

யாழ்ப்பாண மாநகர ஆளுகைப் பகுதியில் டெங்குத் தொற்றுக் குறைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. கடந்த 9 நாள்களில் மட்டும் 30 வரையிலானோரே டெங்கால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாநகர சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

கடந்த வருடம் டிசெம்பர் மாதத்தைக் காட்டிலும் ஜனவரி மாதத்தில் அதன் தாக்கம் அதிகரித்துக் காணப்பட்டது. டிசெம்பரில் 173 பேரும் இந்த ஆண்டின் ஜனவரியில் 241 பேரும் டெங்கால் பாதிக்கப்பட்டனர். இந்த மாதத்தில் அதன் தாக்கம் சடுதியாகக் குறைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-17)



## மன்னாரில் 3 கிராமங்களில் வீட்டுத்திட்டத்துக்கு அடிக்கல்

மன்னார், பெப். 10

மன்னார் பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட மூன்று கிராமங்களில் மாதிரி வீட்டுத் திட்டங்களுக்கான அடிக்கல் நடும் நிகழ்வுகள் நேற்று நடைபெற்றன.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாதிரி கிராம திட்டத்துக்கமைவாக அதன் மன்னார் மாவட்ட முகாமையாளர் ஜே.நோயல் ஜெயச்சந்திரன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

வசந்தபுரம் கிராமத்தில் 24 வீடுகள், பட்டித் தோட்டம் கிராமத்தில் 26 வீடுகள், மன்னார் சின்னக்கடையில் 18 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

மன்னார் பிரதேச செயலர் திருமதி கனகாம்பிகை சிவசம்பு, கிராம அலுவலர்களுக்கான நிர்வாக உத்தியோகஸ்தர் எஸ்.ஏ.ராதா பெணான்டோ, மன்னார் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் அதிகாரிகள் உற்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

அமைச்சர் சஜித் பிரேமதாசாவின் எண்ணக்கருவில் நாடு முழுவதும் 2ஆயிரத்து 500 மாதிரிக் கிராமங்கள் அமைக்கப்படவுள்ள நிலையில் அடிக்கல் நடும் நிகழ்வு இடம்பெற்றுள்ளது. (த-56)

## அலைபேசி திருடி விற்றவர் கைகலப்பால் மாட்டினார்!

### மறியலில் வைக்க உத்தரவு

சாவகச்சேரி, பெப்.10

அலைபேசியை விற்றதால் ஏற்பட்ட கைகலப்பில், திருட்டுக் குற்றம் தொடர்பாகத் தேடப்பட்டவர் சிக்கிக் கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த செப்ரெம்பர் மாதம் தென்மராட்சி, மந்துவிலில் உள்ள கடையொன்றில் திருட்டு நடந்திருந்தது. கடை உரிமையாளர் இந்தியா சென்றிருந்த நிலையில் கடைக்குள் நுழைந்து 95 ஆயிரம் ரூபா பெறுமதியான அலைபேசி திருடப்பட்டிருந்தது. கடை உரிமையாளர் நாடுதிரும்பியதும் திருட்டுத் தொடர்பில் அறிந்து கொடிகாமம் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்திருந்தார். அது தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர்.

இதற்கிடையே, திருடப்பட்ட அலைபேசி ஒருவருக்கு விற்கப்பட்டுள்ளது. அந்த அலைபேசியைக் கொள்வனவு செய்தவர் அதற்கான பணத்தில் ஒரு தொகையைக் கொடுக்காததால் விற்றவருக்கும், கொள்வனவு செய்தவருக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது. அது பின்னர் கைகலப்பாக மாறியது.

அந்தக் கைகலப்பு விவகாரம் பொலிஸாருக்கு வந்தபோது, அலைபேசி திருட்டு விடயமும் அம்பலத்துக்கு வந்துள்ளது. அலைபேசியைத் திருடினார் என்ற குற்றச்சாட்டில் மந்துவிலைச் சேர்ந்த ஒருவரும், திருடப்பட்ட அலைபேசியைக் கொள்வனவு செய்தார் என்ற குற்றச்சாட்டில் பருத்தித்துறையைச் சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். தாக்குதலில் ஈடுபட்ட குற்றச்சாட்டும் இருவர் மீதும் சுமத்தப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பாக சாவகச்சேரி நீதிமன்றில் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிவான் அலைபேசி திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது. (எ-த-9)

# தமிழ் மக்களை ஏமாற்றுகிறது அரசு!

## சரவணபவன் எம்.பி. குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம், பெப். 10
ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட பின்னர் தமிழ் மக்களுக்கு நல்லதொரு தீர்வை வழங்குவதாக பன்னாட்டுச் சமூகத்துக்கு உத்தரவாதமளித்த அரசு தற்போது தனது வழமையான பாணியில் தமிழ் மக்களை ஏமாற்றத் தொடங்கியுள்ளது. இவ்வாறு தெரிவித்தார். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கான நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன். நாகர்கோவில் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நேற்றுமுன் தினம் இடம்பெற்றது. இதில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: இன்றைய காலங்களில் மாணவர்களின் விளையாட்டுச் செயற்பாடுகள் நாளுக்கு நாள் மெருகேறி வருகின்றன. விளையாட்டில் மட்டுமல்ல உடற்பயிற்சி மற்றும் சாகசம் ஆகியவற்றிலும் அவர்கள் மெச்சத்தக்க வகையில் செயற்படுகின்றனர். இது பாராட்டக்கூடியது. நாகர்கோவில் மகா வித்தியாலயத்தில் திறன் வகுப்பறையொன்று அமைக்கப்படுவதற்குக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதை நிறைவேற்றிக் கொடுப்பதற்கு நான் நிச்சயம் நடவடிக்கை எடுப்பேன் - என்றார்.

நாகர்கோவில் மகா வித்தியாலயத்தில் 1995ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட புக்காராத் தாக்குதலில் 21 மாணவர்கள் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலை நினைவுகூரும் வகையில் இல்ல மெய்வன்மைப் போட்டியில் பங்கெடுத்த இல்லங்கள் வடிவமைக்கப்பட்டிருந்தன. (ம-160)



## சமாதான நீதிவான்கள் பதவியேற்பு

சாவகச்சேரி பெப். 10
சாவகச்சேரி நகரசபையின் தவிசாளர், உப தவிசாளர் உள்ளிட்ட 16 பேர் நேற்று முன்தினம் காலை சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் சமாதான நீதி வான்களாக உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.
சபை உறுப்பினர்களான க.கஜிதன், யோ.ஜெயக்குமார் ஆகியோர் ஏற்கனவே சமாதான நீதிவான்களாக உள்ளதால் அவர்கள் தவிர்ந்த ஏனைய 16 பேர் சமாதான நீதிவான்களாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## அன்னதான மண்டபம் திறப்பு

பளை.பெப்.10
பளை இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் கோவில் வளாகத்தில் அமைக்கப்பட்ட அன்னதான மண்டபம் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப.11 மணிக்கு பளை உதவிப் பிரதேச செயலர் கே.குணஜாவால் திறந்து வைக்கப்படவுள்ளது.
கோவில் நிர்வாக சபையைச் சேர்ந்த சி.கமலரூபன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் நிறுவுநர் உரையை திருமதி கு.பிரதாபராஜன் நிகழ்த்துவார். (எ-9)

## மெய்வன்மை போட்டி

வடமராட்சி, பெப். 10
பருத்தித்துறை தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை திங்கட்கிழமை பி.ப 1.30 மணிக்கு அதிபர் க.சிவதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராகப் பழைய மாணவனும் கிளிநொச்சி நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை முதன்மைபொறியியலாளருமான இ.பாலேந்திரா பங்குபற்றுவார் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-173)

# மாணவரை இலக்கு வைத்து போதைப்பொருள் வர்த்தகம்

## அச்சுறுத்தும் நிலமையைச் சமாளிக்க அனைவரின் ஒத்துழைப்பும் அவசியம்

பாடசாலைகளுக்கு அண்மையில் வர்த்தக நிலையங்களில் பைக்கற்றில் அடைக்கப்பட்ட ஒரு வகைப் போதைப் பாக்கு விற்பனை செய்யப்படுகின்றது என்று பெற்றோர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். அதைத் தடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர்.

**மாணவர்கள் இலக்கு**

வடக்கு மாகாணத்தில் மாணவர்களை இலக்கு வைத்துப் போதைப் பொருள் வர்த்தகம் நடைபெறுகின்றது என்று பல தரப்பினரும் குற்றஞ்சாட்டி வருகின்றனர். அந்தக் குற்றச்சாட்டை உறுதிப்படுத்தும் சம்பவங்களும் நடந்துள்ளன. வடக்கில் பல பகுதிகளிலும் அவ்வாறான போதைப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டதுடன், சட்ட நடவடிக்கைகளும் முன்னைய காலங்களில்எடுக்கப்பட்டிருந்தன. மாணவர்களை இலக்கு வைத்து போதையூட்டிய பாக்கு, மாவா போன்ற போதைப் பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன என்று கூறப்படுகின்றது. அவை பாடசாலைகளுக்கு அண்மையாகவுள்ள சில வர்த்தக நிலையங்களில் விற்பனை செய்யப்படுகின்றன என்றும் குற்றஞ்சாட்டப்படுகின்றது.



பாக்கு, புகையிலைப் பயன்பாடு வாய்ப் புற்றுநோயை உண்டாக்கும்.

**அதிர்ச்சிமிகு தகவல்**

அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்த உளநலமருத்துவர் ஜெயராஜா, மாணவர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாவது அதிகரித்து வருகின்றது என்று கவலை தெரிவித்திருந்தார். கிளிநொச்சி மாவட்டத்தில் நடத்தப்பட்ட போதை ஒழிப்புத் தொடர்பான கூட்டம் ஒன்றில் கலந்துகொண்ட பின்னர் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.
மாணவர்களின் மத்தியில் போதைப் பொருள் அறிமுகப்படுத்தப்படுகின்றது. அவற்றைப் பெற்றுக் கொள்ளப் பெற்றோர்களிடம் பணம் பெற முடியாத நிலையில் மாணவர்கள் விற்பனையாளர்களாக மாற்றப்படுகின்றனர். விற்பனை செய்யும் மாணவர்களுக்குப் போதைப் பொருள் இலவசமாகக் கிடைக்கின்றது என்ற அதிர்ச்சியான தகவல் ஒன்றையும் அவர் குறிப்பிட்டிருந்தார்.
சில மாணவர்கள் வகுப்பறையிலேயே போதைப் பாவனையில் ஈடுபடுகின்றமை ஆய்வின் மூலம் கண்டறியப்படுகின்றது. குறிப்பாக நாக்குக்குக் கீழ் புகையிலையை வைத்துக் கொண்டு கற்கும் நிலமை காணப்படுகின்றது. போதையை ஏற்படுத்தும் ஒரு வகையான பாக்கு மாணவர்கள் மத்தியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சிலர் அவற்றைப் பயன்படுத்தலாமா? இல்லையா? என்ற அரைமனதுடன் உள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

**பாக்கு விற்பனை**

தென்மராட்சியில் பாடசாலைகளுக்கு அண்மித்துள்ள சில வர்த்தக நிலையங்களில் ஒருவகைப் போதையூட்டப்பட்ட பாக்கு ஒன்று விற்பனை செய்யப்படுகின்றது என்று பெற்றோர்கள் கூறுகின்றனர்.
மாணவர்களுக்கு அந்தப் பாக்குத் தொடர்பாக மிகைப்படுத்தப்பட்ட தகவல்கள் வழங்கப்படுகின்றன என்றும், அதை நம்பி விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்கள் அவற்றை உட்கொள்கின்றனர் என்றும் கூடக் கூறப்படுகின்றது.
அதற்கு அடிமையாகும் மாணவர்கள் அதைத் தொடர்ந்து பயன்படுத்தத் தொடங்குகின்றனர் என்று கூறும் பெற்றோர், அதைப் பயன்படுத்திக் கொள்ளும் வர்த்தகர்கள் அதிக விலைக்கு அந்தப் பாக்கை விற்பனை செய்கின்றனர் என்றும் குற்றஞ்சாட்டுகின்றனர்.

**முறைப்பாடு இல்லை**

பெற்றோர்களின் முறைப்பாடு தொடர்பாக சுகாதாரத் திணைக்களத்தினரிடம் கேட்டபோது, அப்படியான முறைப்பாடுகள் எவையும் இதுவரை தமக்குக் கிடைக்கவில்லை என்று கூறுகின்றனர். போதைப் பொருள் பாவனை தொடர்பாக பொலிஸாரும், மதுவரித் திணைக் களத் தினருமே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்தனர். அவர்களுக்கும் இதுவரை அவ்வாறான முறைப்பாடுகள் கிடைக்கவில்லை என்று அறியமுடிகின்றது.

**கவனம் தேவை**

மாணவர்களின் போதைப் பொருள் பாவனை தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினர் அதிக கவனம் எடுக்க வேண்டும் என்று பெற்றோர்கள் கோரிக்கை விடுத் துள்ளனர். அதேவேளை, மாணவர்கள் போதைப் பொருள் பயன்படுத்தும் பட்சத்தில், வர்த்தகர்கள் அவற்றை விற்பனை செய்வதை அறிந்தால் அதைச் சம்பந்தப்பட்ட தரப்பினருக்குத் தெரியப்படுத்தி நடவடிக்கை எடுக்க உதவுவதும் பெற்றோரது கடமையாகும்.
அண்மையில் ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் ஒரு வகைப் பாக்கு விற்பனை செய்த வர்த்தகருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அந்த வர்த்தகருக்கு நீதிமன்று தண்டம் விதித்திருந்திருந்தது. அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைத்தால் மட்டுமே போதைப்பொருள் பாவனையை ஒழிக்க முடியும். மாணவர்கள் மத்தியில் போதைப் பொருள் பாவனை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவது அனைவரின் கடமை என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும். (எ-9)

## குடமுழுக்கு

காரைநகர், பெப்.10
காரைநகர் மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய பாலஸ்தாபன குடமுழுக்கு நாளை திங்கட்கிழமை இடம்பெற உள்ளது.
இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 7.00 மணி முதல் விநாயக வழிபாட்டுடன் கிரியைகள் ஆரம்பமாகி சுவாமி பாலாலயப் பிரவேசம் இடம்பெற்று நாளை காலை 6.33 தொடக்கம் 7.49 வரையுள்ள சுபவேளை யில் விநாயகப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் பாலஸ்தாபன குடமுழுக்கு இடம்பெற உள்ளது.
இந்த ஆலயப் புனரமைப்புப் பணிகள் துரித கதியில் இடம்பெற்று வருவதுடன் பதிய இராஜ கோபுரமும் அமைக்கப்பட்டு வருகின்றது. (எ-250)

✦ ✦ ✦

கொடிகாமம், பெப். 10
தென்மராட்சிப் பிரதேச பாலாவி தெற்கு கொடிகாமம் அருள்மிகு கந்தபுராண கந்தசுவாமி தேவஸ்தானத்தின் குடமுழுக்கு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.50 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகவுள்ளது.
கிரியைகள் யாவும் மன்னன் குறிச்சி கந்தசுவாமி தேவஸ்தான முதன்மைக் குரு சிவஸ்ரீ சிவபாத நீலகண்டக் குருக்கள் நல்லாசியுடன் பிரதிஷ்டா முதன்மைக் குரு குமார வித்தக ஜோதி சிவஸ்ரீ வெ. தில்லையம்பலக் குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ளது. (எ-159)

✦ ✦ ✦

யாழ்ப்பாணம், பெப்.10
யாழ்ப்பாணம் தொல்புரம் அருள்மிகு ஜெகசோதி அம்பாள் ஆலய குடமுழுக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கிரியைகளுடன் ஆரம்பமாகியது. நேற்று சனிக்கிழமை எண்ணெய்காப்பு நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.57 மணி தொடக்கம் 10.09 மணிவரையான சுபவேளையில் அம்பாளுக்குரிய குடமுழுக்கும் இடம்பெறும் என ஆலயப் பரிபாலனசபையால் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-63)

# கேப்பாபிலவைக் கைப்பற்ற கதைகள் விடும் இராணுவம்

## நிலங்களுக்கான அத்தாட்சி இல்லை எனப் புதுக் கதை



தமது பூர்வீக நிலத்தை விடுவிக்கவேண்டும் என்று கேப்பாபிலவு மக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் நிலையில் அந்த நிலங்களுக்கான அத்தாட்சிப் பத்திரம் அவர்களிடம் இல்லை என்று இராணுவத்தினர் புதிய கதையை அவிழ்த்து விட்டுள்ளனர். ஆனால், அந்தக் காணிகள் மக்களுக்கு வழங்கப்பட்டமைக்கான பத்திரங்கள் உண்டு என்று பிரதேச செயலர் உறுதிப்படுத்தியுள்ளார்.



**தீராத துன்பம்**

கேப்பாபிலவில் 105 குடும்பங்களுக்குச் சொந்தமான 171 ஏக்கர் காணிகளை இராணுவம் ஆக்கிரமித்து வைத்துள்ளது. அந்தக் காணிகளை விடுவிக்கவேண்டும் என்று வலியுறுத்தி உரிமையாளர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அந்தக் காணிகளின் விடுவிப்புத் தொடர்பில் உள்ளூர் அரசியல்வாதிகள் முதல் அரச தலைவர் வரை அந்த மக்களுடன் பல சந்திப்புக்களை நடத்தியிருந்தனர். ஆனால் அந்தக் காணிகள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை.

நேற்றுமுன்தினமும் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். காணி விடுவிப்புத் தொடர்பாக வடக்கு ஆளுநரிடம் பேசினேன் என்று அவர் கூறியுள்ளார். இராணுவம் கால அவகாசம் கோருகின்றது என்று ஆளுநர் கூறினார் என்றும், அவ்வாறில்லை உடனடியாகக் காணிகளை விடுவிக்க வேண்டும் என்று தான் வலியுறுத்தினேன் என்றும் அவர் மக்களிடம் தெரிவித்துள்ளார்.

மக்கள் ஓராண்டுக்கு மேலாகப் போராட்டம் நடத்துகின்றனர். அவர்களின் பிரச்சினை தொடர்பாக இதுவரை எவரும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டதாகத் தெரியவில்லை. அந்த மக்கள் சொல்லெணாத் துன்பத்தின் மத்தியில் வீதியோரம் கொட்டகை அமைத்துக் கொட்டும் மழையிலும், கொழுத்தும் வெயிலும், தாங்கொணாக் குளிரிலும் தமது காணிகளுக்காகப் போராட்டம் நடத்திவருகின்றனர். தங்களின் பூர்வீகக் காணிகளை விடுவிக்கும் வரை போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்று அந்த மக்கள் உறுதியுடன் உள்ளனர்.

**மீண்டும் கூட்டம்**

கேப்பாபிலவுக் காணி விடுவிப்புத் தொடர்பில் பல தடவைகள் கூடி ஆராயப்பட்டுள்ளன. அந்த வரிசையில் அண்மையிலும் ஒரு கலந்துரையாடல் கொழும்பில் நடந்துள்ளது. அதில் போராட்டத்தில் ஈடுபடும் மக்களின் பிரதிநிதிகள், வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன், கேப்பாபிலவுப் படைகளின் தளபதி, பாதுகாப்பு அமைச்சின் செயலர், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா, அரச அதிகாரிகள் ஆகியோர் பங்கேற்றுள்ளனர். கேப்பாபிலவுக் காணி விடுவிப்பு, காணிகளின் அளவு, அந்தக் காணிகள் இதுவரை விடுவிக்கப்படாமைக்கான காரணங்கள், மக்கள் நடத்தும் தொடர் போராட்டங்கள் என்பன தொடர்பாக அந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டன.

**இராணுவம் புதுக் கதை**

காணிகள் இன்னமும் விடுவிக்கப்படாமைக்கான காரணங்களை இராணுவத்தினர் கூட்டத்தில் பட்டியலிட்டனர். அந்தக் காணிகளுக்கான வரைபடம், காணிகளுக்கான அத்தாட்சிப் பத்திரங்கள் எவையும் இல்லை என்று இராணுவத்தினர் கூறியுள்ளனர். அதனாலேயே காணிகள் விடுவிக்கப்பட வில்லை என்றும் அவர்கள் கூறியுள்ளனர். இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சின் செயலாளருடன் பேசினார்கள்.

- **ஓராண்டுக்கு மேலாகப் போராட்டம் நடத்துகிறோம்.**
- **இதுவரை எவரும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டதாகத் தெரியவில்லை.**
- **கொட்டும் மழையிலும், கொழுத்தும் வெயிலும், தாங்கொனாக் குளிரிலும் எமது காணிகளுக்காகப் போராட்டம் நடத்தி வருகிறோம்.**
- **எங்களின் பூர்வீகக் காணிகளை விடுவிக்கும் வரை போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை.**
- **ஒவ்வொரு சந்தர்ப்பதிலும் ஒவ்வொரு காரணங்களை இராணுவம் கூறி வருகின்றது.**

கலந்துரையாடலில் இருந்தவாறு மாவட்டச் செயலர், கரைத்துறைபற்றுப் பிரதேச செயலர் ஆகியோருக்குத் தொலைபேசி அழைப்புகள் எடுக்கப்பட்டன. அப்போது, அந்தக் காணிகள் மக்களுக்கு வழங்கப்பட்டமைக்கான பத்திரங்கள் உண்டு என்று பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

**முடிவில்லை**

பிரதேச செயலர் இவ்வாறு தெரிவித்த பின்னரும், இந்த விடயம் தொடர்பாக ஆராயக் கொழும்பில் இருந்து சிறப்புக் குழு ஒன்று முல்லைத்தீவு செல்லும் என்று அந்தக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது. அந்தக் குழுவுடன் வடக்கு மாகாண ஆளுநரும் சென்று நிலமைகளை ஆராய்வார் என்றும் தெரிவிக்கப்பட்டது. இந்தக் குழு நாளை கேப்பாபிலவுக்கு வரும் என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்தனர். கேப்பாபிலவுக் காணி விடுவிப்புத் தொடர்பில் ஒவ்வொரு சந்தர்ப்பதிலும் ஒவ்வொரு காரணங்களை இராணுவம் கூறி வருகின்றது. காணி விடு விப்பைத் திட்டமிட்டு பின்நகர்த்தும் செயற்பாடாகவே இராணுவம் இதைச் செய்கின்றது என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகின்றது. பாதுகாப்பு அமைச்சுக்குப் பொறுப்பான அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இந்த விடயத்தில் பூசி மெழு கிக் காலத்தைக் கடத்தும் செயற்பாட்டையே முன்னெடுக்கின்றார்.

இந்தப் பிரச்சினை தொடர்பாகத் தீர்க்கமான முடிவு எதையும் எடுக்காது, வெறுமனே கூட்டங்களை நடத்திக் காலத்தை இழுத்தடிப்பது, மக்களின் உறுதியைச் சீர்குலைத்து, அவர்களின் போராட்டத்தை மழுங்கடிக்கும் தந்திரத்தை அரசு கைக்கொள்கின்றதோ என்ற சந்தேகத்தை எழுப்புகின்றது. (எ-21)

## சொற்பொழிவு

மன்னார், பெப்.10

மன்னார் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மன்னார் தாழ்வுபாடு வீதியில் உள்ள குடும்பப் பணி நிலைய மண்டபத்தில் எழுத்தாளர் எஸ்.ஏ. உதயன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

தமிழ் நாட்டில் இருந்து இலங்கைக்கு வந்துள்ள அருட்திரு. வினி இளங்குமரன் 'வள்ளுவம் கண்ட தமிழ்த்தேசியம்' என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவை நிகழ்த்தவுள்ளார்.

இந்த நிகழ்வின்போது மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு. ஏ. விக்ரர் சோசை அடிகளார் ஆசியுரையையும், மன்னார் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் அருட்திரு. தமிழ்நேசன் அடிகளார் அறிமுக உரையையும், மன்னார் மாவட்டச் செயலர் சி. ஏ. மோகன் றாஸ் வாழ்த்துரையையும் வழங்கவுள்ளனர்.

சொற்பொழிவை நிகழ்த்தும் அருட்தந்தை வினி இளங்குமரன் தமிழ்நாட்டில் இருந்து உலகெங்கும் பரவியிருக்கும் தமிழ் மக்களுக்காக நடத்தப்படும் 'மாதா' தொலைக்காட்சியில் 'குறள்வழி இறைமொழி' என்னும் நிகழ்ச்சியை நடத்திவருகின்றார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-60)

## மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

வவனியா, பெப்.10

வவுனியா செட்டிக்குளம் முகத்தான்குள பாடசாலையில் கல்வி கற்கும் 29 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

மாணவர்களின் கற்றல் நடவடிக்கையை ஊக்குவிக்கும் முகமாக பாடசாலை அதிபரின் வேண்டுகோளுக்கமைய பிரதேசசெயலக அபிவிருத்தி அலுவலர் மூலம் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

திருநெல்வேலியைச் சேர்ந்த கொக்குவில் இந்துவின் பழைய மாணவன் கமலவண்ணன் தனது மகன் அருணனின் 13ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு வீ-3 பவுண்டேசன் ஊடாக இந்த உதவிகளை வழங்கியுள்ளார்.

நிகழ்வில் மாவட்ட சமூகசேவை அலுவலர் செ.ஸ்ரீநிவாசன், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (எ)



உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# பாராட்டத் தகுந்தவை பாப்பரசரின் நகர்வுகள்

கத்தோலிக்க திருச்சபை இதுவரைகாலமும் ஏகப்பட்டதலைவர்களை(பாப்பரசர்களை)சந்தித்துள்ளது. ஒப்பீட்டளவில் அனைவரும் தமது பணிகளை செவ்வனே நிறைவேற்றிய போதிலும், தற்போதைய தலைவரான பாப்பரசர் பிரான்சிஸ் ஏனையவர்களிடம் இருந்து வேறுபட்டு நிற்கின்றார். நிகழ்கால நிலையில் கத்தோலிக்க திருச்சபையின் தேவையும் பாப்பரசர் பிரான்சிஸ் ஆகவே உள்ளது என்பதை அவரது ஒவ்வொரு நகர்வும் புடம்போட்டுக் காட்டுகின்றது.


கத்தோலிக்கத்திருச்சபைக்குள்பாலியல்துர்நடத்தைகள் இடம்பெற்றன என்பதற்கான பதிவுகள் நூற்றாண்டுப் பழமையானவை. எனினும்வரலாற்றில்என்றுமில்லாத அளவுக்குமோசமான,அருவருக்கத்தக்க,விரும்பத்தகாத பதிவொன்று தற்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. கத்தோலிக்கத் திருச்சபையின் பெண்துறவிகளான கன்னியாஸ்திரிகள்(அருட் சகோதரிகள்) பாதிரியார்களாலும் ஆயர்களாலும் பாலியல் இச்சைக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளனர் என்பதே அது.

பாப்பரசர் பிரான்சிஸ், இஸ்லாமின் பிறப்பிடம் என்றழைக்கப்படும் நாடுகளில் ஒன்றானஐக்கிய அரபு இராச்சியத்துக்கு மிகச்சமீபத்தில்சுற்றுப்பயணம்மேற்கொண்டிருந்தார். தனது பயணத்தின் ஒரு பகுதியில் அதாவது கடந்தஐந்தாம்திகதியன்று 'கத்தோலிக்கத்திருச்சபையில் கன்னியாஸ்திரிகள் சிலர் பாலியல் இச்சைகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளனர்என்று வர்த்திக்கான் அறிகிறது. சில பாதிரியார்களும், ஆயர்களும் கூட இத்தகைய செயல்களில் ஈடுபட்டுள்ளனர். இந்தப் பிரச்சினை எல்லாஇடத்திலும்நடக்கிறது. ஆனால்சிலபகுதிகளில் உள்ள சில திருச்சபைகளில் அதிகமாக இருக்கிறது. பாலியல் முறைப்பாடுகளால்வர்த்திக்கான்ஏராளமான பாதிரியார்களைஇடைநீக்கம் செய்துள்ளது. அது தொடரும்' என்று தெரிவித்துதிருச்சபையில்பாதிரியார்களால் கன்னியாஸ்திரிகள் பாலியல் இச்சைகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளனர்என்றதகவலைவெளிப்படுத்தியுள்ளார் அவர்.

இதற்குமுன்னர்ஆஸ்திரேலியா,அயர்லாந்துநாடுகளுக்கான தனது சுற்றுப் பயணத்தின்போதும்கூட பாப்பரசர் திருச்சபைக்குள்இருந்தவர்களால்மேற்கொள்ளப்பட்ட பாலியல் துன்புறுத்தல்களால் பாதிக்கப்பட்டவர்களிடத்தில் தனது மன்னிப்பைக் கேட்டுக்கொண்டார். குறிப்பாக சிறுவர்கள் சிறுமியர்களுக்காக கண்ணீர் மல்கினார். அவர்களிடம்மன்றாடினார். அவர்களுக்காகவும் மன்றாடினார். அத்துடன் நின்றுவிடாமல் இத்தகைய இழிசெயலில்ஈடுபட்ட பாதிரியார்கள்மற்றும் ஆயர்கள் பலரைஇடைநிறுத்தும்வகையில்செயற்பட்டுவந்தார். இதன்படி பல பாதிரியார்களும் ஆயர்களும் பாப்பரசரால் இடைநிறுத்தப்பட்டுள்ளனர். அத்தகையவர்களுக்குஎதிராகமேற்கொள்ளப்படும்நடவடிக்கைகளின் வேகம் இனிவரும் காலங்களில் இன்னும் அதிகமாக இருக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார் பாப்பரசர் பிரான்சிஸ். அதை நம்பலாம்.

திருச்சபையானது பொற்கோபுரங்களையும், சிவப்புக் கம்பளங்களையும் தனது கடந்த கால வரலாறாகக் கொண்டிருக்கவில்லை. அதன் வரலாறு கசப்பானது. முட்களும், கற்களும் நிறைந்தது. பேதகங்களையும் (திருச்சபைக்கும் திருச்சபையின் கொள்கைகளுக்கும் எதிரானதப்பறைகள்) கலாபனைகளையும் (திருச்சபையினருக்குஎதிராகமேற்கொள்ளப்பட்டதுன்புறுத்தல்கள், படுகொலைகள்) கண்டு கடந்த திருச்சபை இன்று இவ்வாறான குற்றங்களை ஏற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமை, பெரும் அப்த்தம். எனினும் பாப்பரசர்பிரான்சிஸ் போன்றதலைவர்களின் வழிகாட்டலில் தன் மீதான கறைகளைக் களைந்து அது மிகவிரைவில் மீண்டெழும். அதுவே ஒட்டுமொத்த கத்தோலிக்கர்களின் எதிர்பார்ப்பும்கூட.

**'நீதிமான்களை அல்ல பாவிகளையே மீட்க வந்தேன்'**



# உலகப் பொருளாதாரத்தை கட்டியெழுப்புகின்ற நாடாக சீனா உருமாறியது எப்படி?

சீனத்தில் 1978ஆம் ஆண்டு டிசெம்பரில் நடந்த சீன கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் குழுவின் பதினோராவது மாநாடு, எதைப் பற்றியது என்பது வேண்டுமானால் உலகுக்குத் தெரியாமல் இருந்திருக்கலாம். ஆனால், அது ஏற்படுத்திய விளைவுகள், உலகம் முழுவதும் பெரும் நில அதிர்வைப் போல இன்னமும் உணரப்பட்டுவருகிறது. வேளாண்சார் நாடாக இருந்ததைத் தொழிலுற்பத்தி ஆற்றல் மையமாக டெங் சியோபிங் தொடங்கிய '(பொருளாதார) சீர்திருத்தம் - திறந்துவிடல்' கொள்கையானது மாற்றியுள்ளது. அது மட்டுமின்றி, உலகப் பொருளாதாரத்தையே கட்டமைக்கும் நாடாக சீன வளர உதவுகிறது.

பொருளாதாரச் சீர்திருத்தத்தின் 40ஆவது ஆண்டு விழாவைச் சீனா கொண்டாடுகிறது. உலகிலேயே அதிக அந்நியச் செலாவணியை (ஒக்ரோபர் கணக்குப்படி, 3.05 லட்சம் கோடி டொலர்கள்) கையிருப்பாக வைத்திருக்கும் ஒரே நாடு சீனாதான். 2017ஆம் ஆண்டின் தரவுகளின்படி, அதன் ஜிடிபி 12.2 லட்சம் கோடி டொலர்கள். உலகின் இரண்டாவது பெரிய பொருளாதார நாடு சீனா. சர்வாதிகார ஆட்சியமைப்பைக் கொண்ட சீனத்தால், பொருளாதாரச் சீர்திருத்தம் சாத்தியமில்லை என்று மேற்குலகப் பண்டிதர்கள் கூறிவந்தது பலிக்கவில்லை.

> சீர்திருத்த நடைமுறைக்குப் பிந்தைய காலத்தில் சமூக, பொருளாதாரத் தளங்களில் ஏற்பட்டுள்ள சவால்களைத் தீர்க்கும் நடவடிக்கைகளில் சீனத் தலைவர்கள் அக்கறை செலுத்திவருகின்றனர். சர்வாதிகார அரசுகளில் இப்படியொரு செயலைக் காண முடியாது. சீர்திருத்தம் பொருளாதாரத் தளத்தோடு நிற்காமல் அரசு நிர்வாகம், அரசுக் கட்டமைப்பு ஆகிய வற்றிலும் பரவியிருக்கிறது.

**முரண்பாடுகள் நிரம்பிய நாடு**

இப்போதைய சீனத்தின் வெவ்வேறு துறைகளை ஒப்பிட்டால், அது முரண்பாடுகளின் மொத்த கலவைபோலத் தெரியும். சீனத்தை ஆளும் கம்யூனிஸ்ட் கட்சி சமத்துவப் பொருளாதாரத்தைப் பேசுகிறது. ஆனால் சமூகமோ, அசமத்துவமே அடையாளமாய்க் கொண்ட முதலாளித்துவத்தால் உந்தப்படுகிறது.

நகர்ப்புற நடுத்தர வர்க்கத்தின் பொருளாதார நலன்கள், கிராமப்புற விவசாயிகள் - வேலைக்காக இடம்பெயரும் தொழிலாளர்களின் நலன்களுடன் முரண்படுகிறது. உலகிலேயே மிக அதிகமாக 77.2 கோடி இணையதள இணைப்புகள் சீனத்தில்தான் உள்ளன. உலகின் மொத்த மின்வணிகத்தில் 40 வீதம் சீனத்தில்தான் நடக்கிறது. உலகிலேயே டிஜிட்டல் நடைமுறைகள் அதிகம் தணிக்கைக்குள்ளாகும் நாடும் சீனாதான்.

வட்டத்தைச் சதுரமாக்கும் கலையில் வல்லமைபெற்ற சீன கம்யூனிஸ்ட் கட்சி, சீனத்தில் பொருளாதாரச் சீர்திருத்தம் வெற்றிபெறாது என்ற கணிப்புகளைப் பொய்யாக்கியது. இதைச் சாத்தியமாக்கியது டெங் சியோபிங் காலத்தில் நடைமுறைக்கு வந்த முன்னோடித் திட்டமாகும். 'ஆற்றைக் கடக்கும்போது கற்களைக் காலால் தடவி நடப்பதுபோல' என்று அதற்கு அவர் பெயரிட்டார். தேச அளவில் ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்தும் முன், உள்ளூர் அளவில் அதை நடைமுறைப்படுத்திச் சாதகபாதகங்களைத் தெரிந்துகொள்ளச் செய்தார்.

சீனக் கடலோர நகரங்களில் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் 1980களில் ஏற்படுத்தப்பட்டன. அவை தொழிலுற்பத்தி தொடர்பான சோதனைச் சாலைகளாகவே இயக்கப்பட்டன. அவை பொருளாதார வளர்ச்சிக்கான மூலவிசை யாகச் செயல்பட்டன. ஷென்ஷென் போன்ற மீன்பிடிக் குப்பங்கள்கூட உலகளாவிய உற்பத்தி நகரங்களாக வளர்ச்சி பெற்றன. ஒவ்வொரு கொள்கையும் இப்படித்தான் உள்ளூர் அளவில் சோதிக்கப்பட்டு, பிறகு விரிவுபடுத்த ப்பட்டன. மருத்துவ நலத் திட்டங்கள் கூட்டுறவுத் துறையில் முயன்று பார்க்கப்பட்டன. தொழிலாளர்கள் ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்துக்கு இடம்பெயர விதிக்கப்பட்டிருந்த தடைகள் விலக்கப்பட்டன. மாசேதுங் காலத்தில் 1950கள் முதல் 1970கள் வரையில் நடந்த சித்தாந்த ஒடுக்குமுறைகளுக்கு விடைகொடுக்கப்பட்டு, காரிய சாத்தியமான வகையில் தொழிலாளர்களின் சக்தி பயன்படுத்தப்படுகிறது.

கட்சியின் அதிகாரத்தைக் காப்பாற்ற வேண்டும் என்றால், பொருளாதார வளர்ச்சியின் பயன்களை வாக்குறுதி தந்தபடி நிறைவேற்றியாக வேண்டும். மத்தியதர வர்க்கம் தங்களுடைய வாழ்க்கைத் தரம் மேம்பட

வேண்டும் என்று கோரியது. அதை யொட்டி நகரங்களின் சுற்றுச்சூழலை மேம்படுத்தும் நடவடிக்கைகளை அரசு எடுத்தது. பெய்ஜிங் மாநகரத்தின் சூழல் அதற்குச் சான்று. டெல்லி போன்ற மாநகரங்கள் பின்பற்றும் வகையில் நகரின் மாசு குறைக்கப்பட்டி ருக்கிறது.


**சித்தாந்தத்தை விடவும் செயற்பாட்டுக்கு முக்கியம்**

சீர்திருத்த நடைமுறைக்குப் பிந்தைய காலத்தில் சமூக, பொருளாதாரத் தளங்களில் ஏற்பட்டுள்ள சவால்களைத் தீர்க்கும் நடவடிக்கைகளில் சீனத் தலைவர்கள் அக்கறை செலுத்திவருகின்றனர். சர்வாதிகார அரசுகளில் இப்படியொரு செயலைக் காண முடியாது. சீர்திருத்தம் பொருளாதாரத் தளத்தோடு நிற்காமல் அரசு நிர்வாகம், அரசுக் கட்டமைப்பு ஆகியவற்றிலும் பரவியிருக்கிறது. அரசு அதிகாரிகள் முக்கியப் பதவிகளை இத்தனை முறைதான் வகிக்கலாம் என்ற கட்டுப்பாடும், ஓய்வு வயது நிர்ணயமும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. சீர்திருத்தத்தில் சித்தாந்தத்தைவிட செயல்பாட்டுக்கே முக்கியத்துவம் தரப்படுகின்றன.

**ஜி ஜின்பிங் சகாப்தம்**

டெங் சியோபிங் காலத்தில் தொடங்கிய 'சீர்திருத்தம் திறந்துவிடல்' கொள்கையை முழுமையாகப் புரிந்துகொண்டால்தான், சீனம் இன்றைக்கு அடைந்திருக்கும் முன்னேற்றத்தையும் புரிந்துகொள்ள முடியும். ஜி ஜின்பிங் காலத்திலும் அது எப்படித் தேவைப்படுகிறது என்பதும் விடை காணப்பட வேண்டிய கேள்வி. பொருளாதார தாராளமயத்தை மேலும் விரிவு படுத்துவதில் சீனத்துக்கு உறுதியிருந்தாலும், அமெரிக்கா தொடங்கியுள்ள வர்த்தகப் போர், சீன அரசைத் தொடர்ந்து கட்டுப்படுகிறது. இந்தியா போன்ற நாடுகள் வளர்ச்சியில் ஏன் பின்தங்கியி ருக்கின்றன என்பதைச் சீனத்தில் சீர்திருத்தம் நடைமுறையாகும் விதத்தைப் பார்த்தால் புரிந்துகொள்ளலாம். ஜனநாயக ரீதியாகச் செயல்படுகிறோம் என்று கூறி, திட்டங்களை முழுமையாகச் செயல்படுத்தாமல் இருப்பதற்கு இந்திய அரசால் சமாதானம் சொல்ல முடியும். சீன கம்யூனிஸ்ட் கட்சி ஒரு செயலை மேற்கொண்டால், அதை நிறைவேற்றாமல் இருக்க முடியாது. இந்தியாவில் அரசியலில் ஏழைகளுக்குப் பிரதிநிதித்து வம் இருந்தாலும் சீர்திருத்தங்களின் பயன்கள் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. அரசியல் பங்கேற்பு இல்லையென்றாலும், அனைவருக்கும் சீர்திருத்தப் பயன்கள் சீனத்தில் கிடைத்துவிடு கின்றன. சாலைகள், கழிவுநீர் வாய்க்கால்கள், பள்ளிக்கூடங்கள் ஆகியவை சீனத்தில் அனைவருக்கும் உறுதிசெய்படுத்த வேண்டிய நிலைமைக்குத் தள்ளியிருக்கிறது. பொருளாதாரத்தைச் சீன அரசு கட்டுப்படுத்திக்கொண்டிருக்கும் அதே நேரத்தில், சந்தைகள் மட்டும் அனைவருக்கும் திறந்துவி டப்பட்டுள்ளது. 'சீன அடையாளங்களோடு கூடிய சோசலிசம்' என்று சீனத்தில் இதை அழைக்கிறார்கள்.





> இப்போதைய சீனத்தின் வெவ்வேறு துறைகளை ஒப்பிட்டால், அது முரண்பாடு களின் மொத்த கலவை போலத் தெரியும். சீனத்தை ஆளும் கம்யூனிஸ்ட் கட்சி சமத்துவப் பொருளாதாரத்தைப் பேசுகிறது. ஆனால் சமூகமோ, அசமத்துவமே அடையாளமாய்க் கொண்ட முதலாளித்துவத்தால் உந்தப்படுகிறது. நகர்ப்புற நடுத்தர வர்க்கத்தின் பொருளாதார நலன்கள், கிராமப்புற விவசாயிகள் – வேலைக்காக இடம்பெயரும் தொழிலாளர்களின் நலன்களுடன் முரண்படு கிறது. உலகிலேயே மிக அதிகமாக 77.2 கோடி இணைய தள இணைப்புகள் சீனத்தில்தான் உள்ளன. உலகின் மொத்த மின் வணி கத்தில் 40 வீதம் சீனத்தில்தான் நடக்கிறது.

டெங் உத்வேகப்படுத்திய கொள்கைகளிலிருந்து சீனம் விலகவும் செய்திருக்கிறது. அதிபர் பதவியில் ஒருவர் தொடர்ந்து இரு முறை தான் இருக்கலாம் என்ற விதிசமீபத்தில்நீக்கப்பட்டு விட்டது. இதனால், ஜி ஜின்பிங் காலவரம்பின்றி வாழ்நாள் முழுக்க அதிபராக நீடிக்க முடியும். 'பொருளாதார நடவடிக்கைளை வெளிப்படையாக மேற்கொள்ளுங்கள். வெளிநாடுகளைச் சேர்ந்த நிபுணர்களையும் வேலைக்கு அமர்த்திக்கொள்ளுங்கள்' என்று டெங் வலியுறுத்தியிருந்தார். 'சுயச்சார்பு அவசியம், வெளிநாட்டு விரோத சக்திகளிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்' என்று எச்சரிக்கிறார் ஜி ஜின்பிங்.

'பொருளாதார நடவடிக்கைகளை அமைதியாக ஒருங்கிணைக்க வேண்டும்' என்றார் டெங். ஆனால், இப்போதோ வர்த்தகப் போட்டியால் 'புதிய பனிப் போர்' தொடங்கும் ஆபத்து நிலவுகிறது. 'ஆற்றலை மறைத்துக்கொண்டு உரிய நேரத்துக்காகக் காத்திருக்க வேண்டும்' என்றார் டெங். அதில் தேசிய உணர்வு கலந்திருந்தது. டெங் காலத்தில் முன்னோடித் திட்டம் உள்ளூர் அளவில் பரிசீலிக்கப்படுவதாக அதிகம் இருந்தது. 2010ஆம் ஆண்டில் 500 கொள்கைசார் திட்டங்கள் பரிசோதனையில் இருந்தன. 2016ஆம் ஆண்டில் அது 70 ஆகச் சுருங்கிவிட்டது.

'சீர்திருத்தம் - திறந்துவிடல்' என்ற கொள்கைக்கான காலம் மலையேறிவிட்டதா? அப்படியென்றால், எது அதன் இடத்தைப் பிடிக்கப்போகிறது? அமெரிக்கா மற்றும் அதைப் போன்ற நாடுகளுடனான போட்டியைச் சீனா எப்படி எதிர்கொள்ளப்போகிறது? இந்தக் கேள்விக்கான விடைகள் இன்னும் தெளிவாகவில்லை. சீன கம்யூனிஸ்ட் கட்சி மிகவும் கவனத்துடன் அடியெடுத்து வைக்க வேண்டும் என்பது மட்டும் நிச்சயம்.



## ஆசிரியருக்கான கடிதம்

# நாய்களால் படும்பாடு என்று தீரும்?

எதிரிக்குக் கூட ஒருபோதும் துன்பம் வர மனதில்கூட நினைக்கக் கூடாது. சகலரும் சகல வளங்களுடனும் நின்மதியாக வாழவேண்டுமென வாழ்வதே உயர்ந்த மனித வாழ்க்கை. ஆனால் இன்றைய காலகட்டத்தில் மற்றையவர்கள் எப்படி அவல வாழ்வு வாழ்ந்தாலும் பரவாயில்லை என்று நினைத்து வாழ்பவர்கள் சிலரால் எத்தனை மனித உள்ளங்கள் பற்பல இடையூறுகளை எதிர்கொள்கின்றன. உதாரணமாக வரணிப் பகுதியில் கட்டாக்காலி நாய்களால் பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவர்கள் படும்பாடு கவலையளிப்பதாகவே உள்ளது. நாய் வளர்ப்போர் தமது நாய்களைப் பகலிலே கட்டி வளர்த்தால் இந்த அவலம் தீராதா? இதை நாய்களை வளர்ப்போர் அறிவாரா? நாய்களை பகலில் கட்டி இரவில் அவிழ்ந்து விடுவது நடைமுறையில் உள்ள விடயம். சட்டத்தில்கூட இடமுண்டு. இந்த நடைமுறை நாய் வளர்ப்போருக்கு புரியாதா? நல்லுள்ளம் படைத்த மனித உள்ளங்களே! ஒருவரால் இன்னொருவர் ஒருபோதும் துன்பப்படக்கூடாது. பிறருக்கு துன்பம் வரவிடவோ நினைக்கவோ முயலக்கூடாது. பொறுப்புணர்ந்து செயற்படுங்கள்.

*அன்பு, வரணி*

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகி றீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்ப டாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

# மக்களின் எதிர்ப்புகளுக்கு அஞ்சி வடகிழக்குக்கு வரவில்லையா மைத்திரி?

இந்த மாதம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மேற்கொள்ளவிருந்த பயணங்கள் திடீரென ஒத்திவைக்கப்பட்டுள்ளன. அதற்கான காரணம் சுகவீனம் என்று கூறப்படுகின்றபோதும், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்ற அமர்வில் பங்கேற்றிருந்தார். வடகிழக்கில் தற்போது நடக்கும் மக்கள் போராட்டங்களே மைத்திரி வராமைக்குக் காரணமாக இருக்கலாம் என்று கொழும்புத் தகவல்கள் கூறுகின்றன.

**யாழ்ப்பாண வருகை**

யாழ்ப்பாணம், அச்சுவேலி மேற்கில் கிராம சக்தி வேலைத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு கடந்த 6ஆம் திகதி நடைபெறுவதற்கு ஏற்பாடாகியிருந்தது. அந்த நிகழ்வுக்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வருவார் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர் வரவில்லை. அவருக்கு சுகவீனம் என்றும், அதனால் அவர் வரமாட்டார் என்றும் நிகழ்வுக்கு முன்னைய தினம் அறிவிக்கப்பட்டது.

**கிழக்குப் பயணம்**

கடந்த 8ஆம் திகதி கிராம சக்தி மக்கள் இயக்கத்தின் கிழக்கு மாகாண செயற்குழுக் கூட்டம் மாகாண மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரச அதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் அரச தலைவர் முன்னிலையில் மட்டக்களப்பு மண்முறனை வடக்கு பிரதேச செயலகத்தில் இடம்பெறும் என்றும் அத்துடன் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் வழிகாட்டலில் அரச தலைவர் செயலகத்தால் நடைமுறைப்படுத்தும் கிராம சக்தி வேலைத் திட்ட ஆரம்ப நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த நிகழ்வில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கலந்துகொள்வார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அவற்றிலும் அவர் பங்கேற்கவில்லை. அவருக்குச் சுகவீனம் என்று கூறப்பட்டது.

**நாடாளுமன்றில் பேச்சு**

சுகவீனம் காரணமாகப் பயணங்களை அரச தலைவர் ஒத்திவைத்தார் என்று தெரிவிக்கப்பட்ட நிலையில், கொழும்பில் அரச தலைவர் தனது வழமையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். நாடாளுமன்ற அமர்விலும் அவர் கலந்துகொண்டார். அங்கு உரையும் ஆற்றியுள்ளார்.

**மக்களின் மாற்றம்**

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஆட்சிக்கு வந்தபோது தமிழர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்று உறுதி வழங்கியிருந்தார். ஆனால் தமிழர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினை, அரசியல் கைதிகள் விவகாரம், இராணுவத்தின் காணி அபகரிப்பு என்று பல பிரச்சினைகள் தீர்க்கப்படாதுள்ளன. தமது கோரிக்கைகளை முன்வைத்துத் தமிழ் மக்கள் ஆங்காங்கே போராட்டங்களை நடத்திய வண்ணமுள்ளனர். இந்த நிலையில் கடந்த 4ஆம் திகதி கொண்டாடப்பட்ட இலங்கையின் சுதந்திர தினத்தைக் கறுப்பு நாளாக அறிவித்து வடக்கில் பல இடங்களில் போராட்டங்களும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

கிழக்கிலும் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு இன்னமும் தீர்வுகள் வழங்கப்படவில்லை. அங்கும் காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை, காணிப் பிரச்சினை எனப் பல பிரச்சினைகள் இன்னமும் உள்ளன.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மீது நம்பிக்கை வைத்து ஆட்சிக்குக் கொண்டு வந்த தமிழ் மக்கள் தற்போது அவர் மீதான நம்பிக்கையை இழந்துள்ளனர்.

**இதுவா காரணம்?**

இந்த நிலைமைகள் தொடர்பாக அரச தலைவருக்குக் கிடைத்த அறிக்கையே அவரது பயணம் கைவிட்டமைக்கு காரணம் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இருந்து தகவல் வெளியாகியுள்ளது. தற்போது அரச தலைவருக்கும், அரசின் மீதும் மக்கள் நம்பிக்கை இழந்துள்ளதால், அரச தலைவரின் வருகையின்போது போராட்டங்கள் நடத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அண்மைய நாள்களில் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு தரக் கோரி மக்கள் வீதிகளில் இறங்கிப் போராட்டங்களை மேற்கொண்டுவருகின்றமை அதிகரித்துள்ளது. அதனால் அரச தலைவரின் வருகையின்போதும் அவர்கள் எதிர்ப்புக் காட்டலாம் என்று மைத்திரிபால சிறிசேனவுக்கு பாதுகாப்புத் தரப்பினரால் தகவல் வழங்கப்பட்டிருந்தது என்றும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன. வடக்கு மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்குத் தீர்வு வழங்கப்படாத நிலையில், அவர்களை நேருக்கு நேர் எதிர்கொள்ள முடியாததால் அரச தலைவர் தனது பயணத்தை கைவிட்டுள்ளார் என்றும் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன. அரச தலைவரின் கிழக்குப் பயணம் ஒத்திவைக்கப்பட்டமைக்கு இதுவே காரணம் என்று கூறப்படுகின்றது.

(எ-21)



> வடக்கு மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்குத் தீர்வு வழங்கப்படாத நிலையில், அவர்களை நேருக்கு நேர் எதிர்கொள்ள முடியாததால் அரச தலைவர் தனது பயணத்தை ஒத்திவைத்துள்ளார் என்றும் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

## உள்நாட்டு விவகாரங்களில் சீன அரசு தலையிடாதாம்

கொழும்பு, பெப்.10

இலங்கையின் உள்நாட்டு அரசியல் விவகாரங்களில் சீனா தலையீடு செய்யாது என்று அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீடங்களின் மகாநாயக்கர்களிடம், சீனத் தூதுவர் செங் ஷியுவான் உறுதியளித்துள்ளார்.

கண்டியில் அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்களை சீனத் தூதுவர் கடந்த புதன்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினார்.

"உள்நாட்டுச் சிக்கல்களை இலங்கை மக்களே தீர்த்துக் கொள்ள வேண்டும். உள்நாட்டு விவகாரங்களில் சீனா ஒருபோதும் தலையீடு செய்யாது. சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் நல்ல உறவு இருக்கிறது. 62 ஆண்டுகளாக் இடையூறில்லாத உறவுகள் இருந்து வருகின்றன. இரண்டு நாடுகளும் இன்னமும் நெருக்கமான நண்பர்களாகப் பணியாற்றுகின்றன." என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த)

## ரஷ்யாவுக்கு செல்கின்றது இலங்கை இராணுவம்

கொழும்பு, பெப். 10

இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கு ரஷ்யாவில் ஆட்லறிச் சூடு மற்றும் ஏவுகணைத் தொழில்நுட்பப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. அதற்காக இலங்கைப் படை அதிகாரிகள் கொண்ட முதலாவது குழு, சில நாள்களில் மொஸ்கோவுக்குப் பயணமாகவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவுக்கான இலங்கைத் தூதுவர் கலாநிதி தயான் ஜெயதிலக, இந்தத் தகவலை ரஷ்யாவின் ஸ்புட்னிக் நாளிதழிடம் தெரிவித்துள்ளார்.

"ஆட்டிலறி மற்றும் ஏவுகணைத் தொழில்நுட்பங்கள் குறித்தபயிற்சிக்காக,இலங்கை இராணுவத்தின் ஒரு தொகுதி இளம் அதிகாரிகளை அடுத்த சில நாள்களில் ரஷ்யாவுக்கு அனுப்பவுள்ளோம். ரஷ்ய இராணுவ குழுவொன்றும் இலங்கைக்குச் செல்லவுள்ளது.

இலங்கையில் நடத்தப்படும் பன்னாட்டுத் தீவிரவாத முறியடிப்பு நிகழ்வுகளில் பங்கேற்க ரஷ்யாவுக்கு இலங்கை அழைப்பு விடுத்துள்ளது.

இந்த நிகழ்வு இந்த ஆண்டின் இரண்டாவது அரையாண்டில் இடம்பெறும். இந்த நிகழ்வில் பங்கேற்க ரஷ்ய கடற்படைக்கும் அழைப்பு விடுத்துள்ளோம்.

ரஷ்ய இராணுவத்தின் அனுபவங்களின் மீது இலங்கை ஆர்வம் கொண்டுள்ளது. அவற்றைப் பெற்றுக் கொள்ள விரும்புகிறது" என்று தெரிவித்துள்ளார். (த)

## கூட்டணி தொடர்பாக சு.க. - பெரமுன பேச்சு!

கொழும்பு, பெப். 10

சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியை உள்ளடக்கிய பெரும் கூட்டணி ஒன்றை அமைப்பது குறித்து இரண்டு கட்சிகளுக்கும் இடையில் பேச்சு நடத்தப்பட்டுள்ளன. நேற்றுமுன்தினம் இரவு, அரச தலைவர் மைத்திரிபால சிறி சேனவின் இல்லத்தில் இந்தப் பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன.

சுமார் 2 மணித்தியாலங்கள் நடந்த இந்தப் பேச்சில், மைத்திரிபால சிறிசேன, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச, பொதுமக்கள் முன்னணியின் தலைவர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாசிறி ஜெயசேகர, மகிந்த அமரவீர, தினேஸ் குணவர்த்தன, விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, டக்ளஸ் தேவானந்தா, வாசுதேவ நாணயக்கார, ஏ.எச்.எம்.அதாவுல்லா, பேராசிரியர் திஸ்ஸ விதாரண உள்ளிட்டவர்கள் பங்கேற்றுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் பரந்துபட்ட கூட்டணியை அமைப்பதற்கான, பேச்சு நடத்துவதற்கான குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

டலஸ் அழகப்பெரும தலைமையிலான இந்தக் குழுவில், தயாசிறி ஜெயசேகர, திலங்க சுமதிபால, அதாவுல்லா, டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இந்தக் குழுவின் அமைப்பாளராக உதய கம்மன்பில நியமிக்கப்பட்டுள்ளார்.

இரண்டு வாரங்களுக்குள் புதிய அரசியல் கூட்டணியை உருவாக்கும் பொறுப்பு இந்தக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கட்சித் தலைவர்களுடன் இந்தக் குழு நடத்தும் பேச்சுக்களை அடுத்து, எதிர்வரும் 16, 17ஆம் நாள்களில், மைத்திரிபாலவுடன் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த)

## கிராமப் பாடசாலைகளை தரமுயர்த்துவது அவசியம்

### *அமைச்சர் சாகல தெரிவிப்பு*

கொழும்பு, பெப். 10

பாடசாலைப் பிள்ளைகளின் கல்வியிலேயே இந்த நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது. கிராமப் பிள்ளைகளின் கல்வித் தரத்தை உயர்த்தும் பொருட்டு அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும். இவ்வாறு துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்னாயக்க தெரிவித்தார். பல்லேகம பாடசாலையில் நடந்த இல்லமெய்வன்மைப் போட்டியில் முதன்மைவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிராமத்துப் பாடசாலைப் பிள்ளைகளின் கல்வியிலேயே நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது. அவற்றை அபிவிருத்தி செய்ய வேண்டும். கிராமப் பாடசாலை மாணவர்களின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். கல்வியுடன் விளையாட்டிலும் ஈடுபட்டு இந்தப் பிள்ளைகளின் ஒழுக்கம் மற்றும் தலைமைத்துவப் பண்புகளை வளர்ப்பதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் - என்றார். (த-31)

சூரியகாந்தி
உதயன்



கட்டுரை

சந்திரசேகர ஆசாத்

கடந்த நான்காம் திகதி இலங்கையின் சுதந்திரதினம் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் உட்பட அரசியல் பிரமுகர்களும், முப்படைத்தளபதிகள், பொலிஸ் மா அதிபர் உட்பட ஆயுதப்படையினரும் கலந்துகொண்டு அதை ஒரு தேசிய விழாவாக வெளிக்காட்டியிருந்தனர்.

முன்னாள் அரச தலைவர்கள் கலந்து கொள்வது ஒரு மரபாகப் பேணப்பட்டு வந்த போதிலும் திருமதி சந்திரிகா விஜயகுமாரணதுங்க இதில் கலந்து கொள்ளவில்லை. முப்படைகளின் அதி உயர் பட்டம் பெற்றவரான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவும் சமூகமளிக்கவில்லை என்பவை குறிப்பிடத்தக்கவை. எப்படியிருப்பினம் இராணுவ அணிவகுப்பு, வானூர்திகளின் சாகச விளையாட்டுகள், அரச தலைவரின் உரை, விழவின் ஆரம்பத்தில் சிங்களத்திலும் நிறைவின்போது தமிழிலும் தேசிய கீதம் இசைக்கப்பட்டமை போன்றவை சம்பிரதாயபூர்மாக இடம்பெற்று நிகழ்வைச் சிறப்பித்தன.


(அடுத்த பக்கம்)



# சுதந்திரமிழந்த நாட்டின் சுதந்திர தின வைபவம்







**நாடு முழுதும் வாரக் கணக்கில் சுதந்திரத்தைக் கொண்டாடும் ஜப்பான்**

ஜப்பான் நாட்டில் சுதந்திர தினத்தையொட்டிய விழா ஒரு வாரத்துக்கு மிகவும் சிறப்பான முறையில் கொண்டாப்படும்.
அந்த நாள்களில் ஜப்பானில் ஓர்கிட், ஐந்தூரியம் உட்பட அழகிய மலர்கள் பூத்துக் குலுங்குமெனவும், முழு நாடும் மலர்கள் நிறைந்த நந்தவனமாகக் காட்சியளிக்குமெனவும், அவற்றைக் கண்டு களிக்க





வரும்படியும் ஜப்பானியர்கள் வெளிநாட்டிலுள்ள தமது நண்பர்களுக்கு அழைப்பு விடுப்பர். அந்த ஒரு வாரத்தில் பாரம்பரிய கலை நிகழ்வுகள், வானவேடிக்கைகள், தற்காப்புக் கலை உட்படப் பாரம்பரிய வீர விளையாட்டுக்களின் காட்சிப்படுத்தல்கள், கலைநயம்மிக்க வானவேடிக்கைகள், உறவினர் வீடுகளுக்குச் சென்று விருந்துண்ணல் என ஜப்பான் எங்கும் ஆனந்தக் களியாட்டங்கள் கோலோச்சும். வெளிநாட்டிலிருந்து செல்பவர்கள் அழகிய ஆனந்தமான ஜப்பானைக் கண்டுதாமும் அதில் கலந்து மகிழ்ச்சியடைவர். இந்த முறை சுதந்திர நிகழ்வின்போது இலங்கைக்கு வந்திருந்த வெளிநாட்டவர்கள் கண்டிருக்கக் கூடிய காட்சிகளோ ஜப்பானில் அவர்கள் அனுபவித்தவைக்கு நேரெதிரானவையாகவே அமைந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

**சுதந்திர தினக் கொண்டாட்டமும் மறுபுறம் நிகழ்ந்த போராட்டமும்**

காலி முகத்திடலில் பறந்து கொண்டிருந்த வாளேந்திய சிங்கக் கொடிகளின் நடுவே சுதந்திர தின வைபவம் நடந்து கொண்டிருந்தபோது அந்த இடத்துக்கு அண்மையில் அமைந்திருந்த துறைமுகத்தில் நாட்டின் பொருளாதாரத்தையே உலுக்கக் கூடிய சுங்கத் திணைக்கள அதிகாரிகளின் போராட்டம் இடம்பெற்றுக் கொண்டிருந்தது. ஏற்றுமதி, இறக்குமதியை நம்பியுள்ள தாராளவாதப் பொருளாதாரத்தில் சுங்கத் திணைக்களம் ஒரு மைய அலகு என்பது சாதாரண குடிமகன் கூட அறிந்த விடயமாகும். இந்த வேலை நிறுத்தமானது சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர், அவருடைய பதவியிருந்து அகற்றப்பட்டதற்கு எதிரானதாக வெளிப்படையாகத் தோன்றினாலும் வெளியான சில தகவல்களின்படி இது இலங்கையின் சுயாதி பத்தியத்துக்கு எதிரான ஒரு சவால் என்றே தெரிய வருகிறது. வெளிநாடு ஒன்றிலிருந்து வானூர்தி மூலம் கட்டுநாயக்கா வானூர்தி நிலையத்துக்குக் கொண்டு வரப்பட்ட பெருந்தொகையான ஆயுதங்கள் சுங்க அதிகாரிகளின் பார்வைக்கு உட்படுத்தப்படாமலே சிறிய வானூர்திகள் மூலம் நடுக்கடலில் உள்ள ஒரு கப்பலுக்கு மாற்றப்பட்டன. இது சுங்க விதிகளை மீறிய ஒரு நடவடிக்கை என்பதால் சுங்கத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி. பி. எம்.எம்.சார்ள்ஸ் கேள்வி எழுப்பியதாகவும், அவர் கேள்வியெழுப்பியமை பாதுகாப்புத் தொடர்பான ஒப்பந்தங்களின் இரகசியங்களை மீறும் செயல் என அமெரிக்கத் தரப்பு அதிருப்தி தெரிவித்ததாகவும், அதன் காரணமாகவே பி.எம்.எம். சார்ள்ஸ் பதவியிலிருந்து நீக்கப்பட்ட தாகவும் தகவல்கள் வெளியாகின. அவர் நீக்கப்பட்ட பின்பு ரியல் அட்மிறல் சோமல் பெர்னாண்டோ அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டார். இதற்குப் பல தரப்புகளாலும் வலுவாக எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. சுங்க அதிகாரிகளின் போராட்டம் தொடர்ந்தது. இதைத் திருமதி சார்ள்சை மீள்நியமனம் செய்வதற்கான போராட்டமாக மட்டும் கருத முடியாது. அடிப்படையில் இது எமது நாட்டின் சட்ட திட்டத்தைப் பேண முயன்ற அதிகாரி ஒருவரை வெளிநாட்டின் அழுத்தத்தின் பேரில் பதவி நீக்கியமையே. இது இந்த நாட்டின் சுயாதிபத்தியத்தை மறுதலிக்கும் செயலாகும். திருமதி சாள்சை அதே பதவியில் நியமிப்பதற்கு அமைச்சரவை முடிவெடுத்திருந்தது. எப்படியிருப்பினும் ஒருபுறம் சுதந்திர தின விழாவைச் சிறப்பித்துக்கொண்டு மறுபுறம் அதை அவமதிக்கும் வகையில் நடந்துகொண்டமையே இந்தச் சம்பவத்தின் சாரம் என்பது தெளிவு.

**சுதந்திரப் பறிப்பின் ஆரம்பம்**

இலங்கை மக்களின் சுதந்திரம் பறிக்கப்படுவதானது 1978ஆம் ஆண்டு இலங்கையின் அரச தலைவராக இருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனவால் கொண்டுவரப்பட்ட புதிய அரசமைப்புடன் ஆரம்பிக்கப்பட்டு விட்டது.
அந்நிய முதலீடுகளைக் கவர்வது என்ற பெயரில் வெளிநாட்டு முதலீட்டா ளர்களுக்காகச் சுதந்திர வர்த்தக வலயம் ஆரம்பிக்கப்பட்டது. சுதந்திர வர்த்தக வலயத்திலுள்ள தொழில் நிறுவனங்களில் பணிபுரிவோர் தமது கோரிக்கைகளை முன்வைத்து வேலைநிறுத்தம் செய்ய முடியாது.
அப்படி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டால் அது சட்டவிரோதம். போதிய சம்பளம் வழங்காமை உட்படத் தொழிலாளர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராகப் போராடத் தொழிலாளர்களிடம் உள்ள ஒரே ஆயுதம் வேலை நிறுத்தம்.
அந்தச் சுதந்திரம் அன்றே அந்தத் தொழிலாளர்களிடமிருந்து பறிக்கப்பட்டுவிட்டது. இது இன்றுவரை மாறியதாக இல்லை. பின்வந்த மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் சில கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டம் நடத்தியபோது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டமையும் பலர் காயமடைந்தமையும் மறந்துவிட முடியாது.
இதில் நகைப்பு என்னவெனில் அந்தத் தொழிலாளர்களும் தாங்கள் சுதந்திர தேசத்தின் மக்கள் என இன்றுவரை நம்பிக் கொண்டிருக்கின்றனர்.

**போலிச் சுதந்திரமே நிலவுகிறது**

கடந்த ஒக்ரோபர் மாதம் ரணில் விக்கிரமசிங்கவைத் தலைமை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கிவிட்டு மகிந்த ராஜபக்சவைத் தலைமை அமைச்சராக நியமித்தது, நாடாளுமன்றத்தைக் கலைத்து உட்பட அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் நடவடிக்கைகளை, இலங்கையின் சுதந்திரமான செயற்பாட்டை, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான் ஆகிய நாடுகள் தங்கள் கையில் எடுப்பதற்குப்பலவழிகளிலும்முயற்சித்தன. குறித்த விடயத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அப்போது நடந்து கொண்ட விதம் தவறானது என்பது இறுதியில் நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டாலும், நாட்டின் அரச தலைவரான மைத்திரிபால சிறிசேன எவ்வாறு வல்லரசுகளால் சுற்றி வளைக்கப்பட்டுத் தோற்கடிக்கப்பட்டார் என்பதையும் குறித்த சம்பவம் நாட்டு மக்களுக்குத் தெரியப்படுத்தியிருந்தது. இலங்கை உண்மையில் சுதந்திரமாக இல்லை என்பதையே அது வெளிப்படுத்தியது. மைத்திரியின் அதிரடியை அடுத்து மகிந்த புதிய அமைச்சரவையை உருவாக்கும் முயற்சிகளில் இறங்கியதும், நெடுஞ்சாலைகள் அமைப்பதற்கு வழங்கிவரும் நிதியை இடைநிறுத்துவதாக அமெரிக்கா அறிவித்தது. தொடருந்துச் சேவைக்கு வழங்கவுள்ளதாகத் தெரிவித்த நிதியை மறுபரிசீலனைக்கு உட்படுத்தப் போவதாக ஜப்பான் கூறியது. ஐரோப்பிய ஒன்றியம் ஜி.எஸ்.பி. வரிச் சலுகையை நிறுத்தியது. அதாவது இலங்கையில் எவர் ஆட்சியதிகாரத்தில் இருப்பது என்பதைத் தீர்மானிக்கு மளவுக்கு இலங்கையின் சுதந்திரம் பலவீனமானது என்பதையும் அடித்தளமற்றது என்பதையும் நாம் இதிலிருந்து புரிந்து கொள்ள முடியும்.

கள் எவ்வளவு முக்கியமானவை என்பதை அனைவராலும் புரிந்து கொள்ள முடியும். இந்த நிலையில் கொழும்புத்துறைமுக நகரம், துறைமுகத்தின் தென்பகுதியிலுள்ள கொள்கலன் இறங்குதுறை, அம்பாந்தோட்டைத் துறைமுகம் என்பன சீனாவுக்கு 99 வருடக் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளன. 15ஆயிரம் ஏக்கர் நிலம் அம்பாந்தோட்டையில் கைத்தொழில் பேட்டைக்கு வழங்கப்படவுள்ளது. மத்தளன் வானூர்தி நிலையம், பலாலி வானூர்தி நிலையம், காங்கேசன்துறைத் துறைமுகம் என்பன இந்தியாவுக்கு வழங்கப்பட்டுள்ளன. அமெரிக்க இராணுவத்தின் தகவல் தொழில்நுட்பப் பரிமாற்றம், பாதுகாப்புப் பயிற்சி என்பவற்றுக்காக இராணுவத்தளம் அமைப்பதற்காகத் திருகோணமலையில் 3ஆயிரத்து 800 ஏக்கர் நிலம் வழங்கப்படுவது தொடர்பாகக் கடந்த ஒக்ரோபர் மாதம் பேச்சுகள் நடந்தன. மேலும் ஒரு சுதந்திர வர்த்தக வலயம் அமைப்பதற்காக நிலம் வழங்கப்படவுள்ளது. இது கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலயத்தை விட மூன்று மடங்கு பெரியதாகும். இவ்வாறு நாடு அந்நிய நாடுகளுக்குத் தாரை வார்க்கப்படும் போது கொழும்பில் கொண்டாடப்படும் சுதந்திரதினம் என்பது ஒரு கேலிக் கூத்தாகவே பார்க்கப்படுகிறது.
மண்ணையும் இறைமையையும் ஒருபுறம் வல்லரசு நாடுகளுக்கு விற்பதுடன் மறுபுறம் தமிழ் மக்களின் சுதந்திரம் பறிக்கப்படுகிறது. தமிழ் மக்களின் காணிகள் விடுவிக்கப்படவில்லை. அரசியல் கைதிகளுக்கு நீதி வழங்கப்படவில்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இந்த நிலையில் வடக்குக் கிழக்கில் தமிழ் மக்கள் இலங்கையின் சுதந்திர நாளைக்




**தாரை வார்க்கப்பட்டுள்ளது நாடு**

நாட்டின் பல கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள், 99 வருடக் குத்தகை என்ற பெயரிலும், பொருளாதார அபிவிருத்தி ஒப்பந்தங்கள், பாதுகாப்பு உடன்படிக்கைகள் என்ற வடிவங்களிலும் அந்நிய நாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. தொடர்ந்தும் நாட்டின் சில பகுதிகளை வெளிநாடுகளுக்கு வழங்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. நான்கு பக்கங்களும் கடலால் சூழப்பட்ட ஒரு நாட்டுக்குத் துறைமுகங்கள், வானூர்தி நிலையங்

கரிநாளாகக் கறுப்புக்கொடிகளேற்றிக் கடைப்பிடித்தமை தவறாக இருக்க முடியாது.
தமிழ் மக்களின் மன உணர்வுகளை அலட்சியம் செய்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சுதந்திர வைபவத்தில் பங்கு பற்றியதாகவும் விமர்சனங்கள் எழுந்தன. எனவேதான் இந்தச் சுதந்திர தின வைபவத்தைச் சுதந்திரமிழந்த ஒரு நாட்டின் போலி வைபவமாகவே கருத முடிகிறது.

# பாதிரியார்களின் பாலியல் இச்சைகள்



## அதிர்ச்சியளிக்கும் உண்மைகள்...!

ஐக்கிய அரபு இராச்சியத்துக்குப் பயணம் மேற்கொண்டிருந்த பாப்பரசர் போப் பிரான்சிஸ் முதல் தடவையாக ஒரு விடயத்தைப் பகிரங்கமாக ஏற்றுக்கொண்டார். உலகளவில் அதிர்ச்சியை ஏற்படுத்திய விடயம் அது. கன்னியாஸ்திரிகள் மீதான பாதிரிமார்களின் பாலியல் சேஷ்டைகள், வதைகள் உண்மையே என்பதை முதல் தடவையாகப் போப் பிரான்சிஸ் ஏற்றுக்கொண்டமை கவனம்பெற்றது. உலகளவில் இருந்து வரும் இந்தப் பிரச்சினை பல நாடுகளிலும் இனம் காணப்பட்டிருக்கிறது. 2014ஆம் ஆண்டிலிருந்து 2016ஆம் ஆண்டுக்கு இடையில் கன்னியாஸ்திரி ஒருவரைப் பாலியல் வன்புணர்வு செய்தார் என்ற குற்றச்சாட்டில், இந்தியாவின் பஞ்சாப் மாநில ஜலந்தர் மறைமாவட்ட ஆயர் பிரான்கோ கைதாகினார். அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கன்னியாஸ்திரிகள் போராட்டம் நடத்தினர். இந்தப் போராட்டத்தில் பங்குகொண்ட கன்னியாஸ்திரிகளைத் திருச்சபை இடமாற்றம் செய்திருந்தது. நிலமை இவ்வாறிருக்க, இந்தியா முழுவதும் பாதிரியார்களால் பாலியல் தொல்லைக்கு ஆளாகும் கன்னியாஸ்திரிகள் குறித்தும், அவர்களின் நேரடி அனுபவங்கள் குறித்தும் செய்தி நிறுவனம் ஒன்று ஆய்வொன்றை மேற்கொண்டது.

### அந்த ஆய்வு தரும் அதிர்ச்சி

பாதிரியார்கள் அவர்களின் அந்தரங்க அறைக்குள் வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்றதையும் பாலியல் உறவுக்கு உட்படுமாறு வற்புறுத்தியதையும் கன்னியாஸ்திரிகள் ஆதங்கத்துடன் கூறினர். இயேசு பிரானின் தூதர்கள் என்று நம்பிய பாதிரியார்களே தங்களின் உடலில் அத்துமீறிக் கை வைத்ததையும் இன்னும் பிறசம்பவங்களையும் பல்வேறு தேவாலயங்களில் பணிபுரியும் கன்னியாஸ்திரிகள் தயங்கித் தயங்கி வெளியே கூறியுள்ளனர். தனது கதையை ஆரம்பிக்கும் கன்னியாஸ்திரி ஒருவர், "அவர் குடித்திருந்தார்" என்று கூறினார். சில நிமிடங்களிலேயே தொடர்ச்சியாக நடந்த பாலியல் அத்துமீறல் குறித்துக் கூறியுள்ளார் பிறிதொரு கன்னியாஸ்திரி. கத்தோலிக்கத் தலைமை, தங்களைக் காப்பதில் அதிக சிரத்தை எடுத்துக் கொள்வதில்லை என்றும் வேதனை தெரிவித்தார். ஆசியா, ஐரோப்பா, தென் அமெ ரிக்கா மற்றும் ஆபிரிக்கா உள்ளிட்ட பகுதிகளில் கன்னியாஸ்திரிகளைப் பாலியல் வதைக்கு உள்ளாக்கிய பாதிரியார்கள் மற்றும் பேராயர்கள் குறித்து வத்திக்கான் நிர்வாகத்துக்குத் தெரியும் என்றும் அதை நிறுத்துவதற்குக் குறைந்த அளவிலான முயற்சிகளையே வத்திக்கான் எடுத்தது எனவும் கடந்த ஆண்டின் அறிக்கை ஒன்று கூறுகிறது. சில கன்னியாஸ்திரிகள், "பாலியல் முறைகேடு எல்லா இடத்திலும் வழக்கமான ஒன்றுதான்" என்று நினைக்கின்றனர். சிலர், "அரிதான ஒன்று" என்கின்றனர். எவரும் இதுகுறித்து வெளிப்படையாகப் பேசத் தயாராக இருப்பதில்லை. பெரும்பாலானோர் தங்களின் அடையாளம் மறைக்கப்பட வேண்டும் என்ற விதியின் பேரில் தமக்கு இழைக்கப்பட்ட அநீதியைப் பேசியுள்ளனர்.

### போராட்டமும் அதன் விளைவுகளும்


கடந்த ஆண்டில், கேரள மாநிலத்தில் கன்னியாஸ்திரியைப் பாலியல் வன்புணர்வு செய்ததாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டில் பேராயர் பிராங்கோ மூலக்கல் கைது செய்யப்பட்டார். ஆனால் அதற்கு முன்பாக அந்தக் கன்னியாஸ்திரி எதிர்கொண்ட பிரச்சினைகள் ஏராளம். 2014ஆம் ஆண்டு முதல் 2016ஆம் ஆண்டு வரை கோட்டயம் அருகே குருவிளங்காடு பகுதியில் உள்ள தேவாலயத்தில் பணியாற்றியவர் பாதிரியார் பிராங்கோ மூலக்கல். இவர், தான் பணியாற்றிய காலத்தில் கன்னியாஸ்திரி ஒருவரை மிரட்டி 13 முறை வன்புணர்வில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது. இது தொடர்பாகப் பாதிக்கப்பட்ட கன்னியாஸ்திரி அப்போது தேவாலய நிர்வாகிகளிடம் முறைப்பாடு அளித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை. இதையடுத்து பாதிக்கப்பட்ட கன்னியாஸ்திரி குருவிளங்காடு பொலிஸில் முறைப்பாடளித்துள்ளார். குற்றச்சாட்டுக்கு ஆளான பாதிரியார் பிராங்கோ மூலக்கல், பஞ்சாப் மாநிலம் ஜலந்தரில் பேராயராக இருந்து வருகிறார். ஆனால், கன்னியாஸ்திரி கூறும் குற்றச்சாட்டு ஆதாரமற்றது, பொய்யானது என்று பிராங்கோ மறுத்து வந்தார். முறைப்பாடு அளித்து 70 நாள்கள் ஆகியும் பேராயர் கைது செய்யப்படவில்லை என்று குற்றம் சாட்டிய கன்னியாஸ்திரிகள் 5 பேர் 14 நாள்கள் போராட்டம் நடத்தினர். உலகின் கவனத்துக்கு இந்த நிகழ்வு வந்ததும் பாதிரியார் கைதானார்.

### மற்றொரு கன்னியாஸ்திரி மனம் திறக்கிறார்

டெல்லியின் வறுமையான பகுதிகளில் பணியாற்றி வரும் கன்னியாஸ்திரி ஒருவரிடம் பேசியபோது, "15 ஆண்டுகளுக்கு முன்னால், ஒரு தேவாலயத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தேன். அந்தப் பாதிரியாருக்கு என் மேல் ஈர்ப்பு இருந்ததுபோல உணர்ந்தேன். ஒரு நாள் இரவு நிகழ்வொன்றுக்குச் சென்ற பாதிரியார் இரவு தாமதமாக வந்தார். 9.30 மணிக்கு மேல் இருக்கும். என்னுடைய அறையைத் தட்டினார். "உன்னைப் பார்க்க வேண்டும். உன்னுடைய ஆன்மிக வாழ்க்கை குறித்துப் பேச வேண்டும்" என்றார். நான் கதவைத் திறக்கவில்லை. வலுக்கட்டாயமாகத் தள்ளிக் கதவைத் திறந்தார். என்னால் போதையின் வாசனையை உணர முடிந்தது. "நீங்கள் நிதானத்தில் இல்லை. உங்களுடன் பேசத் தயாராக இல்லை" என்றேன். முத்தம் கொடுக்க முயன்றார். எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் தொட்டார். அவரை வேகமாகத் தள்ளிவிட்டுவிட்டுக் கதவைப் பூட்டினேன். அது பாலியல் பலாத்காரம் இல்லை என்றாலும் அது ஓர் அச்சுறுத்தும் நிகழ்வாக இருந்தது. இதுகுறித்து என்னுடைய மூத்த கன்னியாஸ்திரியிடம் சொன்னேன். அவர், பாதிரியாருடன் மீண்டும் சந்திப்புகள் நிகழாத வண்ணம் பார்த்துக்கொண்டார். நடந்தவை குறித்து, தேவாலய அதிகாரிகளுக்குப் பெயரிடப்படாத கடிதங்களை எழுதினேன். ஆனால், நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை" என்றார்.

### புனிதத்துக்கும் வேட்டையாடலுக்கும் இடையில்...

கத்தோலிக்க வரலாறு முழுவதும் பெண்கள் தங்களுடைய புனிதத் தன்மையைக் காத்துக் கொள்வதற்காக, தியாகிகளாக மாறி உயிர் துறந்த சம்பவங்கள் நிறைய நிகழ்ந்திருக்கின்றன. புனிதர் அகதா, திருமணம் செய்துகொள்ள மறுத்ததால், மார்பகங்களைக் கிழித்துக் கொல்லப்பட்டார். தனது புனிதத்தன்மையைக் காத்ததற்காகப் புனிதர் லூசி, உயிருடன் எரித்துக் கொல்லப்பட்டார். வன்புணர்வு செய்ய முயன்ற ஒருவரால் புனிதர் மரியா கொரேட்டி, 11 வயதில் கொல்லப்பட்டார். "இது புனிதத்துக்கும் வேட்டையாடலுக்கும் இடையிலான போராட்டம்" என்கிறார் டெல்லியைச் சேர்ந்த தத்துவவியல் அறிஞர் ஷாலினி மூலக்கல்.



### ஏன் கன்னியாஸ்திரிகள் முறையிடுவதில்லை?

பாதிரியாருக்கு எதிராக முறையிடுவது என்றால் தேவாலய நிர்வாகத்தில் அவர்களுக்கு மேலாக இருப்பவர் மீது குற்றம் சுமத்துவது. இது ஏராளமான வதந்திகளுக்கும் தேவாலய அரசியலுக்கும் வழிவகுக்கும். இது அவரவர் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கலாம். அதுமட்டுமல்லாமல் மத ரீதியான அரசியல், பெண்கள் என்றாலே குறைச்சலாக மதிப்பிடும் நம்பிக்கை உள்ளிட்டவை கன்னியாஸ்திரிகளின் அமைதிக்கு ஊக்கம் அளித்துவிடுகின்றன. இன்னும் சில கன்னியாஸ்திரிகளோ, தங்களது முறைப்பாடு தாங்கள் சார்ந்துள்ள தேவாலயத்தின் பெயரைக் குலைக்கும் என்றும் ஏனைய மத அமைப்புகளின் விமர்சனங்களை எதிர்கொள்ள வேண்டும் எனவும் அஞ்சுகின்றனர். குடிபோதையில் இருந்த பாதிரியாரை எதிர்கொண்ட கன்னியாஸ்திரி, "நான் உண்மையைச் சொன்னால், தனிமைப்படுத்தப்படுவேனோ என்ற பயம்தான் வெளியே சொல்லாததற்கு முக்கிய காரணம். பாதிரியார்களுக்கு எதிராக முறை யிடும்போது, தங்களின் சொந்த மதத்தினரையே, தங்களின் மத உயரதிகாரிகளையே எதிர்க்க வேண்டி வருகிறது" என்கிறார். கன்னியாஸ்திரி ஷாலினி மூலக்கல் மேலும் கூறும்போது, "நாங்கள் கன்னியாஸ்திரிகளாகவே இருந்தாலும் கூட, அமைதியாக இருக்கவே முயற்சிக்கி றோம். பாலியல் அனுபவங்களை எதிர்கொள்ளும் பெண், அதை மறைத்து எல்லாம் சரியாக இருக்கிறது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தவே முயல்கிறாள்" என்றார்.

*தகவல் - தி ஹிந்து தமிழ்*


> "இயேசு பிரானின் தூதர்கள் என்று நம்பிய பாதிரியார்களே தங்களின் உடலில் அத்து மீறிக் கை வைத்ததையும் இன்னும் பிறசம்பவங்களையும் பல்வேறு தேவாலயங்களில் பணிபுரியும் கன்னியாஸ்திரிகள் தயங்கித் தயங்கி வெளியே கூறியுள்ளனர்.

கட்டுரை

உசிலமணி

# விக்கிக்கும் அரசியல் தெரியும்...!

ஈ.பி.ஆர்.எல்.எவ். முன்னணி ஆயுதக் குழுவாக செயற்பட்ட காலத்தைத் தற்போது கைவிட்டு. அப்போது நடந்தவற்றைக் கெட்ட கனவாக மறந்து இன்றைய அரசியல் நீரோட்டத்தில் தமிழ் மக்களின் விடுதலை ஒன்றையே முதன்மைக் கோரிக்கையாக ஏற்றுக்கொண்டு தமது கொள்கை வழியில் உண்மையாகவும் நேராகவும் நின்று செயற்பட முன் வந்துள்ளார்கள். அதனை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று மாநாட்டில் உரை நிகழ்த்திய விக்னேஸ்வரனுக்கு. 2014ஆம் ஆண்டு அது தெரியாமல் போனதா?



நெற்றியில் பெரியதொரு குங்குமப் பொட்டு. நெற்றியை மூடிய பட்டை. நிமிர்ந்த தோற்றம். எப்போதுமே வேட்டி சட்டை. மக்களைக் கவர்ந்திழுக்கும் பாரம்பரியத் தோற்றம். போதாக்குறைக்கு எழுதி வாசித்தால் அரங்கத்தைத் தன்பக்கம் கட்டிப்போடும் வசியம். விக்னேஸ்வரன் வடக்கில் இன்னமும் நிலைத்து நிற்பதற்கு இவைதான் அவருக்குப் பலம். தன் மீதான விம்பம் ஒன்று மக்கள் மத்தியில் கட்டமைக்கப்பட்டிருப்பதை நன்கு உணர்ந்த அவர், 5 ஆண்டுகளில் படித்துத் தேறி இப்போது அரசியலில் பழம் தின்று கொட்டை போட்டவர்போல் ஆகிவிட்டார். தனது இருப்புக்கு, தனது வாக்கு வங்கிக்கு எவர் எவருடன் கூட்டுச்சேர வேண்டும் என்று நன்றாகவே 'கணக்கு' வைத்திருக்கின்றார். கொள்கை, கோட்பாடு எல்லாமே அதற்குப் பின்தான். முன் ஒரு பேச்சு, பின் ஒரு பேச்சு என்ற அரசியல்வாதிகளின் பாலபாடத்தில் விக்கி கைதேர்ந்துவிட்டார். சராசரித் தமிழ் அரசியல்வாதிகள் போன்று அவரும் மாறிவிட்டார்.

### ஈ.பி.ஆர்.எல்.எவ். மாநாட்டில் விக்கியின் பிரசங்கம்

சுரேஸ் பிரேமசந்திரன் அணியின் ஈ.பி.ஆர்.எல்.எவ். மாநாடு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடந்தது. வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், தமிழ் மக்கள் கூட்டணியின் நிறுவுநரும் செயலாளர் நாயகமுமான விக்னேஸ்வரன் முதன்மை விருந்தினராக அதில் பங்கேற்றார். ஈ.பி.ஆர்.எல்.எவ். மாநாட்டில் தான் ஏன் பங்கேற்றார் என்பதை நியாயப்படுத்த நீட்டி முழக்கி அங்கே அவர் ஒரு பிரசங்கத்தையே நடத்தி முடித்தார். "கடந்த கால கசப்பான சம்பவங்களை மீண்டும் மீண்டும் கூறிக் கொண்டு 'நான் சுற்றவாளி நீ குற்றவாளி' என்று ஒருவரோடு ஒருவர் நாம் மோதிக்கொண்டிராமல் ஒரு கொள்கையின் கீழ் கட்சிகள் ஒன்றுபட்டுச் செயற்படுவதே காலத்தின் தேவை என்பதை அன்று தம்பி பிரபாகரன் உணர்த்தியதைப் புரிந்துகொண்டே நாம் செயற்பட வேண்டும். இதையே மக்கள் விரும்புகின்றார்கள். 'குற்றம் பார்க்கில் சுற்றமில்லை' என்பது ஆன்றோர் வாக்கு. கடந்த காலத்தில் நாம் விட்ட தவறுகளை உணர்ந்தவர்களாக, கடந்த காலத்தில் இருந்து பாடங்களைக் கற்றுக்கொண்டவர்களாக, ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கை அடிப்படையில் நாம் பல கட்சிகளுடன் இணைந்து செயற்படவிருக்கின்றோம். கடந்த காலப் பிழைகளை நாம் தொடர்ந்தும் செய்யாதிருப்பதற்கு நாம் யாவரும் சேர்ந்து உழைக்க முன்வர வேண்டும். பிழை செய்வது மனித சுபாவம் மன்னித்தல் தெய்வ சுபாவம் என்பார்கள். யார் பிழை செய்தோம் என்பது முக்கியமல்ல. யாரேனும் பிழைகள் செய்திருந்தால் அவற்றை மன்னித்து கொள்கைகள் அடிப்படையில் சேர்ந்து முன்னேறுவதே நாம் தமிழ் மக்களுக்குச் செய்யக் கூடிய பலத்த சேவையாகும். இதனைத் தம்பி செய்தார். ஏன் எம்மால் முடியாது? தம்பியின் மிகப் பெரிய எதிரி அந்தக் காலத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ்வே! ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆயுதக் குழுவாகச் செயற்பட்ட காலத்தைத் தற்போது கைவிட்டு, அப்போது நடந்தவற்றைக் கெட்ட கனவாக மறந்து இன்றைய அரசியல் நீரோட்டத்தில் தமிழ் மக்களின் விடுதலை ஒன்றையே முதன்மைக் கோரிக்கையாக ஏற்றுக்கொண்டு தமது கொள்கை வழியில் உண்மையாகவும் நேராகவும் நின்று செயற்பட முன் வந்துள்ளார்கள். அதை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அந்த நல்ல காரணத்துக்காகவே நான் இந்த நிகழ்வில் கலந்து கொள்வதற்கு எனது சம்மதத்தைத் தெரிவித்திருந்தேன்" என்று கூறினார்.

### சுயநலம் களையப்பட்டதா?

இதே விக்னேஸ்வரன், 2013ஆம் ஆண்டு மாகாணசபைத் தேர்தலில் வெற்றி பெற்று, வடக்கு மாகாண முதலமைச்சராக ஆளும் கட்சி உறுப்பினர்களின் பதவியேற்பு நிகழ்வில் ஆற்றிய உரை அவருக்கு மறந்து போயிருக்கலாம். அல்லது வசதிக்காக அவர் அதை நினைவுபடுத்த மறந்திருக்கலாம். "பொதுவாழ்கையில் வலியுறுத்தப்படும் ஏழு கொள்கைகளை இந்தத் தருணத்தில் எடுத்தியம்புவது உசிதம் என்று நான் கருதுகின்றேன். முதலாவது சுயநலமின்மை. அதாவது பொது வாழ்க்கையில் நுழைபவர்கள் எப்பொழுதுமே பொதுநலம் கருதியே முடிவு எடுக்க வேண்டும். தமக்கோ தமது குடும்பத்தாருக்கோ, தமது நண்பர்களுக்கோ, தமது தம்பிமார்களுக்கோ நிதி சார்பான அல்லது வேறுவகையான நன்மைகள் பெறக் கருதியோ முடிவுகள் எடுக்கக் கூடாது" என்று குறிப்பிட்டார்.

"தமது தம்பிமார்களுக்கோ" என்ற வசனத்தை இரண்டு தடவைகள் அவர் அழுத்திக் கூறினார்.

அவர் ஏன் அன்று அவ்வாறு கூறினார் என்பது பலருக்கு மறந்து போயிருக்கலாம். மாகாணசபைத் தேர்தலில் ஒற்றுமையை வலியுறுத்தி வெற்றி பெற்றவர்கள், பதவியேற்புக்கு இடையிலேயே அமைச்சுப் பதவியால் பிரிந்து நின்றார்கள். அப்போது நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த சுரேஸ் பிரேமச்சந்திரன், தனது தம்பி சர்வேஸ்வரனுக்கு அமைச்சுப் பதவியை விக்னேஸ்வரனிடம் கேட்டிருந்தார். அதை விக்னேஸ்வரன் வழங்கவில்லை. அந்தக் கோபத்தில் பதவியேற்பு நிகழ்வில், சுரேஸ் பிரேமசந்திரனும், சர்வேஸ்வரனும் பங்கேற்கவில்லை. தற்போது சுரேஸ் பிரேமசந்திரன் சுயநலம் களைந்துவிட்டாரா? பொதுநலம் கருதி முடிவு எடுக்கத் தொடங்கிவிட்டாரா? ஒருவேளை மீண்டும் பதவி கிடைக்கவில்லையாயின் அவர் என்ன செய்வார்? இவை ஒன்று பற்றியும் விக்னேஸ்வரன் தனது உரையில் தொட்டும் பார்க்கவில்லை.

### ஆயுதக் குழுவுடன் இணைந்து செயற்பட முடியாது என்றார்!

2014ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதலமைச்சரின் அமைச்சில் கூட்டம் நடந்தது. தமிழ் அரசுக் கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட், ரெலோ கட்சிகளின் பிரதிநிதிகள் அதில் பங்கேற்றனர். சுரேஸ் பிரேமசந்திரனும் அதில் கலந்து கொண்டார். அந்தக் கூட்டத்தில் சுரேஸ் பிரேமசந்திரன் விக்னேஸ்வரனை நோக்கிக் குற்றம் சுமத்தினார். "முதலமைச்சராக நீங்கள் 4 கட்சிகளின் சார்பில்தான் தெரிவு செய்யப்பட்டீர்கள். ஆனால் தமிழ் அரசுக் கட்சி சார்பானவர் போன்றுதான் அதிகமாக நீங்கள் நடந்து கொள்கின்றீர்கள்" என்று கூறினார். நான் ஆயுதக் குழுக்களுடன் இணைந்து செயற்பட முடியாது என்று அந்தக் கூட்டத்தில் பதில் வழங்கினார். இந்தப் பதிலை ஊடகங்களுக்குத் தெரிவித்தது சுரேஸ் பிரேமசந்திரனே.

சரி, ஆயுதக் குழுக்களுடன் இணைந்து செயற்பட முடியாது அன்று கூறிய விக்னேஸ்வரனால் இன்று எப்படி அதே ஆயுதக் குழுவுடன் இணைந்து செயற்பட முடியுமாகவுள்ளது. அதற்கும் மேலாக அந்தக் ஆயுதக் குழுவின் மாநாட்டில் தான் பங்கேற்றதை நீட்டி முழக்கி எப்படி நியாயப்படுத்த முடிகின்றது?

### திடீர் ஞானம் எப்படி உண்டாயிற்று?

"ஈ.பி.ஆர்.எல்.எவ். முன்னணி ஆயுதக் குழுவாக செயற்பட்ட காலத்தைத் தற்போது கைவிட்டு, அப்போது நடந்தவற்றைக் கெட்ட கனவாக மறந்து இன்றைய அரசியல் நீரோட்டத்தில் தமிழ் மக்களின் விடுதலை ஒன்றையே முதன்மைக் கோரிக்கையாக ஏற்றுக்கொண்டு தமது கொள்கை வழியில் உண்மையாகவும், நேராகவும் நின்று செயற்பட முன் வந்துள்ளார்கள். அதனை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும்" என்று மாநாட்டில் உரை நிகழ்த்திய விக்னேஸ்வரனுக்கு, 2014ஆம் ஆண்டு அது தெரியாமல் போனதா?


இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஈ.பி.ஆர்.எல்.எவ். மாநாட்டில் அவர் அவிழ்த்து விட்ட புழுகு ஒன்றும் அம்பலத்துக்கு வந்துள்ளது. தமிழ் மக்கள் கூட்டணியில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருக்கின்ற பங்காளிக் கட்சி ஒன்று இணையவந்தபோதும் தான் அதை ஏற்றுக் கொள்ளவில்லை என்று விக்னேஸ்வரன் தனது உரையில் விளாசியிருந்தார். இதன்போது முன்வரிசையில் இருந்த சித்தார்த்தனையும் விளித்துப் பேசியிருந்தார். சித்தார்தனோ, தானோ தனது கட்சியினரோ தமிழ் மக்கள் கூட்டணியில் இணையக் கோரிக்கை முன்வைக்கவேயில்லை என்று பதிலடி கொடுத்தார். அதற்கும் மேலாக, விக்னேஸ்வரனும் நன்றாக அரசியல் செய்யத் தொடங்கிவிட்டார் என்றும் கூறியிருந்தார்.



அதுதான் உண்மை. விக்னேஸ்வரன் இப்போது 'பக்கா' அரசியல்வாதியாகிவிட்டார். தமிழ் அரசியல்வாதிகளுக்கே உரிய பொய்யும், புரட்டும், ஒன்றுக்கு ஒன்று முரணான பேச்சுக்களும், செயலற்ற பேச்சும் என்ற அடிப்படை 'போர்மிலாவை' விக்கியும் பின்பற்றத் தொடங்கிவிட்டார்.

தொகுப்பு
அனார்கலி

# தென்கிழக்கு திசையில் இருந்து...



## அதிபரின் ஆதங்கம்

கல்முனை நகரிலுள்ள கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லா முதன்மை அதிதியாகக் கலந்துகொண்டார். அவருக்குப் பாடசாலைச் சமூகம் பெருமளவில் மதிப்பளித்தது. நிகழ்வின் ஓர் அங்கமாக பாடசாலை அதிபர் வீ.பிரபாகரனின் தலைமையில் ஆளுநருக்கு மதிப்பளிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் வரவேற்புரையாற்றிய அதிபர் தன்னுடைய ஆதங்கம் ஒன்றை வெளிப்படுத்தினார்.

''நான் ஒரு முறை ஆளுநரின் சொந்த ஊரான காத்தான்குடிக்குச் சென்றேன். அப்பொழுது ஆளுநர் மக்கள் பிரதிநிதியாக இல்லை. அங்கு நாஸர் வித்தியாலய வீதியில் இருந்த பொது அறிவித்தல் பலகையில், 'மகனே! நீ இல்லாத குறை எங்களுக்குத் தெரிகிறது' எனும் வசனம் எழுதப்பட்டிருந்தது.

எனவே ஆளுநர் பதவியில் ஒருவருடம் இருந்து சேவையாற்றிச் சென்ற பின், கிழக்கு மாகாணம் முழுவதும் மேற்படி வாசகம் தென்படும் வகையில், ஆளுநரின் சேவை அமைய வேண்டும்" என்றார். பலத்த கைதட்டலுக்கு மத்தியில் புன்முறுவல் பூக்கக் காணப்பட்டார் ஆளுநர்.

## மீண்டும் ஊடகக் கற்கை

தென் கிழக்குப் பிராந்தியத்திலுள்ள செய்தியாளர்கள் மற்றும் ஏனைய ஆர்வமுள்ளோரின் நலன்கருதி, தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மீண்டும் ஊடகவியல்(இதழியல்) டிப்ளோமா கற்கைநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது. ஏற்கனவே இந்தக் கற்கை நெறி இந்தப் பல்கலைக்கழகத்தில் முன்னெடுக்கப்பட்டிருந்தபோதிலும் தவிர்க்க முடியாத சில காரணங்களால் கடந்த சில வருடகாலமாக அதைத் தொடர முடியாத நிலை இருந்து வந்தது. அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனம் உட்படச் சில ஊடக அமைப்புக்கள் இந்தக் கற்கை நெறியை ஆரம்பிக்குமாறு பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் எம்.எம்.எம்.நாஜிமிடம் வலியுறுத்தி வந்தன.

இதன் பயனாகக் கற்கைநெறியை மீண்டும் ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், இரண்டு பருவ காலங்களைக் கொண்ட இந்தக் கற்கைநெறிக்கு 48பேர் அனுமதிக்கப்படவுள்ளதாகவும் கற்கைநெறி இணைப்பாளர் பேராசிரியர் ரமீஸ் அப்துல்லா தெரிவித்தார். எதிர்வரும் 16ஆம் திகதி இந்தக் கற்கை நெறியின் ஆரம்ப நிகழ்வு ஒலுவில் வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

**திறன்கள் விருத்தி பெறட்டும்!**




## தாரைவார்க்காதீர்...!




"அடுத்து வரவிருக்கின்ற கிழக்கு மாகாணசபைத் தேர்தலில், கிழக்கு முஸ்லிம்கள் அனைவரும் ஒன்றுபட்டு, ஒரு கொடியின் கீழ், ஒரு சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும். பெரும் தேசியக் கட்சிகளுக்கு முஸ்லிம்களின் வாக்குகளைத் தாரை வார்க்கும் வழக்கத்தை முஸ்லிம் அரசியல் தலைமைகள் கைவிட வேண்டும்" ஐக்கிய மக்கள் சமாதாகக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எம்.ரி.ஹசனலி இவ்வாறு அறைகூவல் விடுத்தார். ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் நிந்தாவூர்ப் பிரதேச ஆதரவாளர்களுக்கான சமகால அரசியல் தொடர்பான கருத்தரங்கில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.


இவ்வாறு ஒற்றுமையை வெளிப்படுத்தினால், கிழக்கு மாகாண சபைக்கு முஸ்லிம்கள் 12 உறுப்பினர்களைப் பெறமுடியும் எனவும், சக சிறுபான்மைக் கட்சியான கூட்டமைப்புடன் இணைந்து ஆட்சியமைக்க முடியும் எனவும் ஹசனலி மேலும் கூறினார்.

**தாரை வார்க்கும் பழக்கதோசம் மாறுமா?**

## கொள்ளை இலாபம்!

தென் கிழக்கிலுள்ள முக்கிய முதன்மை வீதிகளின் மருங்குகளில் பலாப்பழ வியாபாரம் களைகட்டியுள்ளது. யாழ்ப்பாணப் பலாப்பழங்கள் எனக்கூறி விற்பனை செய்யப்படும் இந்தப் பழங்களைக் கொள்ளை இலாபத்தில் குறித்த பலாப்பழ வியாபாரிகள் விற்பனை செய்வதாகப் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். 200 ரூபாவுக்குள் யாழ்ப்பாணத்தில் பெறக்கூடிய பலாப்பழம் ஒன்றை நான்கு துண்டுகளாக வெட்டி வைத்து ஒரு துண்டை 200ரூபாவுக்கும், அதற்கு மேலும் விற்பனை செய்து இந்த வியாபாரிகள் கொள்ளை இலாபம் ஈட்டுவதாகவும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

**யாழ்ப்பாணத்துப் பழம் என்றால்
நா சுரக்கும் தானே!**





## அறுவடை ஆரம்பம்!

அம்பாறை மாவட்டத்தின் முக்கிய விவசாயப் பிரிவுகளில் பெரும்போக நெற்செய்கையின் அறுவடை வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. மாவட்ட நீர்ப்பாசனத்துக்கு முக்கியமாகத் திகழும் சேனநாயக்க சமுத்திரத்தின் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்திருந்ததால் செய்கைக்கான அனுமதி குறைக்கப்பட்டபோதிலும், பெரும்போகச் செய்கை மேற்கொள்ளப்பட்ட காணிகளில் சிறந்த அறுவடை கிடைத்து வருகிறது. அறுவடை செய்த நெல்மணிகளை வெயிலில் உலர்த்திச் சேமித்து வைப்பதிலும் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

**உயருமா நெல்லின் விலை?**

## கடற்கரை தர்ஹா கொடியேற்றம்

கிழக்கிலங்கையில் பிரசித்தி பெற்ற கல்முனைக்குடி கடற்கரை நாகூர் ஆணண்டகை தர்ஹாவின் 197ஆவது வருடாந்த குடியேற்றவிழா ஆரம்பமாகியுள்ளது. கடந்த செவ்வாய்க் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமான இந்தப் பெருவிழா 12நாள்கள் நடைபெறும். எதிர்வரும் 17ஆம் திகதி கொடி இறக்கத்துடனும், சிறப்புத் துவாப் பிரார்த்தனையுடனும் நிறைவு பெறும்.


**தமிழ்,முஸ்லிம் ஒற்றுமைக்குச் சிறந்த
எடுத்துக்காட்டான
நிகழ்வு இது!**

## 10 ஆயிரம் ரூபா வேண்டும்!

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள சகல அரச ஊழியர்களுக்கும் வரவு - செலவுத் திட்டத்தில் 10ஆயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்கப்படவேண்டும் என அகில இலங்கை அரச பொது ஊழியர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. மேலும் அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்ற சகல ஓய்வூதியக்காரர்களுக்கும் 5ஆயிரம் ரூபா ஓய்வூதிய உயர்வு வழங்கப்படவும் ஆவனசெய்யுமாறு கோரிக்கை விடப்பட்டது. தமது சங்கத்தின் உயர்பீடக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட மேற்படிக் கோரிக்கைத் தீர்மானங்கள் தொடர்பான மனுக்கள் அரச தலைவர், தலைமை அமைச்சர், நிதி அமைச்சர் உட்பட முக்கிய அரசியல் பிரமுகர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாகச் சங்கத்தின் தலைவர் எஸ்.லோகநாதன் தெரிவித்தார்.

**காரியம் நடந்தால் சரிதான்.**

# வீழ்த்தப்பட்டதா ஐ.எஸ்.ஐ.எஸ்.?




ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு முழுமையாகத் தோற்கடிக்கப்பட்டுள்ளது என்று அறிவித்துள்ளார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப். அவரின் இந்த அறிவிப்பை ஏற்க மறுத்துள்ளன பல நாடுகள். இதனால் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு தோற்கடிக்கப்பட்டதா இல்லையா என்பது தொடர்பில் பெரும் விவாதம் தோன்றியுள்ளது.

ஈராக், சிரிய நாடுகளைக் கைப்பற்றி அவற்றைத் தனிநாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்புக்கு எதிராக போர் அமெரிக்காவின் தலைமையில் முன்னெடுக்கப்பட்டு வந்தது. அமெரிக்காவுடன் கூட்டுச் சேராமல் ரஷ்யா தனியாக இந்தப் போரை முன்னெடுத்து வந்தது. 2017ஆம் ஆண்டு ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போர் ஈராக்கில் வெற்றிகொள்ளப்பட்டது. அதன் பின்னர் சிரியாவில் அந்த அமைப்புக்கு எதிரான போர் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் தற்போது அந்த அமைப்பு முழுமையாகத் தோற்கடிக்கப்பட்டுள்ளது என்று அறிவித்துள்ளார் ட்ரம்ப்.

சிரியாவில் இருந்து அமெரிக்கப் படைகளைத் திரும்பப் பெறும் முடிவை ட்ரம்ப் ஏற்கனவே அறிவித்திருந்தார். இந்த அறிவிப்புக்கு உலகெங்கிலும் இருந்து கண்டனங்கள் குவிந்தன. குறிப்பாக பிரிட்டன் தனது கண்டனத்தைத் தெரிவித்தது. 'ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போர் சிரியாவில் இன்னமும் இடம்பெற்று வரும் நிலையில் அமெரிக்கா தனது படைகளைத் திரும்பப் பெறுகின்றமை பிற்போக்கானது' என்று பிரிட்டன் குறிப்பிட்டது. இந்த நிலையில் 'ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு தோற்கடிக்கப்பட்டது' என்ற அறிவிப்பை விடுத்துள்ளார் ட்ரம்ப்.

**'தலிபான் அமைப்பும் தோற்கடிக்கப்பட்டது என்று சொன்னதும் நினைவில் உள்ளது'**



## இந்த வருடத்தில் 230 எமோஜிகள் அறிமுகமாகின்றன

இந்த ஆண்டில் புதிதாக 230 எமோஜிக்களை அறிமுகப்படுத்த யுனிகோட் கன்சார்டியம் முடிவு செய்திருக்கிறது.

யுனிகோட் கன்சார்டியம் என்பது உலக அளவில் கணினி பயன்பாட்டு முறைகளை சீரமைத்து ஒழுங்குபடுத்தும் பன்னாட்டு அமைப்பு. இந்த அமைப்பு, புதிதாக அறிமுகப்படுத்தப்படும் 230 எமோஜிக்களில் 59 எமோஜிக்கள் வெவ்வேறு உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையிலும் 171 எமோஜிக்கள் பாலினம் சார்ந்ததாகவும், தோல் நிறம் சார்ந்ததாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்திருக்கிறது.

**'வார்த்தைகள் குறைகின்றன...'**

கத்தோலிக்க திருச்சபையில்

## கன்னியாஸ்திரிகளுக்கு பாலியல் துன்புறுத்தல்!

பாப்பரசர் ஒப்புதல்



கத்தோலிக்க திருச்சபையில் கன்னியாஸ்திரிகளுக்கு பாலியல் துன்புறுத்தல் உள்ளது என்று ஏற்றுக் கொண்டுள்ளார் கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் பாப்பரசர் பிரான்சிஸ்.

கத்தோலிக்க திருச்சபையில் பாலியல் துர்நடத்தைகள் உள்ளன என்பது பல தசாப்தங்களுக்கு முன்னரே தெரிந்த ஒன்றுதான். ஆஸ்திரேலியா, அயர்லாந்து நாடுகளுக்கு பாப்பரசர் அண்மையில் மேற்கொண்ட சுற்றுப் பயணங்களின் போதும்கூட கத்தோலிக்க திருச்சபையில் உள்ள பாலியல் துர்நடத்தைகளை அவர் பகிரங்கமாக ஏற்றார். எனினும், கன்னியாஸ்திரிகள்கூட பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என்று பாப்பரசர் ஒருவர் ஏற்றுக் கொண்டிருப்பது இதுவே முதல் தடவை. பாப்பரசரின் நகர்வை பலரும் பாராட்டியுள்ளனர். சிலர், இஸ்லாமிய தேசத்தில் வைத்தா இதை ஏற்றுக்கொள்வது என்று எதிர்ப்பைப் பதிவுசெய்துள்ளனர்.

**'திருச்சபை மறுசீரமைக்கப்படுகிறது என்பதில் மட்டும் உண்மையுண்டு...'**

ரவுண்ட் த வேள்ட்

தொகுப்பு
பிரகாஸ்

## அமெரிக்கா வெளியேறினால் அமைதி ஒப்பந்தம் சாத்தியம்


### தலிபான்கள் அதிரடி

ஆப்கானிஸ்தானை விட்டு அமெரிக்கா வெளியேறினால்தான் அமைதி ஒப்பந்தம் சாத்தியம் என்று அறிவித்துள்ளது தலிபான் அமைப்பு.

ஆப்கானிஸ்தானில் வலுவான ஆதிக்கம் செலுத்தி வருகின்றது தலிபான். அந்த நாட்டின் தலைநகர் காபூலைக் கைப்பற்ற வேண்டும் என்பதுதான் தலிபான்களின் திட்டம். தலிபான்களுக்கு எதிராகவும் ஆப்கானிஸ்தானுக்கு ஆதரவாகவும் அமெரிக்கா போரிட்டு வந்தது. எனினும் அண்மைக்காலமாக அமெரிக்காவுக்கும் தலிபான்களின் அரசியல் பிரிவுக்கும் இடையே பேச்சு இடம்பெற்று வந்தது. இந்தப் பேச்சில் "அமெரிக்கா ஆப்கானை விட்டு வெளியேறினாலேயே ஆப்கானிஸ்தானில் அமைதி ஏற்படும்" என்று தலிபான் தெரிவித்துள்ளது.

**'தலிபான்களும் விடாப்பிடி...'**


ஐரோப்பிய நாடுகளில் தற்போது பனிப்பொழிவு உச்சம் தொட்டுள்ளது. அது தொடர்பான ஒளிப்படங்களை பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் வெளியிட்டது. பிரிட்டனில் எடுக்கப்பட்ட ஒளிப்படமே இது.





# சபுமல்கஸ் கந்தயாக மாற்றப்பட்டு வரும் கச்சல் சமனங்குளம்





கட்டுரை

பா.குமுதன்

தமிழர் பகுதிகளில் இனரீதியான பாகுபாட்டை ஏற்படுத்துவதற்குச் சிங்கள அரசுகள் பல்வேறுவகையான யுக்திகளைப் பயன்படுத்தி வந்துள்ளன. கிழக்கு மாகாணத்தின் பரவாலன பகுதிகள் சிங்கள மயமாக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது வடக்கை நோக்கி அதன் பார்வை அகன்றுள்ளதை நிகழும் சம்பவங்கள் உணர்த்துகின்றன. போருக்குப் பின்னரான மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலப்பகுதியில் அதன் தன்மையின் வேகம் அதிகரித்துக் காணப்பட்டதுடன் அதற்குப் பின்னரான நல்லாட்சியிலும் அது தொடர்ந்து வருகின்றமை தமிழர்களைப் பொறுத்தவரை ஏமாற்றமே.

**இரையாகும் வவுனியா**

வடக்கைப் பொறுத்தவரை, குறிப்பாக வவுனியா மாவட்டம் அரசின் கழுகுப் பார்வைக்கு அன்றாடம் இரையாகிவருகின்றது. குறிப்பாகப் பெரும்பான்மையாகச் சிங்கள மக்களைக் கொண்டமைந்துள்ள அனுராதபுரத்தின் எல்லையைப் பகிர்ந்துகொள்வதால் குடியேற்றங்கள் மேற்கொள்வதற்கு இலகுவானதாகிவிட்டது வவுனியா. ஏற்கனவே ஆட்சியில் இருந்த சிங்களஅரசியல்வாதிகளால் ஏற்படுத்தப்பட்ட குடியேற்றங்களால் கணிசமான சிங்கள மக்களை வவுனியா கொண்டுள்ளது. மேலும் வவுனியாவூடாக வடக்கில் சிங்களக் குடிப் பரம்பலை உருவாக்கும் நீண்காலத் திட்டத்தை அரசு மிகவும் நூதன முறையில் மேற்கொள்வதுடன், அதில் வெற்றியும் அடைந்துவருகின்றது. இதனால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள பகுதியாக நெடுங்கேணி விளங்குகிறது. பெருங்காடுகளை உள்ளடக்கிய நெடுங்கேணிப் பகுதி தமிழர்கள் பெரும்பாண்மையாக வாழ்ந்த வரலாற்றைக் கொஞ்சம், கொஞ்சமாக இழந்து வருகின்றது. ஏற்கனவே நெடுங்கேணியின் கிழக்குப் பக்கமாக உள்ள பகுதிகளில் காடுகளை அழித்தும், தமிழர்களின் பூர்விக நிலங்களைக் களவாடியும் ஆயிரக்கணக்கான சிங்களமக்கள் குடியேற்றபட்டுள்ளனர். அதன் இன்னொரு கட்டமாக நெடுங்கேணிப் பிரதேசத்தின் கச்சல்சமனங்கு ளம் என்ற தமிழ் மக்களின் பூர்விகப் பகுதி பௌத்த சிங்களப் பிரதேசமாக மாற்றப்பட்டு வருகிறது.

**கச்சல் சமனங்குளம்**

நெடுங்கேணியைத் தளமாகக் கொண்ட, வவுனியா வடக்குப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஊற்றுக்குளத்துக்கும், போகஸ்வெள என்று சிங்களப் பெயர் மாற்றப்பட்ட கொக்கச்சான் குளத்துக்கும் இடைப்பட்ட பகுதியே கச்சல்சமனங்குளம். முற்றுமுழுதாகத் தமிழ் மக்களின் பூர்விக நிலங்களைக் கொண்டமைந்திருந்த கொக்கச்சான்குளப் பகுதியில் ஆயிரக்கணக்கான சிங்கள மக்களைக் குடியேற்றி, போகஸ்வெள என்று பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இரட்டைத் தொகுதிகளை உள்ளடக்கிய வகையில் வவுனியா வடக்குப் பிரதேச சபையுடன் இணைக்கப்பட்டுள்ளது. தமிழர்களின் தடம்தெரியாமல் உருமாற்றம் செய்யப்பட்ட கொக்கச்சான்குளம்போல அதற்கு அருகாமையாக அமைந்துள்ள கச்சல்சமனங்குளத்திலும் சிங்களக் குடியேற்றத்தை நிறுவி சப்புமல்கஸ்கந்த எனும் பெயர்மாற்றம் செய்யும் கபடத் திட்டத்தை ஆட்சியில் அமர்ந்திருக்கும் நல்லாட்சி அரசு சூசகமாக மேற்கொண்டுவருகின்றது. நெடுங்கேணியை அண்மித்த ஒலுமடு, மருதோடை, பட்டிக்குடியிருப்பு, வெடிவைத்தகல் ஆகிய பிரதேசங்களில் வாழ்ந்த தமிழ்மக்கள் தமது விவசாய நடவடிக்கைகளை கச்சல்சமனங்குளத்தில் அமைந்துள்ள தமது பூர்விகநிலங்களில் மேற்கொண்டுவந்திருக்கின்றனர். குறித்த பகுதியில் அமைந்துள்ள குளமானது 200 ஏக்கருக்கும் அதிகமான வயல்நிலங்களுக்கு நீர் பாய்ச்சக் கூடியநிலையில் அமைந்துள்ளது. போர் காரணமாக ஏற்பட்ட இடப்பெயர்வுகளால் அடையாளங்களை இழந்துநிற்கும் குறித்தபகுதி பெருங்காடுகளை உள்ளடக்கிய பிரதேசமாகக் காட்சியளிக்கின்றது. இதைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளும் பௌத்த பேரினவாதம் குறித்த பகுதியைச் சிங்களமயமாக்கும் செயற்பாட்டை மேற்கொண்டுள்ளது.

**புதிதாக முளைத்த புத்தர்**

கச்சல்சமனங்குளம் பகுதியில் அமைந்துள்ள விவசாயக் குளத்துக்கு அருகாமையில் கடந்தவாரம் இரண்டு புத்தர் சிலைகள் நிறுவப்பட்டன. சர்ச்சையை ஏற்படுத்தின. நான்கு அடி உயரம் உள்ள குறித்த சிலைகளைப் பராமரிப்பதற்காக 18 வயதுநிரம்பிய பௌத்தமதகுரு ஒருவரும், அவரோடு இணைந்த சிலரும் அந்தப் பகுதியில் குடில் அமைத்துத் தங்கியுள்ளனர். குறித்த பகுதி சிங்கள மக்கள் முன்னர் வாழந்தபகுதி என்றும் பேரால் ஏற்பட்ட இடப்பெயர்வுகள் காரணமாக சிங்கள மக்கள் இடம்பெயர்ந்தாகவும் குறித்த பௌத்ததேரர் அங்கு செல்பவர்களுக்கு எடுத்தியம்பி வருகிறார். இதேவேளை வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களும் முன்னர் வேறு பெயரில் பௌத்த சிங்கள மக்களின் பூர்விக பகுதியாக இருந்ததாகவும், இடப்பெயர்வின் பின்னர் அதன்ற பயர்கள் வவுனியா, முல்லைத்தீவு என்று மாற்றப்பட்டுள்ளதாகவும். அவர் தெரிவிப்பதற்கு மறக்கவில்லை. குறித்த பகுதிக்கு அருகாமையில் காடுகள் அழிக்கப்பட்டு பத்துக்கும் மேற்பட்ட சிறுகுடில்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதேவேளை 25 ஏக்கர் அளவில் பயிர்ச்செய்கையும் அவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் நிரந்தரமாக விகாரை ஒன்றை அமைக்கும் பணியும் நடைபெற்று வருகின்றது. நெடுங்கேணியில் இருந்து பல கிலோமீற்றர்களுக்குக் காட்டுப்பகுதியூடாகச் செல்லவேண்டியமையால் தமிழ் மக்களின் நடமாட்டம் குறித்த பகுதியில் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. இந்த நிலையில் எதிர்ப்புகளின்றி, சிரமங்கள் இன்றி மிகவும் இலாவகமாக சிங்களமயமாக்கும் செயற்பாடுகள் அங்கு மேற்கொள்ளப்படுகின்றன.

**எல் வலயத்துக்குள் புகுத்தப்பட்ட கச்சல்சமனங்குளம்**

கச்சல்சமனங் குளமானது சுமார் 200 ஏக்கர் வயல்நிலங்களுக்கு நீரைப் பாய்ச்சக் கூடியநிலையில் அமைந்துள்ளது. குறித்த குளம் வவுனியா கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் இதுவரை இருந்தது. அந்தக் குளத்தின் கீழ் விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்ட தமிழ் மக்கள் இடம்பெயர்ந்த நிலையில் குறித்த குளம் நீண்டகாலமாகப் பாழடைந்த நிலையில் இருந்துள்ளது. போருக்குப் பின்னரான காலப் பகுதியில் அதற்கு அருகாமையில் அமைந்துள்ள ஊற்றுக்குளம் உட்பட பல குளங்கள் வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தால் சீரமைக்கப்பட்டன. ஆனால், வவுனியா கமநல அபிவிருத்தித் திணைக்களத்துக்குக் கீழிருந்த கச்சல்சமனங்குளமானது அந்தத் திணைக்களத்துக்கு அறிவிக்கப்படாமலேயே மகாவலி 'எல்' வலயத்துக்குள் உள்ளீர்க்கப்பட்டது. தற்போது குறித்த குளத்தை அனுராதபுர மாவட்டத்தின் கமநல அபிவிருத்தித் திணைக்களமே சீரமைத்து வருகின்றது.

**புதிய மாவட்டம் உருவாக்கப்படலாம்...!**

முல்லைத்தீவு, திருகோணமலை, அனுராதபுரம், வவுனியா ஆகிய மாவட்டங்களின் எல்லைகளின் மையப் பகுதியான நெடுங்கேணியை அண்மித்த பகுதிகளில் அரசால் மேற்கொள்ளப்படும் வகைதொகையின்றிய சிங்களக் குடி யேற்றங்களால் அரச திணைக்களங்களுக்கிடையே பல்வேறு நிர்வாகச் சிக்கல் நிலைமைகள் உருவாக்கியிருக்கின்றன. இதைக் காரணம்காட்டி எதிர்காலத்தில் வடக்குமாகாணத்தில் புதிய சிங்கள மாவட்டம் ஒன்று உருவாக்கப்படும் நிலையும் இருக்கிறது. இது அரசின் நீண்டகாலத் திட்டம் என்பதும் ஒரு சாராரின் கருத்தாக இருக்கிறது. இடப்பெயர்வுகளால் பாதிப்படைந்திருந்த தமிழ் மக்களின் பகுதிகளை மகாவலி தனக்குள் விழுங்கிக் கொண்டு சிங்களக் குடியேற்றங்க ளைப் பரவலாக மேற்கொண்டுவருகிறது. கொக்கச்சான்குளம், முல்லைத்தீவின் மணலாறு ஆகியவை மகாவலி எல் வலயத்துக்குள் உள்ளடக்கப்பட்டு 3 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 12 ஆயிரம் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். மொரகாகந்தை நீர்த் தேக்கத்தில் இருந்து மகாவலி நீரை வவுனியாவின் சேமமடு குளத்துக்குக் கொண்டுவரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. மகாவலி எல் வலயக் கருத்திட்டம் நிறைவுறும்போது சுமார் 6 ஆயிரம் சிங்களக் குடும்பங்களைக் குடியேற்றுவது என எல் வலயத்தின் கருத்திட்ட வரைபில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதைச் செயற்படுத்தும் நடவடிக்கையே தற்போது கச்சல் சமனங்குளத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் கீழ் குடியேற்றப்படுகின்ற சிங்கள மக்களுக்கு அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுக்கும் அரசானது போர்ப் பாதிப்புகளால் இடம்பெயர்ந்துள்ள தமிழ்மக்கள் தொடர்பாக எவ்வித கரிசனையும் கொண்டதில்லை. நீண்டகாலத்துக்குப் பின்னர் இந்தியாவிலிருந்து நாடு திரும்பி நெடுங்கேணியின் எல்லைக் கிராமமான காஞ்சூரமோட்டையில் குடியிருக்கும் தமிழ்மக்களுக்கு அரசால் எந்த வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

**அழிந்துவரும் தமிழர் கிராமங்கள்**

போர்ச் சூழல் காரணமாக ஏற்பட்ட அழிவுகள், இடப்பெயர்வுகள், போருக்குப் பின்னர் முறையாக மேற்கொள்ளப்படாத, மீள்குடியேற்றச் செயற்பாடுகள் காரணமாக வவுனியா வடக்கில் உள்ள எல்லையோரக் கிராமங்கள் மக்கள் இல்லாமல் அழிந்து வரும் நிலையிலுள்ளன. குறிப்பாக வெடிவைத்தகல், கோவில்புளியங்குளம், ஊஞ்சல்கட்டி ஆகியவை அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன. 40க்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வந்த வெடிவைத்தகல் கிராமத்தில் தற்போது ஒரேயொரு முதியவர் மட்டும் வாழ்ந்து வருகிறார். அதுபோல கோவில்புளியங்குளம் பகுதியில் 6 குடும்பங்கள் வாழ்கின்றன. இந்தப் பகுதியில் உள்ள இரண்டு பாடசாலைகள் புதர் வளர்ந்து மாணவர்களின் வருகைக்காக ஏங்கிநிற்கின்றன. இவ்வாறான நிலைமை சிங்களக் குடியேற்றங்களை அமைக்க இலகுவாகிறது.

**நல்லாட்சியின் கபடத் தனம்**

தமிழ்மக்களின் பேராதரவுடன் ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசானது தமிழர் விரோதச் செயல்களையே பரவலாக மேற்கொள்கிறது. பௌத்தமயமாக்கல் செயற்பாடுகள் தமிழர் பகுதிகளில் முழுவீச்சில் மேற்கொள்ளப்படுகின்றன. அண்மையில் தொல்பொருள் திணைக்களத்தின் ஆதரவுடன் முல்லைத் தீவின் நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் அத்துமீறிப் புத்தர்சிலை ஒன்று அமைக்கப்பட்டது. அந்தக் குழப்பங்கள் தீர்வதற்குள் கச்சல் சமனங்குளத்தில் புத்தர்சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. அதைவிட நெடுங்கேணியின் வெடுக்குநாரி சிவன்கோவில், சமனங்குளம் கல்லுமலை விநாயகர் ஆலயம், முல்லைத்தீவின் குருந்தூர்மலை என இந்துக்களின் புராதன தலங்கள் தொல்பொருள்திணைக்களத்தால் பௌத்தமயமாக்க முயற்சிக்கப்பட்டு வருகிறது. தமிழ் அரசியல் தலைமைகள் கொழும்பு அரசுடன் நெருக்கமான தொடர்புகளைப் பேணிவரும் நிலையில் நீடித்துவரும் இந்தப் பிரச்சினை குறித்துக் கரிசனை காட்டாதிருப்பது தமிழ் மக்களைப்பொறுத்தவரை கவலையளிக்கும் ஒரு விடயம் என்பதில் சந்தேகமில்லை.



கவிதை

சூரியநிலா



# சமூகம்!

வெறிநாய்களின்
நகக் கண்களெல்லாம்
வேட்டையாடப்பட்ட
புறாவின்
குருதியும் சதையும்!

விவேகம் தொலைந்த
வேகமும்
விரகம் தேக்கிய
தேகமும்
தன்பசி போக்கும் உக்கிரமாய்!

மரத்துப்போன பூவை
வண்டாய்க் குடைந்து
இரைமீட்கும் வக்கிரங்கள்!

பூவின் மீதும் புறாவின்மீதும்
நாய்களும், வண்டுகளும்
நர்த்தனமாடும்
அவை நாதியற்றுப்போனாலும்

சமூகம் சட்டைபோட்டிருக்கிறது
பொத்தானறுந்த பொருத்துக்களாக!

கவிதை

வேலணையூர் ரஜிந்தன்.



# மரம்

உன்னை வளர்க்க
தன்னை இழக்கிறது
உண்மை அறிந்தும்
மரத்தை அழிக்கிறாய் !

தியாகத்தின் அகராதி
அல்லவா அந்த மரம் !

உண்ணக் கனி தந்ததால்
கிளையோடு முறித்தாய் ?

இளைப்பாற நிழல் தந்ததாலா
வெட்டி வீழ்த்தி வீடமைத்தாய் ?

தொழில் செய்யவும்
நாடி வந்தாயே...
நடுத்துண்டில் அல்லவா
படகு செய்தாய் ?

பட்ட தடிகளைக்கூட
விட்டா வைத்தாய்
அடுப்புக்கல்லவா
இரையாக்கினாய் !

இவற்றையெல்லாம்
செய்த நீ...
பதிலுக்கு ஒரு மரத்தை நட்டாயா ?

மானிடா...
துரோகத்தை நீ செய்துவிட்டு
அந்தப் பருவ மழையை
ஏன் பேசுகிறாய்...?

# எண்ணங்கள் தூய்மையானவையெனின்...!



கருத்து

மகேஷ்

## சொல்லத்தான் நினைக்கிறார் செல்லத்தம்பி

வாழ்தல் அல்லது வாழ்க்கை என்பது என்ன? அது உண்டு. உடுத்து. உறங்குதல் மாத்திரந்தானா? என்ற கேள்விகளை எழுப்பினார் சிவபாதத்தார்.

அவரது கேள்விகள் செல்லத்தம்பியருக்கு ஆச்சரியமாகப்படவில்லை. ஏனென்றால், வாழ்தலின் உண்மையைத் தெரிந்து கொள்ளும் ஆவல் உள்ள ஒவ்வொருவரினதும் சிந்தனையில் இடைக்கிடையே தோன்ற வேண்டிய கேள்விகள்தாம் இவை. வாழ்தல் ஏன்? என்றகேள்விக்கான விடையை அறியத்தூண்டுகின்ற சிந்தனை பிறக்காதவரையில் உண்டு. உடுத்து. உறங்குதலே எமது வாழ்க்கையாகி விடுகிறது. எமது தேவைகளான உணவு, உடை, வசிப்பிடம் இவைகளைத்தானே நாம் தேடித் தேடி ஓடியபடி வாழ்கிறோம். அவை வாழ்வதற்கான ஆதாரங்களே தவிர வாழ்தல் ஏன் என்ற கேள்விக்கு விடையாக அமைந்து விடுவதில்லை.

புத்தர். இயேசு, காந்தி பூமியில் பிறந்தது எதற்காக? என்றதொரு கேள்வி? அன்றொருநாள் கேட்கப்பட்டது. அதற்கான விடைகளாகவே அந்தப் புனிதர்களின் வாழ்க்கை பார்க்கப்பட்டது. அவ்வாறே வாழ்ந்தவர்கள் பலரும் இன்றும் மக்கள் மனதில் வாழ்ந்து கொண்டே இருக்கிறார்கள். அவ்வாறு வாழாது உயிர் வாழ்வதையே நோக்கமாகக் கொண்டு வாழுகின்ற மனிதர்கள் வாழ்ந்ததாகச் சரித்திரம் இல்லை. நம்மில் அநேகர் உயிர் வாழும் நோக்கத்துடனேயே உழைத்து. ஊழல் செய்து. அயலவனுக்கு ஊறு விளைவித்து வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். பணம் பொருள் புகழ் தேடுவதையே எமது வாழ்க்கையாக வடிவமைத்துக் கொண்டுள்ளோம்.

செல்லத்தம்பியரும் இந்தக் குறிப்பிட்ட வாழ்க்கைச் செயலொழுங்குக்குள்ளே சிக்காமலில்லை.

எனினும் வாழ்க்கையின் உன்னதம் உணர்த்தப்படும்போதெல்லாம் விழித்துக் கொண்டு வாழ்வதற்கு முயன்றிருப்பதாக அவருக்குத் தோன்றியது.

✦ ✦ ✦ ✦


ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் தினம் தினம் உயிர் வாழ்வற்கான முயற்சிகளுடன் உன்னதமான வாழ்க்கைப் பண்புகளைப் பெற்றுக் கொண்டு வாழ வேண்டும் என்ற ஆவல் உள்ளது. நான் தலைவனாக. முதல்வனாக உலா வரவேண்டும். அயலவன் என்னை உத்தமன் என்று பாராட்ட வேண்டும். கல்விமான். பணக்காரன் என்று பலரும் போற்றப் பயணிக்க வேண்டும்.

என்றெல்லாம் பல்வேறு புகழ் தேடும் ஆசைகளோடு எந்த நாளும் எம்மை நாம் உயிர் வாழத் தூண்டுகிறோம். ஏனோ அவைதாம் எம்மை வாழ வைக்கின்றன. இவைகளைப் பெறுவதற்காக நாம் மேற்கொள்கின்ற கொடிய, தவறான செயற்பாடுகள் எம்மை வாழ வைக்கவில்லை என்ற உண்மையை நாம் உணர்ந்து கொள்வதில்லை.

பணம் தேடுவதற்காக ஊழல் செய்வதையும், பொய், களவு, ஏமாற்று என்பவற்றில் ஈடுபடுவதையும் வாழ்தலுக்கான உத்திகளாகக் கருதுவோர் உள்ளனர். அவ்வாறே தலைவன் ஆவதற்காகப் பொய்யுரைப்பதும், வன்முறைகளில் ஈடுபடுவதும், கொலைகளைச் செய்வதுமான தவறுகளும் இழைக்கப்படுகின்றன. இவை எம்மை வாழவைக்கவில்லை என்ற உண்மையை அவர்களில் எவரும் உணர்வதேயில்லை. அத்தகைய தவறுகள், உலகிலிருந்து எம்மை ஒதுக்கி வைக்கின்றன என்பதே சத்தியம். அப்படி இருக்கும் போது ஏன் இந்தவகைத் தவறு செய்பவரெல்லாம் வாழ்வதாகக் கருதுகிறார்களோ தெரியவில்லையே...! இவ்வாறாக எண்ணிய செல்லத்தம்பியர் சிறுபொழுது அங்கலாய்த்தார். அவரது சிந்தனையில் எங்கோ ஒரு மூலையில் பதுங்கிக் கிடந்த ஒரு யதார்த்த உண்மை அவரைப் பார்த்துக் கேலி செய்வதாக உணர்ந்தார்.

✦ ✦ ✦ ✦

தவறு செய்பவரெல்லாம் தமது வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்வதற்குத் தாம் செய்யும் தவறுகளைத் தமது அறிவால் மெற்கொண்ட கெட்டித்தனங்களாகப் புளுகித் திரிவதைப் பலரிடத்திலும் கேட்டிருக்கிறார். அந்தப் புளுகுகளையெல்லாம் அவருடைய புத்தி சாலித்தனமெனப் புகழ்ந்து அவருக்குப் பின்னாலே



அலையும் கூட்டத்தினரையும் செல்லத்தம்பியர் பார்த்திருக்கிறார். அவர்களும் வாழ்வதற்காகவே இவ்வாறு செயற்படுகிறார்கள். என்ற உண்மையும் அவர் அறிந்தவையே.

இந்த நிலைமைகளில் நாம் ஏன் வாழ்கிறோம்? என்ற வினாவுக்கான விடையை அறியாமலேயே, வாழ்வதற்கான காரணங்களையும் தீரமானிக்க இயலாமல் அலைவதுதான் மனித வாழ்க்கையாகி விட்டது என்பதை எண்ணிய செல்லத்தம்பியர் சற்றுத் தடுமாறினார்.

நாம் வாழ்வதற்காக அயலவனை வருத்தி. அவனுக்கு ஊறுகளை விளைவித்து நாம் ஏன் வாழவேண்டும்?. கேள்விகள் தொடர்ந்தன.

ஆனால் நான் ஏன் வாழ்கிறேன் என்பதற்கான விடையைக் கண்டறிவது செல்லத்தம்பியருக்குச் சிரமமானதாகவே இருந்தது.

பிறப்பும். இறப்பும் நமது கைகளிலே இல்லை எனினும் வாழ்தல் என்பதன் தேவையை அறியாத வாழ்க்கை எமது சிந்தனைக்கும் செயற்பாட்டுக்கும் உட்பட்டே இயங்குகிறது.

'எண்ணங்கள் தூய்மையானவையெனின் வாழ்க்கை இனிமையானதே' உறுதியான வாழ்க்கைக்கு உரியதான காரணங்களைத் தீர்மானிப்பது சமூகத்தின் பண்பாட்டு விழுமியங்களாகத் தோன்றப் பேராசை கொண்டலையும் இந்தச் சமூகமே எம்மை வாழ வைக்கிறதென்ற முடிவுக்கு வந்த செல்லத்தம்பியர் மெளனமானார்.

இதை வெளியே சொன்னால் அவரைச் சமூகம் எப்படிப் பார்க்குமோ! நியாயம் என இதை ஏற்று அவரை வாழ விடுமோ? அச்சத்தால் முகம் மாறிய செல்லத்தம்பியர் மேலும் மெளனமானார்.



# என் மீதான உன் நேசிப்பு.....

கவிதை

எஸ்.தர்சி

இரு மனம் ஒரு மனமான பின்...
உனக்கே தெரியாத ஒரு பகற்பொழுதில்
உனதறைக்குள் நுழைந்து
உன்னைப் பற்றிய தரவுகளைச் சேகரித்தேன்....

அவை....!
புத்தக வாசிப்புக்குள் ஒன்றிப் போகிற
உனது சிந்தனைகளைச் சொல்லிச் சொல்லி அழுது புலம்பின

அலுமாரியில் குறுக்கும் நெடுக்குமாய்
விரித்துப் போட்ட நூற்குவியல்கள்...
நூற்குவியல்களுக்கிடையே மலர்ந்து கிடந்தது
இரகசியப்
பயணமெனும் நாள்குறிப்பேடு....

அவற்றுக்கிடையே......
உன்னுடனான பயணத்தின் போது நாம்
பேசிச்சிரித்த நிகழ்வுகளையும் பேசிடாத மௌனங்களையும்....
கடந்து போன காட்டுவெளிப் பாதைகளையும்....
நனைந்து விரைந்த மழைச்சாரலையும்...
வெயில் தாளாது நிழல் தேடி அலைந்த மரத்தடிகளையும்
உன்மடி சாய்ந்து படுத்துறங்கிய குட்டித் தூக்கத்தையும்
எனக்கே தெரியாமல் உன்னருகில் நான் பட்ட சலனத்தையும்
இதழ் சிவக்கப் பகிர்ந்தளித்த முத்தங்களையும்
வேலைக்கு வெளியூர் செல்லும்
சமயங்களில் வராத காய்ச்சலை வந்ததாய்க்
கூறி விடுமுறை சொல்லி அரட்டை அடித்த நாள்கள்.....
இன்னும் இன்னும் எத்தனை
நகர்வுகளைப் பதிவுகளாய் குறிப்பெடுத்திருக்கிறாய்...

வாசிக்க வாசிக்க உன் மீதான நேசிப்பின் ஆழம்
எனக்குள்ளே பிரளயமாய் வேர்விட ஆரம்பித்தது....
அச்சம், மடம், நாணம் மற்றது
சகமனுசியாய் பகுத்தறிவோடு நடைபயிலக் கற்றுக்கொடுக்கிறது
உந்தன் இடைவிடாத நேசிப்பு...!



4

# சுவிஸ் எனும் அழகிய நாடு!

பயணக் கட்டுரை

ஏ.ஜே.ஞானேந்திரன்

இரட்டைத் தட்டுப் பேருந்துகள் இந்த நகரின் இலட்சணையாக இருப்பதுபோல, மஞ்சள், பச்சை வர்ண டிராம்கள் இந்த நகரின் இலட்சணையாக இருக்கின்றன. சூரிச் போன்ற வேறுநகரங்களிலும்டிராம்சேவைஇருந்தாலும்,பாசல் டிராம்களின் கம்பீரம் எதற்குமே இல்லை என்பது என் கருத்து.

1892ஆம் ஆண்டில் முதற் தடவையாக இங்கு ஆரம்பிக்கப்பட்ட சேவை, இன்று பல வழிகளிலும் நவீனப்படுத்தப்பட்டு இருக்கின்றது. இந்தப் பாசல் நகரம் என்ற கன்டோன் (மாவட்டம்) 'பாசல் ஸ்டற்', 'பாசல் லான்ட்' என்று இரண்டு பிரிவுகளாக உள்ளது. இரண்டுமே ஏனைய மாட்டங்களைப் போல் தனி மாவட்ட ஆட்சி கொண்டவை. பாசல் ஸ்டற் டிராம்கள் பச்சை நிறமாக உள்ளன. பாசல் லான்ட் டிராம்கள் மஞ்சள், சிவப்புக் கலந்தவர்ணத்தில்உள்ளன. இவர்களுடைய சேவை நாடுகடந்ததாகஅதாவதுஜேர்மனி,பிரான்ஸ்எல்லைக்குள் செல்வதாக அமைந்துள்ளமை ஓர் அசாதாரண விடயமாகும். பிற நாடுகளுக்குப் பயணிப்பதற்கு அனுமதி இல்லாதவர்கள் டிராமிலிருந்து இறங்குவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

**பயணச் சலுகைகள் நிறைய உண்டு**

ரயிலிலோ, டிராமிலோ பயணிப்பதற்கு, இங்கு நிறையப் பணம் செலவாகின்றது. பெரிய சம்பளம் என்று சொல்லப்படுவது போல இங்கு செலவுகளும் பெரிய அளவில் இருக்கின்றன. இந்தப்பயணச்செலவுச் சுமையைத் தவிர்க்க, சலுகை அடிப்படையில்இங்குவசதிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். உதாரணமாக நீங்கள் பாசல் நகரிலிருந்து ஜெனிவா செல்வதானால், அதற்கானரயில்கட்டணம்,நமது ரூபாயில் பல ஆயிரங்களைத் தாண்டும். ஆனால்ஒருநாள் அட்டையைநீங்கள்வாங்கினால்,24 மணி நேரத்துக்குச் செல்லுபடியாகும். அதிவேக ரயில்களை விட நீங்கள் எந்த ரயிலிலும் ஏறலாம். பேருந்துகளிலும் ஏறலாம். டிராம் எனப்படும் தொடருந்துகளிலும் ஏறலாம். இதை ஒன்லைனில் பதிவு செய்து, 'கெமைன்ட' அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும். இதற்கு 45 பிராங்(சுமாராக 7ஆயிரம் ரூபா) . சாதாரண ரயில் சீட்டுக்கு15ஆயிரம்ரூபாவுக்கு மேல்கொடுக்க வேண்டிவரும். அரைக் கட்டணச் சலுகை அட்டையென்று இன்னொருவசதிஇருக்கின்றது.இதைஒருவருடத்துக்கென ஆரம்பத்தில் வாங்கிவிட்டால். அரைக் கட்டணமே செலுத்த வேண்டி வரும். இங்கு ஒரு மாத காலம் தங்க நினைப்பவர்களுக்கு இது வசதியாக அமையலாம். ஜி.ஏ. அட்டையென்று ஒன்று இருக்கிறது. இதை ஒரு வருடத்துக்கு வாங்கி விட்டால் இங்குள்ள ரயிலிலோ , டிராமிலோஎதுவானாலும்எத்தனைதரம்வேண்டுமானாலும் பயணிக்கலாம்.

பெரிய நிறுவனங்கள் இந்த அட்டையைச் சலுகை விலையில் தமது ஊழியர்களுக்கு வழங்குகின்றனர். இதைவிட 25 வயதுக்கு உட்பட்டவர்களுக்குச் சலுகை விலையில் பயண அட்டைகள் வழங்கப்படுகின்றன. பெற்றோருடன் பயணிக்கும் பிள்ளைகளுக்கு, பள்ளிப் பிள்ளைகளுக்கு என்று மாறுபட்ட கட்டணச் சலுகைகள் இங்கு வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. 2015ஆம் ஆண்டிலிருந்து 'சுவிஸ் பாஸ்' என்ற பெயரில் ஒரு பயண அட்டையை அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள்.



**ரைன் நதி பாய்ந்தோடும் நகர்**

சுவிஸில் அகதிகளாகப் பதிந்தவர்களை, சில மாதங்களின் பின்னர் வெவ்வேறு கன்டோன்களுக்குப்பிரித்துஅனுப்புவார்கள். எனது அதிஷ்டம் என்னைப் பாசல் நகரிலேயே வாழ்க்கையைத்தொடர'பாசல் லான்ட் பொலிஸார்' என்னை அனுமதித்தார்கள். வடமேற்காக ரைன் நதியோடு அமைந்த அழகான சுவிஸ் நகர்தான் பாசல். 12ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட சிவப்பு செங்கற்களாலான நகரசபைமண்டபம்பிரசித்தமானது. முன்பேகூறியது போல, ஜேர்மன், பிரெஞ் எல்லைகளைக் கொண்டது. உணவகங்களுக்கும் டிராமுக்கும் பிரபல்யமானது. சுவிஸ்நாட்டின் மிகப் பழைய பல்கலைக் கழகம் இங்குதான் இருக்கின்றது. பாசலின் ஆத்மாவென்றும், சுவிட்சிலாந்தின் இதயத்துடிப்புஎன்றும்ரைன்நதியை வர்ணிக்கிறார்கள்.

375 கிலோ மீற்றர் நீளமான ரைன் நதிதான், சுவிஸ் நாட்டின்மிகநீண்டநதியாகும்.பாம்புபோல்வளைந்து, நெளிந்து இங்கிருந்து செல்லும் இது இறுதியில் ஜேர்மனிக்குள் சென்று விழுகின்றது. ஷவ்ஹவுஸன் எனப்படும் கன்டோனில் இந்த நதி வீழ்ந்து, இந்த நாட்டின் மிகப் பெரிய நீர்வீழச்சியை உருவாக்கி இருக்கிறது. உல்லாசப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் அழகிய பிரதேசம் இது. வர்த்தகத் தலைநகரான சூரிச்சுக்கு அண்மையிலேயே இந்த் நீர்வீழ்ச்சி காணப்படுகின்றது. 23 மீற்றர் உயரமும், 150 மீற்றர் அகலமும் கொண்டது இந்த நீர்வீழ்ச்சி! பாசல் நகரிலுள்ள ரைன் நதிதான் ஐரோப்பாவின் மிகப் பெரிய நதியாகும். இதுசுவிஸ்நாடுஉட்புடஆஸ்திரியா,லிக்டன்ஸ்டைன், ஜேர்மனி, பிரான்ஸ், நெதர்லாந்து ஆகிய நாடுகளூடாகப் பாய்ந்து செல்கின்றது.

**பாசல் ரைன் துறைமுகம்**

இங்கு மருந்து உற்பத்தி செய்யும் இராட்சச மருந்துற்பத்திநிறுவனமான சீபா, பலபொறியியல் நிறுவனங்கள் செயற்படும் மூன்று நாட்டு எல்லைகள் கூடும் மையத்தில் பாசல் ரைன் துறைமுகம் இருக்கின்றது. வட கடல் துறைமுகங்களை இணைக்கும் பாலமாகவும் இது மிளிர்கின்றது. 2008ஆம் ஆண்டில்12 மில்லியன் தொன்னுக்கு மேற்பட்ட பொதிகள் இங்கிருந்து வெவ்வேறு நாடுகளுக்குக் கடல் மார்க்கமாக அனுப்பப்பட்டதாகக் கூறப்படுகின்றது. மூன்று நாடுகள் ஒருங்கிணைந்து இந்தச் சேவையைச் செய்து வருவது இதன் தனிச் சிறப்பு.

(தொடரும்)

தொடர்

தாஸ் மாஸ்ரர்

# சிறைக்கதவில் எத்தனை கம்பிகள்

கழிப்பறை 4அடி உயரமான இரண்டு சுவர்கள் கட்டப்பட்டு பிரிக்கப்பட்டுள்ளது. அதற்குக் கதவு, நிலை எதுவும் கிடையாது. 4 அடி உயரச் சுவரின் மேல் பகுதியில் ஆணி அடித்துச் சிறிய யூரியா பாக் துண்டு ஒன்று மறைப்பாகக் கயிற்றில் தொங்கவிடப்பட்டிருந்தது. அதிலும் பீடி, சிகரெட் பிடிப்பவர்கள் அந்த நெருப்பால் ஓட்டை போட்டிருப்பர். எண்ண முடியாத இடைவெளிகள் அல்லது சல்லடைகளாக அந்த மறைப்பும் காணப்பட்டது.

வெளியே நிற்பவர்களுக்கு உள்ளே எவர் இருப்பார்கள் என்று தெரியாவிட்டாலும் உள்ளே இருப்பவர்களுக்கு வெளியில் நிற்பவர்களைத் தெரியும். இரண்டு கழிப்பறைத் தொகுதிகளிலும் இரண்டு சிறிய நீர்த் தொட்டிகள் உண்டு. அவற்றில் தண்ணீர் எடுத்துக் கால் கழுவுவதால் கழிப்பறை முன் முற்றத்தில் எப்பொழுதும் தண்ணீர் வழிந்து கொண்டிருக்கும். நாம் அங்கு சென்ற மறு நாள் காலையில் 1 மணித்தியாலம் கைதிகளைத் திறந்து விட்டிருந்தபோதும் நான் உட்படப் பல கைதிகளுக்கும் மலம் கழிப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

இரண்டு கழிப்பறைத் தொகுதிகளிலும் கோயில் திருவிழாவில் மக்கள் கூடியிருப்பது போல் நிறையப் போர் காத்து இருந்தனர். உள்ளே போனவர்கள் 3 நிமிடம் கூட இருக்க முடியாது. கழிப்பறைக்குள் இருப்பவனுக்கும் நிம்மதி இல்லை. வெளியே காத்து இருப்பவர்களுக்கும் பொறுமையில்லை. குறைந்த பட்சம் ஒரு கைதிக்கு 5 நிமிடங்கள் என்று பார்த்தால் 48 பேர் மட்டுமே 1 மணி நேரத்துக்குள் மலம் கழிக்க முடியும் என்பது தெரிந்திருந்த போதிலும் அந்தத் தொகைக்குள் தங்களையும் சேர்த்துக் கொள்ளவே 199 கைதிகளும் முனைந்தனர். அங்கு மாற்று வழி ஏதும் இல்லை.

✪ ✪ ✪

சிறைச்சாலைக்குள் சுகமாக வாழ விட மாட்டார்கள். சாப்பாடு, குளிப்பு, மலசல கூட வசதிகள் போன்றவற்றில் சிரமங்களைக் கொடுத்தால் தான் மீண்டும் சிறைக்கு வரமாட்டார்கள் என்பது பொதுவான கருத்து. அதுவே வாழ்க்கை என்றாகி விட்டவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். சிறுநீர் கழிப்பதற்கு 2 இடம் இருந்ததால் அதை முழுக் கைதிகளும் பாவிப்பது சாத்தியமாகவில்லை. இதனால் கட்டடத்தின் முடிவுப் பகுதிக்கு எதிராக இருந்த மதில் ஓரத்தில் எல்லோரும் சிறு நீர் கழிக்கத் தொடங்கினர். அதை அண்மித்த அறைகளில் அடைத்து வைக்கப்பட்ட கைதிகளுக்குச் சிறுநீர் வாசனை வீசிக் கொண்டே இருக்கும்.

21ஆம் திகதி காலை 8.30 மணியளவில் முதல் நாள் கைதிகள் கொடுத்த பொருள்களை ஒவ்வொன்றாகப் பரிசோதித்துக் கையளிக்கும் வேலை தொடங்கியது. 5 பாட்டிக்காரரும் ஓர் அதிகாரியும் வந்தனர். ஆனாலும் கைதிகளின் பொருள்களை வேறுபடுத்திக் கொடுப்பதில் மிகவும் சிரமம் இருந்தது. பொருள்களைப் பெற்று கொள்ளாதவர்கள் கால் கடுக்க நின்றனர். அதில் நானும் ஒருவன். பொருள்களைப் பெறுவதற்காக மாலை 5 மணிவரை நிற்கவேண்டியதாயிற்று. குளித்தால் மாற்றிக் கொள்வதற்கு வேறு உடுப்புக்கள் இல்லை. சில நண்பர்கள் உடுப்புகள் தருவதற்கு முன்வந்த போதிலும் குளித்துக் கொண்டிருக்கும் போது பொருள்களைப் பரிசோதிக்கக் கூப்பிட்டால் சிரமமாகி விடும் என்று காத்திருந்தால் குளிக்க முடியவில்லை. பொருள்களையும் எடுக்க முடியவில்லை.

✪ ✪ ✪

பூட்டுவதற்கான நேரம் வந்தபோது சூட்டி என்ற மனிதர் ஒரு பெரிய வாளியில் தண்ணீரைத் தூக்கி வந்து எனது அறைக்கு அருகில் தந்துவிட்டுப் போனார். அறைகள் பூட்டப்பட்ட பின்பு நான் முகம் கழுவத் தொடங்கினேன். 36ஆவது அறைக்கு அருகில் சிறைச்சாலை ஊழியர்கள் வருவதற்கு முன்னர் தயாராகிவிட்டேன். பூஸா சிறைச்சாலையில் பூட்டுகின்ற நேரம் வந்ததும் அந்தந்த அறையில் இருக்கும் கைதிகள் தங்கள் அறைகளுக்கு முன் வரிசையாக நிற்க வேண்டும். ஒவ்வோர் அறையாகப் பூட்டிக் கொண்டு வரும்போது சிலவேளைகளில் எண்ணும் இலக்கத்தை மறந்து விடுவார்கள். பின்னர் மறுபடியும் ஒவ்வோர் அறையாக எண்ணுவார்கள். பூஸாவில் காலை யில் திறந்தவுடன் எல்லா அறைகளிருந்து சிறுநீர் வாளிகளுடனும், கழிவுநீர் வாளிகளுடன் கைதிகள் வெளியில் வரும் காட்சி இரசிக்கக்கூடியது தான்.

மிகவும் வசதியாக இருந்தது. அந்தக் கிணற்றின் கழிவு நீர் வெளிச்செல்வதற்கு ஒரு கழிவு வாய்க்கால் சீமெந்தால் கட்டப்பட்டிருந்தது. தண்ணீர் வடிந்து போகக்கூடியதாக அது அமைக்கப்பட்டிருந்ததால் அந்த வாய்க்காலில் துர்நாற்றம் வீசுவதில்லை. இல்லாவிடில் காலையில் ஊற்றப்படும் அவ்வளவு சிறுநீரின் மணமும் அங்கிருக்கும் மனிதர்களை மூக்கடைக்க வைத்திருக்கும்.

கைதிகள் உயிரை மாய்ப்பதற்கு, அல்லது வேறு எவரையாவது கொலை செய்வதற்கு அது வாய்ப்பாக இருந்துவிடும் என்பதால் பொதுவாகச் சிறைச்சாலைகளில் கிணறு இருப்பதில்லை. பூஸாவில் புதிதாகத் தண்ணீர்த் தொட்டி கட்டித் தண்ணீர் நிரப்பப்பட்டபின் இந்தக் கிணற்றை மூடுகின்ற நிலைமை சிறைச்சாலை நிர்வாகம் எடுத்திருந்தது. எனினும் நான் அங்கிருந்து வெளியேறும் வரை அது மூடப்படவில்லை. சுமார் 75 மீற்றர் நீளமான 15 மீற்றர் அகலமான முற்றம் சிறைக் கட்டட இருந்தது. சுற்றிவர மதில்களும், மதிலுக்கு மேல் முற்கம்பிச் சுருள்களும், காவற் கோபுரங்களில் ஆயுதம் தாங்கிய இராணுவத்தினரையும் காண முடியும்.




சிறைச்சாலைக்குள் சுகமாக வாழ விட மாட்டார்கள். சாப்பாடு, குளிப்பு, மலசல கூட வசதிகள் போன்றவற்றில் சிரமங்க ளைக் கொடுத்தால் தான் மீண்டும் சிறைக்கு வரமாட்டார்கள் என்பது பொதுவான கருத்து.

எம்முடன் இருந்த வீரசுப்பிரமணியம் என்ற புங்குடுதீவைச் சேர்ந்த அண்ணர் கூறுவார் "பால்ச் சாலைக்குப் பால் கொண்டு போகிறீர்களோ" என்று (இனி வரும் பகுதிகளில் அவரை வீரா அண்ணர் என்று குறிப்பி டுவேன்).

✪ ✪ ✪

பூஸாவின் 'யு' பிரிவில் ஒரு சிறிய கிணறு உண்டு. கடற்கரையில் இருந்து அந்தக் கிணறு ஒரு கிலோமீற்றர் கூட இருக்காது. ஆனால் உப்புத் தன்மையற்ற நல்ல தண்ணீர் இருந்தது. நில மட்டத்துடன் கிணற்றுக் கட்டு இருந்தது. சுற்றிவரச் சீமெந்துத் தளம் போடப்பட்டிருந்தால் குளிப்பதற்கும், உடுப்புத் தோய்ப்பதற்கும்

சிறைக்கூட்டை விட்டு வெளியில் வரும் போதெல்லாம் கைதிகளுக்கு ஆறுதல் அளிக்கின்ற இரண்டு அம்சங்கள் இருந்தன. ஒன்று முற்றம். மற்றையது கிணறு. அந்த முற்றம் விளையாட, உடுப்புக் காயப்போட, கூட்டாக இருந்து கதைப்பதற்கு வாய்ப்பாக இருக்கும்.

பிற்பகல் 2 மணிக்கு மீண்டும் திறந்தவுடன் மதில் கரையுடன் விழும் நிழலைப் பயன்படுத்தி, கைதிகள் மதில் அருகில் இருப்பார்கள். நீண்டதூரம் நடந்து சென்றவர்கள் களைத்துப்போய் இருப்பது போல அது காட்சியளிக்கும். சிறைக்குள் நிழல்தரும் மரங்கள் எதுவுமே இல்லை. வெறும் கட்டடக் காடு மட்டும் தான்.

(தொடரும்)

கவிதைகள்

விவேகானந்தூர் சதீஸ்




## கடவுள் இருக்கின்றாரா?

இரண்டு கன்னங்களிலும்
அறை வாங்கிவிட்டேன்
இயேசப்பா
இனி என்ன செய்ய?

புண்ணிய தீர்த்தமாடினால்
நீண்ட ஆயுளாம்
கேணிக்குள் கால் வைத்தேன்
இறந்த மீன்கள்
மிதந்து கொண்டிருக்கிறது

அல்லாவே பெரியவர்
என்று கோசமிடுபவன்
ஐஸ்.எஸ். ஆயுததாரியாகிறான்
ஆச்சரியமில்லையா?

பௌத்தன் இல்லா ஊரில்
புத்தர் சிலைகள் தினம் தினம்
முளைப்பது
அதிசயமில்லையா?



## வனத்தாய் மடி

ஒரு தொகைத் தோட்டாக்களை
உடலில் தாங்கியிருந்தபோதும்
ஓலை தள்ளி
உருவெடுக்கும்
எனதூர்ப் பனைகள்

மனிதனே
உனக்கா மரத்துக்கா
மரத்தை வெட்டி
நீ செய்த சவப்பெட்டி?

வனதேவதையை
விதவையாக்கியவர்களே
அவளுக்கு
மறுமணம் செய்து வையுங்கள்





## காதலும் தேநீரும்

கவிதை/
ஓஷோ சிறிரதி


கொதிக்கும் கேத்தலில் இருந்து
குபு குபுவெனக் கிளம்பும்
ஆவியைப்போல
மேகங்கள் விரைந்துகொண்டிருந்தன

என் கையிலும்
அவள் கையிலும்
தேநீர் கோப்பைகள்
இனிக் காதல்

கோப்பைகளை முத்தமிடுவோம்
நாம்!

## வீணையும் பனித்துளியும்

வீணையில் வீற்றிருந்த
பனித்துளிகள்
உன் இராகத்தில் உதிர்வதுபோல்
என் விழிகள்
உன் பாதத்தில்
உதிர்ந்ததைக் காண்!



# அதியுயர் காண்டத்து மேடைகள்

துக்கம் ஏறிக்குந்திய சிம்மாசனத்தில் 'சந்தோஷம்' மறுபடியும் ஏறிக்குந்திவிட்ட கதையாய்ச் சந்தோஷத்தார் கதைப்பைத் தொடக்கியே விடுகின்றார்... "எலலாமிந்தக் கரடியார் செய்த வேலைதான்... கரடியின் விளையாட்டுத்தான்...! அதாவது என்னைப்பற்றி இந்த டிபென்சிலையுள்ள அத்தனை மிலிட்டறிக்கும் நல்லாய் வேணுமெண்டபடிக்கு இந்தக் கரடியார் அண்டல்கள் போட்டு 'காஸ்' ஏத்தி வைச்சிட்டார்... இண்டைக்கு இப்படியாம்பட்ட இந்தப் பாவாத்மாவுக்கு... என்ன நடந்திருக்காம்...? கடைசியிலை தான் நட்ட கடப்பு தனக்கே பகையாய்ப் போட்டுது... இந்தக் கரடி தானொரு திராவிடம் என்பதைக்கூட அறவே மறந்துபோய் ஆரியக்கூத்தாடவெண்டு வேஷம் போட்டு வெளிக்கிட்டதாலை கடைசி முடிவு எல்லாமொரே 'அப்செற்'! தன்ரை 'டோக்குக்கும்' தெரியாமல்தான் 'ரைகர்' என்றும் இது சத்தியமாத்தான் பேர் வைச்சாரிந்தக் கரடிமனிசன்... 'ரைகர்' எண்டால் அந்தாளுக்கு ஓரெப்பன் தனும் பிடிக்காதெண்ட பயக்கெடுதியில்... 'ரைகரைப்' பண்டாவாக்கப் போய் அது பெரும் குண்டாவாய் வெடித்து விட்ட... ஒரு வெக்களிப்பில், வெளிவிறாந்தையில் வாங்கு ஒன்றில் படுத்திருந்த 'ரைகர் டோக்கின்' அருமந்த உயிரும் முதலாவது கிறனேற் வீசப்பட்டபோது, அது வீசப்பட்ட விதத்தில் ஓர் அக்சிடென்ற் மாதிரி முன்னால் நின்ற மாமரம் தடக்கி அதிலையே பிளாஸ்ற் பண்ணி, வீசியவரையே வாங்கியெடுத்தும் விட்டது..." என்றார்.

✪ ✪ ✪ ✪

இப்படியெல்லாம் கடும் உணர்ச்சிவசப்பட்டவராய்... தமது கதைப்பைக் கொண்டுபோன தென்மராட்சியார் இன்னும் சில அதி முக்கியங்களையும், கொன்ரினியூ பண்ணி முடித்துவிட்டு... இறுதியாகப் பலாலியிலுள்ள அந்தத் தென்மராட்சித் தமிழ் லேடியை மெரி பண்ணிய கேணல் சொல்லிவிட்ட அந்த அதி முக்கிய வேண்டுகோளின்படி... செயலாற்றுவதுதான்... இனிச் சரியான புத்தி, என்ற மட்டோடு, தமது செல்போன், ஷப்றரைக் குளோஸ் பண்ணியும் விடுகின்றார்.

இந்த மராட்சியார் டீற்றயிலாய்ச் சொல்லி முடித்துவிட்ட தென்மராட்சிக்குச் சேர்மதியான அந்தக் கேணலின் ஈறாந்த வேண்டுகோளை, மனப்பூர்வமாய்... அர்ச்சுணா அலசி அலசிப் பார்க்கத் தொடங்கியதும்... அவனுடைய உடம்பெல்லாம் என்னவோ... என்னவோ சொல்லிக் கொள்ள முடியாத உணர்ச்சிச் சுனாமி பிய்த்துப் பிடுங்கல்கள்... விறாண்டல்கள்... அங்காலை போய்... இங்காலை... என்றெல்லாம்... வெளிநாட்டுக்குக்காசு வறுகவெண்டு... வெளிக்கிடும் ஒருவர், அந்தச் சந்தோசத்தையும் மறந்து அருமை மனைவியையும், பாசச்செல்வங்களையும் அந்தளவு காலத்துக்கும் எப்படிப் பிரிந்திருப்பதென்று, நினைத்துப் பிரிவுத் துயரில் மனதால் சாகத் தொடங்கிவிடும் ஐயிட்டத்தைவிட... இது நூறு மடங்கு மகா மகா வருத்தமான துயரக்காடே...!

ஒரு கூப்பிட்ட குரலுக்கு ஓடி வர ஆள்களில்லாத இந்தக் காண்டத்தில்... வெளிச்சங்களில்லை... கோவில் மணியோசையில்லை... வாழ்வோடு சேர்த்து எல்லாமே அறவே இருண்டுபோய்க் கிடக்கும். பேய்கள்... பிசாசுகள்... முனிகள் உறைந்துபோயிருக்குமிந்தக் குருதியையே கட்டியாக்கிவிடும் த்திறில்...? இந்த வசந்தமாளிகைப் படத்தில் அந்த நடிகர் திலகம் இரண்டு மனங்கள் வேண்டும் என்றுதான் பாடினாலும் பாடி முடித்தாரே...! இந்த அதியுயர் காண்டத்துப் பிரமாண்டமான மேடையேறி இந்த ஆயுதக் குவியலின்மேலே அற்பதமாய்... அதிர்ச்சியாய்... உறுதியாய் நின்று த்திறில்லாய் சாக நடித்து நடித்து கூதல் மாறிவிட்ட இந்த நடிகர் திலகங்க ளுக்கு இனி இத்தனைக்கும் பிறகு வாழ்வோடு வாழ்வாய்... உயிரோடு உயிராய்... சீரித்தும் விட்ட இந்த மண்ணையும்... இந்தக் கோமாதாக்களையும்... விட்டுப் பிரிந்து இதையெல்லாம் தாங்கி முடிப்பதற்கும்... நினைத்து வாழவும்... எத்தனை எத்தனையோ... இரும்பு மனங்கள்தான் வேண்டுமே...?

✪ ✪ ✪ ✪

திடீரென்று அர்ச்சுணாவின் சிந்தனைக் குளத்தில் பனம்பழம் விழுந்துவிட்ட கணக்காய்... அவன் பார்வை கிழக்குத் திசைக்கு அவுக்கென்று திரும்பிவிட்டபோது, அவனுடைய அந்த நேரத்துக் கேணல் தொடர்பான சிந்தனைக்குத் தோதாக மாட்டுக் கூட்டமொன்று, ஓகோவென்று அரக்கி அரக்கி வளவுப் பக்கமாய்த்தான், பரிமளிப்பாய்... பற்பலவாய் வந்துகொண்டிருந்தன.

'இளங்கன்று பயமறியாது' என்ற யதார்த்தமோ இப்போது முழுக்க முழுக்க மூழ்கிப்போய்விட்ட கதையாய்... கூட்டத்தில் துள்ளிக் குதித்து விளையாடி வந்துகொண்டிருந்த கன்றுப் பிள்ளைகள் எங்கோ, எட்டத்தில் அரனிப்பாய்க் கேட்டுக் கொண்டிருந்த, இராணுவ வாகனங்களின் ஓட்டா பாட்டங்களுக்கெல்லாம்... வில்லங்கம் வில்லங்கமாய்க் காதுகொடுத்துப் பயத்தை வருவித்துக் காட்டிவிட, பெரிய மாடுகள் பயத்தில் சலம் விட்டும் கொண்டன. இதெங்கடை வீடு தானென்று சொல்லியும் காட்டி விட்டாற்போல கூட்டத்தோடு கூட்டமாய்ச் சேர்ந்து, வாழும் அர்ச்சுணா பமிலியினந்த மாட்டுப் பிள்ளைகள் உரிமையோடு வீட்டு வாசலுக்கு வந்து கஞ்சிகழி நீரையும் இதுக்கென்று நினைத்து வைக்கப்பட்டிருக்குமந்த மிச்ச சொச்சங்களையும் ஒரு துவளும் மிச்சம் விடாமலுக்குப் பெரும் சோட்டை கொண்டு வந்த காரியத்தையும், செப்பமாய் முடித்தும் விட்டுக் கூட்டத்தோடு கூட்டமாய்... உடுத்துப் படுத்துத் தமது பிள்ளைகள் போற வடிவைப் பெற்றார் போகவிட்டுப் பார்த்துத் தங்களுக்குள் வாய்ச்சோப்பிப் பூரிப்பதுபோல... பிள்ளை குட்டியில்லாத கடனுக்கு இந்த அர்ச்சுணா தம்பதியினரும் அந்த அதுவே இதுவுமாகித் தங்கள் மாட்டுப் பிள்ளைகள் போற வடிவைப் போகவிட்டும் பார்த்து இரசித்துக் கலங்கியும் கொண்டார்கள்.

✪ ✪ ✪ ✪

திடீரென்று கோலொன்று இந்த அதியுயர் பாதுகாப்பு ஏரியாவையும் ஏறி மிதித்துக் கொண்டே வந்தும்விடுகின்றது. தென்மராட்சியா? வடமராட்சியா? இந்த இரண்டத்தை ஒன்றென்ற ஊகத்தோடு அர்ச்சுணா கோலை எடுத்துவிட்டபோது, இந்தத் தையிட்டிதான் பேசியதுபோல குளப்படியாரின் குரல் கன நாள்களின் பின்னால், அர்ச்சுணாவின் காதுக்குள் வந்து தொம்மென்று குதித்தும் விடுகின்றது.

ஜே.பியைக் காணவில்லை. என்பதுதான் குளப்படியாரின் முதலாவது தெரிவிப்பாயிருந்தபோது... அர்ச்சுணா படுமோசமாய்த் தனக்குள் அலுங்கிக் குலுங்கிக் கொடடுண்டு... பல பாட்டுக்கும் சிந்துண்டு போனான்... இந்தக் காணவில்லை என்கின்ற வார்த்தையையே காணவில்லை...என்றும்தான் வெடி கொளுத்திக் கொண்டாடுகின்ற அருமையான காலம் இப்ப இந்த நிமிடமே... வந்து குதிக்காதா என்று, ஆதங்கப் பட்டுக்கொண்டே அர்ச்சுணா, யூனியன் கல்லூரி ஸ்கவுட் மாஸ்ரரான இந்த ஜே.பி. தம்முடைய சகல சுகங்களையும் தூக்கியெறிந்துவிட்டு, இந்தத் தையிட்டி, இளவாலை, மாதகல், அதற்கப்பாலுமுள்ள இந்த நேரத்து நோந்துபோன, மக்களுக்கெல்லாம் ஓர் உன்னதமான, 'பற்றுச் சீட்டாய்'... மகாத்மாவாய்... மாமனிதராய்... தம்மையே ஆக்கியும் கொண்டவர்.

இந்த இப்பிடியாம்பட்ட நொந்துபோன உள்ளங்களின் இரட்சகரான ஜே.பி. ஐயா, எனி இல்லை என்றதற்குள் அடக்கம் பண்ணுப்பட்டு விட்டால், என்றெல்லாம் காதுக்குள் செல்போனையும் வைத்துக் கொண்டே... கடுமையாகத் திங் பண்ணி விடத் தொடங்கிய அர்ச்சுணா... ஒரே நேரத்தில் தனது புலன் இரண்டு சையிட்டுக்கும் தளம்பாமல் தறோவாய் வேலை செய்யும் என்ற எக்சாம்பிளாய்... நாளைக்கு விடியவும் ஐ..சி.ஆர்.சி கப்பல் டேற்..., ஜே.பியும் இல்லை. கரடியார் பமிலி ரைகருடைய ஆழ்ந்த கவலைக்குரிய சாவோடு சரியாகக் கொட்டுண்டுபோனார்கள்.

வெள்ளைத் தங்கச்சி மாட்டையும், கரடியார் அழுதழுது எங்கடை வீட்டிலை கொண்டுவந்து காட்டிவிட்டுப்போக, அந்த மாடும் 'ம்மா'வொன்று கூப்பிட்டது... எங்களுக்கோ அழுகை வந்திட்டுது. எந்தத் தீனும் தின்னேலை... குளப்படியின் கதைப்பையும் ஸ்ரெடியாய்க் கேட்டுக் கொண்டவன் குளறி அழுதே விடுகிறான்... மறுநாள் விடிந்து ஒரு கொஞ்ச நேரத்தில், ஐ.சி.ஆர்.சி. வாகனமொன்று, கோவிலடியில் வந்து நிற்க, அர்ச்சுணா தலைதெறிக்க ஓடுகின்றான்... பெரிய புதினமாய்... ஜே.பி. இறங்கி வருகிறார்...

(தொடரும்)

மேடை - 18
தையிட்டி அ.இராசதுரை



# வழக்கமான சொதப்பல்



**2013** ஆம் ஆண்டில் தெலுங்கில் 'அத்தாரிண்டிகி தாரேதி (அத்தை வீட்டுக்கு வழியென்ன?)' என்ற படம் வெளியானது. அந்தப் படத்தின் மறு தயாரிப்புத்தான் இந்தப் படம். சுந்தர் சி இயக்கியிருக்கிறார். அத்தையின் குடும்பம் பிரிந்துவிட, அதைச் சேர்த்து வைக்க வரும் கதாநாயகன் அத்தையின் மகளைக் காதலிக்கும் சிங்கார வேலன் முதலான படங்களில் வந்த வழக்கமான கதை.

**கதை**

ஸ்பெய்னில் மிகப் பெரிய பணக்காரக் குழுமமான ஆதித்யா குழுமத்தின் உரிமையாளரான பெரியவர் (நாசர்), தனது மகள் நந்தினி (ரம்யா கிருஷ்ணன்) செய்துகொண்ட காதல் திரு மணம் பிடிக் காமல் அவளை வீட்டை விட்டுத் துரத்திவிடுகிறார். பல வருடங்களுக்குப் பிறகு மகளைச் சந்திக்க வேண்டும் என விரும்புகிறார். அதைச் செய்வதற்காக ஸ்பெய்னிலிருந்து புறப்பட்டு இந்தியா வருகிறார் பேரன் ஆதித்யா (சிலம்பரசன்). அத்தை வீட்டில் ராஜா என்ற பெயரில் வேலைக்குச் சேர்கிறார். அங்கு, நந்தினிக்கும் அவரது குடும்பத்தி னருக்கும் ஏற்படும் பிரச்சனைகளைத் தீர்த்து வைக் கிறார். நந்தினியின் மகளைக் (மேகா ஆகாஷ்) காதலிக்கிறார். நந்தினியும் அவரது தந்தை குடும்பமும் ஒன்று சேர்ந்ததா, ஆதித்யாவின் காதல் நிறைவேறியதா என்பது மீதிக் கதை.

**பாத்திரங்கள்**

அன்பானவன் அசராதவன் அடங்காதவன் படம் பெரும் தோல்வியைச் சந்தித்த பிறகு, சிலம்பரசன் கதாநாயகனாக நடித்து வெளியாகியிருக்கும் படம் இது. தன்னுடைய பழைய பாணி வசனங்களுக்குத் திரும்பியிருக்கும் சிம்பு, நடனக் காட்சிகளில் மிகவும் சிரமப்படுகிறார். அவர் அழும் காட்சிகளும் பார்ப்பதற்குச் சிரமமாக இருக்கிறது. கேத்தரீன் தெரசா, மேகா ஆகாஷ் என இரண்டு நாயகிகள். இதில் கேத்தரீன் தெரசாவுக்குப் பெரிய வாய்ப்பு இல்லை. பேட்ட படத்தின் மூலம் தமிழ் இரசிகர்களுக்குப் பரிச்சயமான மேகா ஆகாசுக்கு இந்தப் படம் இன்னுமொரு நல்ல அறிமுகம். முதல் பாதியில் வரும் ரோபோ சங்கரின் நகைச்சுவைகள் புன்னகையை ஏற்படுத்த, பிற்பாதியில் வரும் யோகி பாபுவும் சற்றுக் கலகலப்பை ஏற்படுத்துகிறார்.

**பலம் - பலவீனம்**

சண்டை, நகைச்சுவை, குடும்பப் பிணைப்பு என எல்லா அம்சங்களையும் வைத்துப் படத்தை நகர்த்த நினைத்திருக்கிறார் சுந்தர். சி. ஆனால், பல காட்சிகள் மிகப் பழையனவாக இருக்கின்றன. அடுத்து வரும் காட்சிகளை இலகுவாக ஊகிக்க முடிகிறது. பிற்பாதியில் ஒரு சில சிறிய சம்பவங்கள் நீண்ட நேரம் நடக்கின்றன. இதனால், சோர்வு ஏற்படுகிறது. படத்தில் பாடல்களின் எண்ணிக்கையும் அதிகம். சுந்தர். சி. இரசிகர்களுக்குப் படம் சற்று ஏமாற்றமளிக்கலாம்.





# பரவாயில்லை ரகம்

படிப்பு என்றால் அலட்சியத்துடன் இருக்கும் ஜீ.வி. பிரகாஷ் விஜய் படம் வெளியாகின்றது என்றால் மட்டும் உற்சாகமாகி டிரம்ஸ் வாசித்து திரை யரங்கையே அதிர வைக்கிறார். ஒருநாள் அப்பா செய்த மிருதங்கத்தை வித்துவான் நெடுமுடி வேணுவிடம் கொடுப்பதற்காக இசைக் கல்லூரிக்குச் செல்கிறார். அங்கே நெடுமுடி வேணுவின் வாத்தியத் திறமையில் இலயிக்கிறார். இலக்கே இல்லாமல் திரிந்த ஜீ.வி.பிரகாஷ் அந்தக் கணத்தில் இருந்து நெடுமுடி வேணுவிடம் மிருதங்க வாத்தியம் கற்றுக்கொள்ளத் துடிக்கிறார். ஆனால், அவரது சாதி அதற்குத் தடையாக இருக்கிறது. நெடுமுடி வேணுவின் உதவியாளர் வினீத் ஜீ.வி.பிரகாஷை வேணுவின் வீட்டுக்குள்ளே விடுவதற்குக் கூட அனுமதி தர மறுக்கிறார்.

இந்தச் சூழலில் சாதி வேறுபாடுகளைக் கடந்து மிருதங்கம் கற்றுக்கொள்வது சாத்தியமா, அதற்கு குரு சம்மதிப்பாரா, குறிப்பிட்ட சமூகத்துக்கு மட்டுமே சொந்தம் என்று கொண்டாடும் கர்நாடக சங்கீதத்தை ஜீ.வி.பிரகாஷ் கைவரப் பெற்றாரா, மிருதங்கம் செய்யும் ஒரு குடும்பத்துக்கு அதை வாசிப்பதற்கான சுதந்திரம் இங்கு இருக்கிறதா போன்ற கேள்விகளுக்கு திரைக்கதையால் பதில் சொல்லியிருக்கிறார் இயக்குநர் ராஜீவ் மேனன்.

**பாத்திரங்கள்**

ஜீ.வி.பிரகாஷுக்கு 'சர்வம் தாளமயம்' 9ஆவது படம். ஆனால், நடிப்பில் முதலாவது படம் என்று சொல்லலாம். பொறுப்பற்ற இளைஞனாகத் திரிந்து கொண்டிருந்த அவர் தனது பொறுப்பை உணர்ந்து இப்போதுதான் சினிமாவில் நடித்திருக்கிறார். விஜய் இரசிகனாக பீட்டர் கதாபாத்திரத்தில் அறிமுகமாகும் காட்சியில் அவர் வழக்கமாகவே தெரிந்தார். தேவாலயக் காட்சியைத் தாண்டி பீட்டர் என்ற இளைஞனுக்கான பாத்திர வார்ப்பைக் கண்முன் நிறுத்திய விதத்தில் ஜீ.வி. தானும் நடிப்பார் என்பதை நிரூபித்திருக்கிறார். பதின்ம வயது முடிந்த இளைஞனுக்கு இருக்கும் குழப்பம், பெண் மீதான பருவ ஈர்ப்பு, எந்தக் குறிக்கோளும் இல்லாமல் திசை தெரியாமல் செல்லும் வாழ்க்கையின் தடுமாற்றம், இசை மீதான காதல், குருவின் மீதான தூய்மையான பக்தி, காதலி அருகிருந்தும் முழுமையடையாமல் இருக்கும் ஏக்கம், புறக்க ணிப்பின் வலி என அத்தனை உணர்வுகளையும் பக்குவமாக வெளிப்படுத்துகிறார். ஜீ.வி.யின் நடிப்பில் இது சிறந்த படம் என்பதில் சந்தேகம் இல்லை. சாதி எல்லாம் எனக்குப் பிரச்சினை இல்லை, குரு - சிஷ்யன் என்ற பாரம்பரிய முறையும், ஒழுக்கமுமே கலையைக் கற்றுக்கொள்ள அடிப்படைத் தகுதிகள் என்பதை மிக இலாவகமாகச் சொல்கிறார் நெடுமுடி வேணு. குருவாக, வழிகாட்டியாக ஜீ.வி.யை மெருகேற்றும் விதத்தில் தான் தேர்ந்த ஆசான் என்பதை நிறுவுகிறார். 'ஸ்கைப்' போன்ற தொழில்நுட்பத்தில் இசைக் கலையைக் கற்றுக்கொள்ள முடியாது என்பதையும் மிக அழகாகப் பதிவு செய்கிறார். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் படத்தை ஒற்றை ஆளுமையாகத் தூக்கி நிறுத்துகிறார் நெடுமுடி வேணு. தகப்பனின் தவிப்பையும், பொருளாதார ஏற்ற இறக்கத்தின் நிதர்ச னத்தையும், மிருதங்கம் செய்யும் தொழில் மீதான தன் உழைப்பையும் இளங்கோ குமரவேல் கதாபாத்திரம் பார்வையாளர்களுக்குக் கடத்துகிறது. வழக்கத்தைக் காட்டிலும் நேர்த்தியான, நுட்பமான நடிப்பில் இளங்கோ குமரவேல் மிளிர்கிறார். ஆதிரா பாண்டிலட்சுமி ஜீ.வி.யின் அம்மாவாகப் பாத்திரம் உணர்ந்து நடித்திருக்கிறார். வினீத்தின் நடிப்புப் பரவாயில்லை. ஜீ.வி.யின் காதலியாக வரும் அபர்ணா பாலமுரளி மிகச்சிறந்த ஊக்க சக்தியாகத் தடம் பதிக்கிறார். திவ்யதர்ஷினி, பாலாசிங், மாரிமுத்து, சாந்தா தனஞ்செயன், சுமேஷ் நாராயணன் ஆகியோர் கதையின் போக்கில் கவனிக்க வைக்கிறார்கள்.




**ஒளிப்பதிவு - காட்சித் தொகுப்பு - இசை**

ரவி யாதவின் ஒளிப்பதிவு படத்துக்கு வலுச் சேர்க்கிறது. ஏ.ஆர்.ரஹ்மான் இசையில் பாடல்கள் மீளவும் இசைக்கும் ரகத்திலுள்ளன. பின்னணி இசையில் ரஹ்மான் ரசிக்க வைக்கிறார். ஒரு பாடலுக்கு மட்டும் ராஜீவ் மேனன் இசையமைத்துள்ளார். அவரின் இசையறிவு ஈர்க்கிறது.

**பலம் - பலவீனம்**

குரு - சிஷ்யன் பாத்திர வார்ப்பில் இயக்குநரின் உழைப்பு பளிச்சிடுகிறது. அரச இசைக் கல்லூரியில் இருக்கும் இட ஒதுக்கீடு, கிராமங்களில் இன்னமும் கடைப்பிடிக்கப்படும் இரட்டைக் குவளை, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் நிலை ஆகியவற்றைத் தொட்டுச் சென்றிருப்பதும் இயக்குநரின் அக்கறையைக் காட்டுகிறது. நேரடி ஒலியை மட்டும் படத்தில் பயன்படுத்தியதற்கு வாழ்த்துகள். தொடர்ந்து முட்டுக்கட்டை போடும் இசைக்கலைஞரும் ஒருகட்டத்தில் இசையின் லயத்தில் மனமாற்றம் அடைவதைக் காட்சிப்படுத்தி இருப்பதும் சிறப்பு.

இனம், மதம், மொழி கடந்து ஜீ.வி. இசையைக் கற்க மேற்கொள்ளும் பயணத்தை தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பயன்படுத்திக்கொண்ட விதம் ராஜீவ் மேனின் புத்திசாலித்த னத்தைக் காட்டுகிறது. விஜய் இரசிகர் என்பதற்கான முன்னெடுப்புகள், பயணத்துக்கான முன் தயாரிப்புகள், பயண அனுபவங்கள் என்று சில குறைகள் மட்டுமே உள்ளன. ஆனால், அது கதையின் போக்கில் காணாமல் போகின்றன. கிராமங்களில் இன்னமும் கடைபிடிக்கப்படும் சாதிப் பாகுபாட்டையும், நகரங்களில் அது வேறுவிதமாகப் பின்பற்றப்படுவதையும் பின் சாதி மறந்த சமூகத்துக்கு நகரம் எப்படி வழிகோலுகிறது என்பதையும் இயக்குநர், ஒளிப்பதிவாளர் ராஜீவ் மேனன் மிகச் சாமர்த்தியமாகப் பதிவு செய்துள்ளார். இசை இரசிகராக இல்லாவிட்டாலும் கச்சிதமான, தரமான படம் பார்க்க நினைப்பவர்க ளுக்கு 'சர்வம் தாளமயம்' நல்ல அனுபவத்தைத் தரலாம்.

# ஈரானியப் படங்களின் திரைவிழா...!

திரைப்பட ஆர்வலர்களுக்கு இந்தியாவின் சென்னை நகரில் ஈரானியத் திரைப்படங்களைத் திரையிட்டுக் காட்டவிருக்கிறது 'ஈரானியப் பட விழா'. சென்னை பன்னாட்டுப் படவிழாவை ஒருங்கிணைத்துவரும் இண்டோ சினி அப்ரிசியேஷன் பவுண்டேஷன் திரைப்படச் சங்கம் மும்பையில் உள்ள ஈரான் இஸ்லாமியக் குடியரசு கலாசார இல்லத்தோடு இணைந்து சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள அலையன்ஸ் பிரான்சேஸ் மையத்தில் இந்த மாதம் 11ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரை மூன்று நாள்கள் மாலைப்பொழுதுகளில் இந்தப் பட விழாவை நடத்துகிறது.






### 'ஐ ஆம் தாரானே, ஐ ஏம்15 இயர்ஸ் ஓல்ட்'

பெண் கதாபாத்திரமான தாரானேவுக்கு வயது 15. தாய் இல்லாத அந்தச் சிறுமியின் தந்தை சிறைக் கைதி. கம்பள வியாபாரியான அமீர், தாரானே மீது ஆசைகொள்கிறான். இருவருக்கும் திருமணம் நடத்திவைக்கப்படுகிறது. அமீருக்கும் தாரானேவுக்கும் இடையில் எத்தகைய மனப்பொருத்தமும் இல்லாமல் போக இருவரும் நான்கு மாதங்களில் மணவிலக்குச் செய்துகொள்கிறார்கள். ஊரையும் உறவையும் விட்டு ஜேர்மனிக்கு அமீர் சென்றுவிடுகிறான். அந்தத் தருணத்தில் தான் கருவுற்றிருப்பது தாரானேவுக்குத் தெரியவருகிறது. தன்னுடைய குழந்தையைப் பெற்றெடுக்க முடிவுசெய்யும் தாரானேவின் கதைதான், 'ஐ ஏம் தாரானே, ஐ ஏம்15 இயர்ஸ் ஓல்ட்' திரைப்படம்.




### 'த கலர் ஒவ் பேரடைஸ்' இலிருந்து 'வெட் ட்ரீம்ஸ்' வரை...

தொடு உணர்வால் உலகை இரசிக்கும் பார்வையற்ற ஒரு சிறுவனின் வாழ்வனுபவம், 'த கலர் ஒவ் பேரடைஸ்'. இணையத்தின் வழியாக நண்பர்களாகி, பின்பு கேளிக்கைக்காக ஒன்றுகூடிப் பேராபத்தில் சிக்கிக்கொள்ளும் இரண்டு இளைஞர்களின் கதை, 'கிரேசி கேஸில்'. தன்னுடைய மாணவியிடம் காதல் வயப்பட்டு அவதிப்படும் கல்லூரிப் பேராசிரியர் பற்றியது, 'ஸ்வீட் டேஸ்ட் ஒவ் இமேஜினேஷன்'. விபத்தில் சிக்கி நினைவிழக்கும் நபர் ஒருவரின் விசித்திரமான உலக அனுபவங்களின் திரை வடிவம், 'அல்ஸைமர்'. 16 வயதில் பருவமடைகிறான் ஆராஷ். அதுவரை தாயின் வளர்ப்பில் இருந்தவன் இனித் தனியே வசிக்கும் தந்தையோடு இருப்பதற்கு முடிவெடுக்கிறான். பிறகு அவன் சந்திக்கும் பெண்ணால் அவன் வாழ்க்கையின் திரை மாறுவதைச் சொல்கிறது 'வெட் ட்ரீம்ஸ்'. இத்தகைய தெரிவு செய்யப்பட்ட சில ஈரானியப் படங்கள் திரையார்வலர்களுக்கு விருந்தாகவுள்ளன.

# 'பைட்டிங் வித் மை பேமிலி'



மல்யுத்த வீராங்கனை ஒருவரின் உண்மைக்கதையே 'பைட்டிங் வித் மை பேமிலி' என்ற தலைப்பில் படமாகியிருக்கிறது. அதைத் தயாரித்திருப்பவர் முன்னாள் மல்யுத்த வீரரும் ஹொலிவூட் நடிகருமான ட்வைன் ஜோன்சன்.

**கதை**

பிரிட்டனைச் சேர்ந்தவர் சரயா பிவிஸ். இவருடைய பெற்றோர் உட்படக் குடும்பத்தில் அனைவருமே தொழில் முறை மல்யுத்த வீரர்கள். சரயாவுக்கும் அவருடைய சகோதரனுக்கும் குழந்தைப் பருவத்திலிருந்தே உலக அளவிலான ம்ல்யுத்தப் போட்டிகளில் கலந்து கொண்டு புகழ்பெறுவது கனவாக இருந்தது. பல முயற்சிகளுக்குப் பின்னர் சரயாவின் 12ஆவது வயதில் இதற்கான வாய்ப்புக் கிடைத்தது. 'பெய்ஜ்' என்ற மேடைப் பெயரில் பங்கேற்று மல்யுத்தப் பதக்கங்களை சரயா வெல்லத் தொடங்கினார். பிரிட்டன், அமெரிக்கா மட்டுமன்றிப் பல்வேறு ஐரோப்பிய நாடுகளிலும் 'பெய்ஜ்' பங்கேற்ற போட்டிகள் வரவேற்புப் பெற்றன. தனது 25ஆவது வயதில் கழுத்தில் அடிபட்டதன் காரணமாக 2017ஆம் ஆண்டில் அவர் ஓய்வு பெற்றார்.

**ஆவணப்படத்தைத் தழுவிய முழுப்படம்**

'பெய்ஜ்' மேற்கொண்ட தொடக்க கால முயற்சிகள், போராட்டங்கள், சாதனைகள் ஆகியவை குறித்து 2012ஆம் ஆண்டில் 'த ரெஸ்ட்லர்ஸ்: 'பைட்டிங் வித் மை பேமிலி' என்ற ஆவணப் படம் வெளியானது. முன்னாள் மல்யுத்த வீரரான 'த றொக்' ட்வைன் ஜோன்சன், இந்த ஆவணப் பதிவைத் தழுவி ஹொலிவூட் திரைப் படமாக்கத் திட்டமிட்டார், அதன்படி இந்தத் திரைப் படம் உருவாகியுள்ளது.

**பாத்திரங்கள்**

பெய்ஜ் பாத்திரத்தில் ப்ளோரன்ஸ் ப்யூ நடிக்க, ஜாக் லோடன், நிக் ப்ராஸ்ட் உள்ளிட்ட பலர் துணைக் கதாபாத்திரங்களில் நடித்திருக்கிறார்கள். ஸ்டீஃபன் மெர்சன்ட் எழுதி இயக்கி உள்ளார். 'தி ராக்' ஆகட்வைன் ஜோன்சனே தோன்றி இருப்பதுடன் தயாரிப்பிலும் இணைந்திருக்கிறார். தொழில் முறை வீராங்கனை குறித்த படமென்பதால் புகழ்பெற்ற மல்யுத்த மேடைகளில் நேரடியாகப் படமாக்கியுள்ளனர். பெய்ஜ் தோன்றும் உக்கிரமான மல்யுத்தக் காட்சிகளில் அமெரிக்கத் தொழில்முறை மல்யுத்த வீராங்கனையான டெஸ்சா பிளான் சார்ட்டைப் பயன்படுத்தி உள்ளனர். நிஜ வீராங்கனையின் சாகசக் கதையை நகைச்சுவையாக விவரிக்கும் 'பைட்டிங் வித் மை பேமிலி', இந்த மாதம் 14ஆம் திகதியன்று வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.





# இந்த வாரம்

**10.02.2019 முதல் 16.02.2019 வரை**

உங்களுக்கு எப்படி?

## மேடம்

சுக்கிரன், சூரியன், புதன், சந்திரன் அளப்பரிய நற்பலன் தருவர். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடன்பிறந்தவர் பாசத்துடன் நடந்து கொள்வர். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். பிள்ளைகள், பெற்றோர் சொல்லை மதித்து செயல்படுவர். வழக்கு விவகாரத்தில் சமரசத் தீர்வு எளிதாகப் பெறலாம். நிலுவைப்பணம் இதமான அணுகுமுறையால் வரவாகும். மனைவியின் ஆர்வமிகு செயல்களை ஊக்கப்படுத்துவீர்கள். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகி இலாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் குறித்த காலத்தில் பணி இலக்கை நிறைவேற்றுவர். வெளியூர்ப் பயணம் அளவுடன் இருக்கும். மாணவர்கள் படிப்பில் கூடுதல் கவனம் வேண்டும்.

## இடபம்

ராகு, புதன், குரு, சுக்கிரன், சந்திரன் அனுகூலபலன் தருவர். புதிய யுக்தியுடன் பணிகளை துவங்குவீர்கள். சமூக நிகழ்வு இனிய அனுபவம் தரும். தாயின் கருத்துக்கு மாறாக எதுவும் சொல்ல வேண்டாம். வெளியூர்ப் பயணம் அளவுடன் இருக்கும். பிள்ளைகள் படிப்பு வேலையில் முன்னேற்றம் காண்பர். நேரத்திற்கு உணவு உண்பதால் உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும். மனைவியின் நற்செயல் குடும்ப நலனுக்குப் பெரிதும் உதவும். தொழில், வியாபாரம் புதியவர்களின் ஆதரவில் வளர்ச்சியும் பணவரவும் அதிகரிக்கும். பெண்கள் கணவரின் அன்பைப் பெற்று மகிழ்ச்சிகரமாக வாழ்வர். மாணவர்கள் படிப்புடன் கலைகளும் பயில்வர்.

## மிதுனம்

செவ்வாய், சந்திரனால் ஓரளவு நன்மை கிடைக்கும். திட்டமிட்ட பணிகளை கவனமுடன் நிறைவேற்றுவீர்கள். நற்பெயரும் புகழும் தேடி வரும். வாகனத்தின் பயன்பாடு அளவுடன் இருக்கும். தாய்வழி உறவினர் ஓரளவு உதவுவர். பிள்ளைகள் ஆர்வமிகுதியால் செயல்களில் குளறுபடியை எதிர்கொள்வர். நோய் தொந்தரவு குறைந்து உடல் ஆரோக்கியம் பலம் பெறும். நண்பரிடம் கடனாகக் கொடுத்த பணம் திரும்பக் கிடைக்கும். மனைவியிடம் உறவினர் குடும்ப விவகாரம் பேச வேண்டாம். பணியாளர்கள் கூடுதல் வேலைவாய்ப்பை ஏற்றுக் கொள்வர். பெண்கள் செலவில் சிக்கனம் பின்பற்ற வேண்டும்.

## கடகம்

புதன், குரு, சனீஸ்வரர் சந்திரனால் அளப்பரிய நற்பலன் ஏற்படும். சமூக நிகழ்வு மனதில் நல்ல மாற்றம் தரும். செயல்களில் மனப்பூர்வமாக ஈடுபடுவீர்கள். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்க தாமதமாகலாம். வெளியூர் பயணம் அளவுடன் இருக்கும். பிள்ளைகள் மனதில் இருந்த குழப்பமான சிந்தனை விலகும். வழக்கு விவகாரத்தில் அனுகூலம் தரும் வகையில் புதிய திருப்பம் ஏற்படும். மனைவி குடும்ப நலனில் அக்கறை கொள்வார். வீட்டுக்கு தேவையான பொருள்கள் வாங்குவீர்கள். தொழில், வியாபாரத்தில் அளவான பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் அதிக வேலைவாய்ப்பை ஏற்றுக்கொள்வர்.

## சிங்கம்

சூரியன், சுக்கிரன், கேது, சந்திரன் அனுகூல அமர்வில் உள்ளனர். செயல்களில் மனிதாபிமானமும் நேர்த்தியும் உருவாகும். குடும்பத்தில் ஒற்றுமை வளரும். உடன்பிறந்தவர்களுக்கு உதவுவீர்கள். புதிய வீடு, வாகனம் விரும்பியபடி வாங்கலாம். பூர்வ சொத்தில் வளர்ச்சியும் பணவரவும் கூடும். பிள்ளைகள் நேர்மறை எண்ணங்களுடன் செயல்படுவர். படிப்பு, வேலையில் முன்னேறுவர். கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவீர்கள். மனைவியின் நற்செயல்களை முழுமனதுடன் பாராட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகி வளர்ச்சிப் பாதையில் நடைபோடுவீர்கள். பணியாளர்கள்களுக்கு சலுகை கிடைக்கும்.

## கன்னி

ராகு, புதன், சந்திரன், சுக்கிரனால் அதிகளவு நன்மை உண்டாகும். பேச்சு, செயலில் வசீகரம் உருவாகும். நண்பர்களின் வாழ்த்து கிடைக்கும். உடன்பிறந்தவர் சொந்த பணிகள் நிறைவேற உதவி கேட்பர். குடும்பச் செலவில் தாராளம் இருக்கும். பிள்ளைகள் அறிவாற்றல் செயல் திறனில் மேம்படுவர். உடல் ஆரோக்கியம் பலம் பெறும். மனைவி கருத்து ஒற்றுமையுடன் நடந்து கொள்வார். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். தொழிலில் உற்பத்தி விற்பனை செழித்து பணசேமிப்பு கூடும். பணியாளர்கள் பணியிடச்சூழல் உணர்ந்து பணிபுரிவர். பெண்கள் பிரார்த்தனை நிறைவேறி இஷ்ட தெய்வவழிபாடு நடத்துவர். மாணவர்கள் படிப்பில் முன்னேறி நண்பர்க்கும் உதவுவர்.

## துலாம்

குரு, சனீஸ்வரர், சுக்கிரனால் அளப்பரிய நன்மை வந்து சேரும். மனதின் உற்சாகம் செயலில் பரிமளிக்கும். நண்பர், உறவினரின் பாராட்டு கிடைக்கும். குடும்பத்தில் சுபநிகழ்வு ஏற்படும். வெளியூர்ப் பயணங்கள் இனிய அனுபவம் தரும். பிள்ளைகளின் ஆர்வம் மிகுந்த செயல் நிறைவேற உதவுவீர்கள். எதிரியால் உருவான கெடு செயல் பலமிழக்கும். நோய் தொந்தரவு குறையும். மனைவி வழி உறவினர் அன்பு பாராட்டுவர். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சியும் பணவரவும் அதிகரித்து சேமிப்புக் கூடும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும்.

## தனுசு

சுக்கிரன், சந்திரன் மட்டுமே ஓரளவு நற்பலன் தருவர். செயல்களில் நிதானம் இருக்கும். குடும்பச்செலவு அதிகரிக்கும். நம்பகத்தன்மை குறைவானவருக்கு வீடு, வாகனத்தில இடம் தர வேண்டாம். பிள்ளைகளின் செயல்களைக் கவனித்து ஒழுங்கு செய்யவும். பணம் கொடுக்கல் வாங்கலில் பாதுகாப்பு பின்பற்ற வேண்டும். மனைவி உங்களின் கருத்துக்களை ஏற்றுக் கொள்வார். கடன் பெறுவதில் நிதானம் வேண்டும். தொழிலில் உற்பத்தி விற்பனை சுமாராக இருக்கும். அரசு உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம். பணியாளர்கள் கடமையுணர்வுடன் பணிபுரிவதால் நற்பெயரை பாதுகாக்கலாம்.

## விருச்சிகம்

சூரியன், புதன், செவ்வாய், சுக்கிரன் ஆதாயபலன் தருவர். மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். சமூகநலப் பணியிலும் ஈடுபடுவீர்கள். புதிய வீடு, வாகனம் வாங்க அனுகூலம் ஏற்படும். பிள்ளைகளின் எதிர்கால நலனுக்கு தேவையானதைச் செய்வீர்கள். பூர்வ சொத்து பராமரிக்க கூடுதல் பணம் செலவாகும். பகைவர்கள் அறிவுப்பூர்வ செயலை வியந்து நோக்குவர். மனைவியிடம் பாராட்டுப் பெறுவீர்கள். சுற்றுலா சென்று வர திட்டமிடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும் ஆதாய பணவரவும் உண்டு. பணியாளர்களின் சிறப்பான பணிக்கு பாராட்டு கிடைக்கும்.

## மகரம்

குரு, சுக்கிரன், சந்திரனால் அளப்பரிய நற்பலன் கிடைக்கும். மனதில் இருந்த கவலை நண்பரின் உதவியால் மாறும். கருணை நிறைந்த மனதுடன் பணிபுரிவீர்கள். வாழ்வியல் நடைமுறை சிறப்பாகும். குடும்பத்தில் சுபநிகழ்வு ஏற்படும். வீட்டில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். வாகனத்தில் அதிக வசதி பெற சில மாற்றம் செய்வீர்கள். இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவீர்கள். பிள்ளைகள் வழிகாட்டு தலை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வர். மனைவியின் எண்ணங்களுக்கு முக்கியத்துவம் தருவீர்கள். தொழிலில் உற்பத்தி விற்பனை அதிகரித்து பணவரவு கூடும். பணியாளர்கள் அதிக தொழில் நுட்பம் அறிந்து சிறப்பாக செயல்படுவர்.

## மீனம்

குரு, சூரியன், கேது, சந்திரன் அதிர்ஷ்டகர பலன் தருவர். பணிகளை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். பேச்சில் ஆன்மிக கருத்து மிகுந்திருக்கும். உறவினர்களுடன் மகிழ்ச்சிகர சந்திப்பு ஏற்படும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். பிள்ளைகள் அறிவார்ந்த செயலால் பெற்றோருக்கு பெருமை தேடித் தருவர். கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். மனைவி வழி சார்ந்த உறவினர்கள் பாராட்டுவர். வெளியூர்ப் பயணம் ஓரளவு நன்மையை தரும். தொழில், வியாபாரத்தில் போட்டி குறைந்து வளர்ச்சி அதிகரிக்கும். பணியாளர் பணியிடத்தின் அனுகூல சூழல்களை உணர்ந்து பணிபுரிவர். மாணவர்கள் லட்சியத்துடன் படித்து புதிய இலக்கை அடைவர்.

## கும்பம்

செவ்வாய், ராகு, சுக்கிரன், சனீஸ்வரர் ராஜயோக பலன் தருவர். மனதில் எதிர்கால வாழ்வை வளமாக்க புதிய திட்டம் உருவாகும். நண்பர்களின் உதவி இயன்ற அளவில் கிடைக்கும். புதிய வீடு, வாகனம் விரும்பியபடி வாங்கலாம். பிள்ளைகளின் எண்ணங்களை உணர்ந்து இதமாக நல்வழி நடத்தவும். சத்தான உணவும் சீரான ஓய்வும் பின்பற்றி உடல் ஆரோக்கியத்தை பாதுகாத்திடுவீர்கள். பகைவர்களும் அன்பு பாராட்டுகின்ற புதிய சூழல் உருவாகும். மனைவியின் பாசம் நிறைந்த செயல் குடும்ப நலனை மேம்படுத்தும். தொழில், வியாபாரத்தில் தேவையான மூலதனத்தில் அபிவிருத்தி செய்வீர்கள். பணியாளர் அக்கறையுடன் பணி இலக்கை நிறைவேற்றுவர்.

(00ஆம் பக்கத் தொடர்ச்சி)

# விதி வரைந்த பாதையிலே...!

பிரமையில் வெவெலத்துப்போன சரவணன் மரத்துடன் மோதிய சைக்கிளை நோக்கி ஓடினான். அவன் பின்னால் ஓடிவந்த திவாகர் "சரவணா கிட்டப்போகாதே எங்களில் பிழையில்லை அவன் வேகமாக வந்து மோதியிருக்கின்றான். இங்க நிண்டால் பிழை நாளைக்கு உன்ரை கலியாணம் பொலிஸ் அது இதெண்டு போனா பெரிய பிரச்சினையா போயிடும் வா"

அவன் கூறியதைக் கேட்காத சரவணன் "திவாகர் பாவமடா அடிபட்டு கிடக்கிற ஒருத்தனைக் கண்முன்னால கண்டிட்டு எப்பிடிப் போறது. மனச்சாட்சி இல்லாமல் போறதே. ஆஸ்பத்திரிக்கு கொண்டு போவம் வா"

"உனக்கு பைத்தியமா நாங்கள் தாமதிக்கிற ஒவ்வொரு நிமிஷமும் எங்களுக்குத்தான் பிரச்சினை வேறுயாராவது கொண்டுபோய் ஆஸ்பத்திரியில சேர்க்கட்டும். நாங்கள் போவம் வா" சரவணனை வற்புறுத்தி அழைத்துச் சென்றான் திவாகர்.


இப்போது மோட்ட சைக்கிளை திவாகரே ஓட்டினான்.

"திவாகர் பாவமடா அந்த ஆள் யாராவது இந்த நேரத்தில இந்தப் பக்கமா வராமல் இருந்தால் அந்தாளின்ரை உயிருக்கே ஆபத்தா போகும். நாங்கள் ஆஸ்பத்திரியில சேர்த்திட்டு போயிருக்கலாம்"

"சரவணா அப்படி இந்தப்பக்கமா ஒருத்தரும் வராமல் இருக்கமாட்டினம். எங்கன்ர நிலமை நிற்க ஏலாமல் போட்டுது. அவர்தானே வேகமாக ஓடிவந்து தானாகவே மரத்தோட மோதினவர். நீ மோட்டார் சைக்கிளை வெட்டி எடுக்கேயெண்டா உன்ரை மோட்டார் சைக்கிளிலதான் மோதி இருப்பான். கடவுள்தான் காப்பாத்தியிருக்கிறார். நீ வீட்டில் ஒருதருக்கும் இதைப்பற்றிச் சொல்லாதை" திவாகரன் கூறியதைக் கேட்ட சரவணன் மௌனமாக இருந்தான்.

தான் கூறியதைக் கேட்ட சரவணன் மௌனமாக இருந்ததை அவதானித்த திவாகர்,

"சரவணா.. வீட்டில இதை அறிஞ்சா எல்லாரும் ரெண்சனாகி விடுவினம். நாளைக்கு விடிஞ்சால் கலியாணம் அதை மட்டும் நினை முகத்தை பேயறைஞ்ச மாதிரி வைச்சிருக்காதை" வீட்டுக்கு வந்த சரவணனிடம் "தம்பி மண்டப



வேலை எல்லாம் முடிஞ்சுதே நீ வரும்வரையும் நான் அப்பாவுக்குப் பதில் சொல்லிக் களைச்சுப் போனன்"

"அம்மா எனக்குத் தலைவலியாய் இருக்கு நான் பனடோல் போட்டிட்டு நித்திரை கொள்ளப்போறன். மண்டபத்தில சாப்பிட்டனாங்கள். சாப்பாடு வேண்டாம்" கூறியவன் தன் அறைக்குச் சென்று கதவைத் தாளிட்டான்.

தூக்கம் வரவில்லை நடந்த சம்பவமே கண்ணுக்கு முன்னால் வந்து மனதை அலைக்கழிக்கிறது. அதிகாலை ஐந்து மணிக்கே கண்ணயர்ந்தான்.

திருமண மண்டபத்தில் கூட அவன் மகிழ்ச்சியாக இருக்கவில்லை. சாரு அவனது சோர்வையும் கலகலப்பற்ற தன்மையையும் பார்த்து மெதுவாக "சரவணா... என்ன முகத்திலே சந்தோசத்தையே காணேல... ஏதாவது சுகமில்லாமல் இருக்கா..."

"இல்லை சாரு இரவு நித்திரை இல்லை தலையிடியா இருக்கு..." சரவணன் கூறியதைக் கேட்டவள் "சரி வீட்டில ஒரே சத்தமாயிருக்கும் அதுதான் நித்திரை வரேல நானும் இரவு தூங்க முடியேல..."

திருமணம் முடிந்தது. நண்பர்கள் உறவினர்கள் ஆசிர்வாதத்துடன் சாருலதாவின் கழுத்தில் தாலியைக் கட்டினான் சரவணன். அக்கினியை வலம் வரும்போது அவன் மனம் குற்ற உணர்ச்சியால் தவித்தது. விபத்திலே சிக்கியவன் திருமணமானவனாக இருந்தால் அவன் குடும்பம் எவ்வளவு தவிக்கும். இந்தக் குற்ற உணர்ச்சியே எனது ஆயுளைத் தின்றுவிடும் இன்று வீட்டுக்குச் சென்றதும் சாருவிடம் அனைத்தையும் கூறி இது தொடர்பாக விசாரித்து அறிந்து ஏதாவது செய்ய வேண்டும். எது நடந்தாலும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற உறுதியுடன் மனைவியின் கரங்களை இறுகப்பற்றினான் சரவணன்.

## சொற்சிலம்பம் போட்டி இல: 557

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | | 4 | ■ | 5 |
| 6 | | ■ | | ■ | 7 | 8 | |
| | | 9 | | 10 | | | |
| 11 | 12 | | | | ■ | | ■ |
| 13 | | | | ■ | 14 | | 15 |
| ■ | 16 | | ■ | 17 | | | |
| 18 | | ■ | 19 | | ■ | 20 | |
| | ■ | 21 | | | | | |

அனுப்புபவர் பெயர்:........................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

..............................................................

கையொப்பம்:.................................................

**இடமிருந்து வலம்**

1. மயிரிழையில் பிழைத்துக் கொள்வதை இப்படிக் கூறுவர்.
6. இது போதை தரும்
7. விலக்கும் சொல்
9. இருபதுக்கு முந்தியது
11. இளவேனில் காலத்துக்கு உரியவன்
13. மாறுபடல்
14. தடி
16. சேய்க்கு உகந்தது
17. நிறை
18. இது இரண்டொழிய வேறில்லை
19. பாதை
20. எழு
21. சமிபாட்டுத் தொகுதியில் தேவையற்ற அங்கம். தொல்லை தருவதால் வெட்டி அகற்றுவர்.

**மேலிருந்து கீழ்**

1. ஒரு பெயர்
2. பூப்பு காலம்
3. நிறுத்துதல்
4. ஒரு கோள்
5. எவர் அங்கே?
8. விளக்கம்
9. கொட்டகை
10. எடை அளவு
12. திட்டவட்டமாக அரைவாசி
14. வர்த்தக நிலையம்
15. பெண் பிள்ளை
17. வனப்பு
18. திறப்பு
19. ஒரு திசையைக் குறிக்கும் சொல்
20. உள்ளது.

வாசகர்கள் மத்தியில், குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 555 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) பஞ்சமாபாதகம் (7) மலையாளம் (8) சதிர் (10) சம்பவி (12) மின் (13) ஆம் (14) லைலா (15) பகல் (18) ஆண்டு (19) விவாகம் (21) கடப்பாடு (22) வேம்பு (23) திரிபுரா

**மேலிருந்து கீழ்**

(1) பஞ்சமி (2) சமர் (3) மாலை (4) பாயாசம் (5) தளம் (6) கம்பலை (9) தின்பண்டம் (11) விலாசம் (13) ஆல் (16) கடுப்பு (17) அவா (18) ஆகவே (19) விடுதி (20) கம்பு

## போட்டி விதிகள்.

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே
ரூபா 300/=, ரூபா 250/=,
ரூபா 200=, ரூபா 150/=
ரூபா 100/=
பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 555 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
சு.கீர்த்திகன்,
கீரத்தி பல்பொருள் அங்காடி,
வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.

**2 ஆம் பரிசு**
த.சிவநேசன்,
அளவெட்டி கிழக்கு,
அளவெட்டி.

**3 ஆம் பரிசு**
திருமதி ப.செல்லத்துரை,
புலோலி தென்மேற்கு, புலோலி

**4 ஆம் பரிசு**
ம.சத்தியசீலன்,
இல.463/6, ஹொறவப்பொத்தான வீதி, இறம்பைக்குளம், வவுனியா.

**5 ஆம் பரிசு**
வி.புஸ்பநாதன்,
இல.443 நாவலர் வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

**பாராட்டுப் பெறுவோர்**

திருமதி ச.லிங்கமூர்த்தி.
அமெரிக்கன் மிசன் பாடசாலை வீதி, வல்வெட்டித்துறை.

சீ.பாலசுந்தரம்,
சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்.

மு.கந்தையா,
தபால வீதி,
சாவகச்சேரி.

**சொற்சிலம்பம் போட்டி இல.557**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (20.02.2019 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாக, தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.558 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 24.02.2019ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களாக அறிவிக்கப்பட்டு, இதுவரை தமக்கான பரிசுக் காசோலைகள் கிடைக்கப்பெறாதவர்கள் வார நாள்களில் உதயன் அலுவலக நிதிப் பிரிவில், போட்டிக் கூப்பன்களில் தாம் குறிப்பிட்ட தமது பெயர், வதிவிட விவரங்களை உறுதிப்படுத்தி தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள இயலும். போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 552 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

தொகுப்பு
ந.சிதம்பரதாசன்

கலை இலக்கியப் படைப்பாளிகளின் எழுத்துக்களை அவர்களின் நூல்களில் இருந்தும், சிற்றேடுகளில் இருந்தும் தொகுத்தளிப்பது இந்தப் பகுதி. அந்த வகையில் இது ‘நேரத்தைக் கையாள்வது எப்படி?’ எனும் தலைப்பில் சி.எஸ்.தேவநாதன் என்பவல் எழுதிய நூலில் இடம்பெற்றுள்ள சில பகுதிகள்.

## கலை இலக்கியத்தில் கொய்ததும் கொழித்ததும்

# நேரத்தின் அருமை

இடர்ப்பாடு மிக்க வேலைகளைத் துணிவோடு மேற்கொள்கின்றவர்க்கு நேரம் மற்றெவற்றையும்விட மதிப்பில் உயர்ந்ததாகும். தொழிலதிபர் நவீன இயந்திரங்களைத் தம்முடைய உற்பத்திப் பிரிவில் பயன்படுத்துவதன்மூலம் தொழிலாளர்களின் உழைப்பை, நேரத்தை மிச்சப்படுத்துகிறார். குறைவான உழைப்பில் அதிக உற்பத்தி. அவர் வாங்குவது மற்றச் சக்கரற்களை இயக்குவதற்கு உதவும் பற்சக்கரமும், உலோக ஆணிகளும், சுழல்தண்டும், விசைப்பொறியையும் அல்ல, செலவைக் குறைத்து ஆதாயத்தை அதிகரிக்கின்ற நேரத்தையும்தான்.

தயாரிப்புத் துறையில் தலைசிறந்த எடுத்துக்காட்டாக விளங்குபவர் ஹென்றிபோா்ட். நேரத்தைப பயன்படுத்தத் தெரிந்தவர் அவர். தம்முடைய செயற்பாட்டு முறையின் மூலம் துரிதமாகத் தயாரித்து மலிவான விலையில் விற்க முடிந்தது அவரால்.

நேரத்தை மிச்சப்படுத்தக்கூடிய அனைத்தும் மதிப்பு மிக்கவைதாம். எந்தக் கருவியாகட்டும், செய்முறையாகட்டும் ஒருவர் தமது செயலுக்குச் செலவிடும் நேரத்தை வெகுவாகக் குறைக்கும் எனில் அது பணத்துக்குச் சமானம். அதனால் தான் காலத்தைப் 'பொன்' என்கிறோம். இளைஞன் புத்தகத்துக்காகவும், தன்னுடைய வேலை தொடர்பான பயிற்சிக்காகவும் செலவிடுகின்ற தொகை நேரத்தை அவனுக்குச் சேமித்துக் கொடுக்கும். அடுத்தவர்களுடைய அறிவையும், அனுபவத்தையும் வாங்குவதன் மூலம் தன்னுடைய குறிக்கோளை அவன் விரைவாகவும், நல்ல பலன் பெறக்கூடிய விதத்திலும் அடைகிறான்.

உங்கள் கையில் இருக்கும் இருபத்துநான்கு மணிநேரத்தில் தான் நீங்கள் ஆரோக்கியம், மகிழ்ச்சி, மன நிறைவு, ஆன்ம வளர்ச்சி எல்லாம் பெற்றாக வேண்டும். அதைச் சரியான முறையில், சக்தி வாய்ந்த விதத்தில் பயன்படுத்துங்கள். அதில் அடங்கியிருக்கிறது சகலமும்.

**போனால் வராது...**

உங்கள் நேரத்தைச் செலவிடுவதில் எச்சரிக்கையாயிருங்கள். நீங்கள் எப்படிச் செலவழிக்கிறீர்கள் என்பதைப் பொறுத்தே அமையும் எதிர்காலம். ஒவ்வொரு நாளும் உதயமாகின்றது புதிய வாய்ப்புகளுடன். உங்கள் உயர்வும், தாழ்வும் அந்தப் பொன்னான கணங்களை நீங்கள் பயன்படுத்தும் முறையைச் சார்ந்திருக்கிறது. ஒரு நாளில் மூன்றில் ஒரு பகுதியை உறக்கத்துக்கும், ஓய்வுக்கும் செலவிட வேண்டும். அதில் கருமித்தனம் காட்டினால் அவதிப்படும்படி ஆகிவிடும். மற்றொரு எட்டுமணி நேரம் உழைப்பில் கழிகிறது. இந்த உழைப்பு இருக்கிறதே இது ஒரு பண்டமாற்று வாழ்வின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் பரிவர்த்தனை. மீதமுள்ள எட்டு மணிநேரமும் தடையற்றது. சுதந்திரமாகச் செலவிடக்கூடியது. இந்த நேரத்தை வீணடிப்பதும், விவேகத்துடன் செலவிடுவதும் உங்கள் கையில்தான் உள்ளது. உணவு நேரத்தில் உடலுக்குத் தேவையான ஊட்டச் சத்துகளைப் பெறுவதும், உடற்பயிற்சி நேரத்தில் தசை நார்களை வலுப் பெறச் செய்வதும்கூட நேரப் பயனீடுதான். உடலைப்போலவே மனதுக்கும் ஊட்டச் சத்துத் தேவைப்படும். மனம் சார்ந்த பயிற்சிக்கும், வளர்ச்சிக்கும் நேரம் ஒதுக்குவதன்மூலம் நாம் ஊன்றுகின்ற முயற்சியெனும் விதை முளைத்துச் செடியாகி, மரமாகிப் பல வெற்றிக்கனிகளை வழங்கும். நேரத்தை இழந்தால் மீண்டும் பெற முடியாது. நீங்கள் வாழ்க்கையை நேசிப்பவராக இருந்தால் நேரத்தைக் கண்டபடி செலவழித்து விடாதீர்கள்.

**முக்கியமற்றதில் முதலீடு செய்யாதீர்கள்**

எது இல்லாவிட்டால் இயலாதோ, எது அடிப்படையானதோ அதுவே முக்கியமானதும் ஆகும். வெற்றிகரமானவர்கள் அதை உணர்ந்திருக்கிறார்கள். நேரத்தின் அருமையைப் புரிந்தவர்கள் அவர்கள். அவர்களால் தொலைக்காட்சித் தொடர்களே கதியென்று கிடக்க முடியாது. சூதாட்டத்திலும் இரவு விடுதிகளிலும் அவர்களால் நேரத்தைக் கழிக்க முடியாது. வம்பளப்புகளில் அவர்களுக்கு ஈடுபாடு கிடையாது. அவர்கள் ஒவ்வொரு நிமிடத்தையும் ஆக்கபூர்வமாகச் செலவிடுகிறார்கள். ஒவ்வொரு நிமிடத்துக்கும் திட்டம் வைத்திருக்கிறார்கள். ஓய்வு நேரம் குறைந்த அளவில் இருந்தால் நல்ல புத்தகங்களைப் படிக்கிறார்கள். நிறைந்த அளவில் ஓய்வு கிடைத்தால் பயணம் செய்கிறார்கள். தங்கள் திறமைக்கேற்ற வேலைகளை மட்டுமே செய்கிறவர்கள் நிறுவனத்தில் உயர்ந்த பதவி வகிக்கிறார்கள். தங்களுடைய திறமைக்குக் குறைந்த வேலைகளை




அடுத்த நிலையில் இருக்கும் அதிகாரிகளிடம், ஊழியர்களிடம் தள்ளி விடுகிறார்கள். ஒவ்வொரு நாளும் காலைப் பொழுது தொடங்கும்போதே உங்களுடைய அன்றைய வேலைகளைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள். எது பயனளிப்பது? எது முக்கியமானது என்பதைத் தீர்மானியுங்கள். பயனற்றதற்கும், முக்கியத்துவமற்றதற்கும் நேரப் பங்கீடு செய்யாதீர்கள். ஒவ்வொரு நாளிலும் இருக்கிறது ஒரு புதிய செயல்முறை. அது உங்களை முன்பிருந்ததைக் காட்டிலும் மேம்படுத்தும். உங்கள் வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

**இப்போதே செய்யுங்கள்**

காலம் தவறாமை பிரபஞ்சநியதி. கிரகங்கள் தங்கள் சுழற்சிக்கான நேரத்தில் இம்மியும் பிசகுவதில்லை. அதே மாதிரித்தான் தொழில் உலகிலும். கொஞ்சம் காலம் தாழ்த்தினால் ஒன்றும் மேற்செல்லாது. உற்பத்தி, விற்பனை, ஆதாயம், வளர்ச்சி, நற்பெயர் என்று எல்லாமே பாதிக்கப்பட்டுவிடும்.

வணிகம் செய்பவரின் ஒவ்வொரு நிமிடத்தையும் ஏதேனும் ஒரு வேலை சுவாதீனப்படுத்திக்கொண்டிருக்கும். தம்முடைய ஒரு மணிநேர வேலையை அவர் தள்ளிப்போட்டால், அவருடைய இன்னொரு வேலை செயலற்றதாகும் அல்லது அன்றைய அனைத் வேலைகளும் குழறுபடியாகிவிடும்.

இன்றே இப்பொதே என்பதை ஒரு கொள்கையாய் வைத்துக் கொண்டு செயற்படுங்கள். காலம் தவறாமை நேரம் சம்பந்தப்பட்டது மட்டுமல்ல மரியாதை சம்பந்தப்பட்டதுமாகும்.

தாமதாமாக வேலைக்குச் செல்கின்றவரை நிர்வாக மேலிடம் விரும்பாது. தாமதமாக விருந்துக்கு வருகிறவரை விருந்தளிப்பவர் முழுமனதோடு வரவேற்கார். 'நான் மிகவும் பெரிய ஆள், முப்பது நிமிடம் தாமதமாகப் போனால் தான் மதிப்பு.

அடுத்தவரைக் காக்க வைப்பதன்மூலம் தான் ஒரு பிரமையை ஏற்படுத்த முடியும்' என்று நீங்கள் நினைத்தால் அதன் விளைவு எதிர்மறையாகவே இருக்கும். உங்களை நீங்களே ஏமாற்றிக் கொண்டவராவீர்கள். மெத்தனமாய் இருப்பது என்பது விதியை அல்லது ஒழுங்கை மதியாதிருப்பதாகும்.

சந்திப்புத் திட்டத்தை அலட்சியப்படுத்தினால் நீங்கள் அடுத்தவருடைய திட்டத்தைத் திருடியவராவீர்கள். சந்திப்புத் திட்டம் ஓர் ஒப்பந்தம் மாதிரி. நீங்கள் அதைக் கடைப்பிடிக்காவிடில் நேர்மையற்ற விதத்தில் மற்றவருடைய நேரத்தை அபகரித்தவராவீர்கள். குறித்த நேரத்தில் வாடிக்கையாளரைச் சந்திக்காத விற்பனைப் பிரதிநிதி தம்முடைய வாய்ப்பை இழந்துவிடுகிறார். வேலைக்கான நேர்காணலுக்குத் தாமதமாகச் செல்கின்றவர் எப்படி அந்த வேலையைப் பெறமுடியும்? அறிவதிலும், பெறுவதிலும், செயல்புரிவதிலும் மூன்று அம்சங்கள் முக்கியத்துவம் பெறும். அவை என்ன? எப்படி? எப்பொது? முதலிரண்டினைப்போலவே மூன்றாவதும் முக்கியம்.

சரியான செயலே ஆனாலும் தவறான நேரத்தில் தொடங்கப்பட்டால் அது வெற்றி தராது. போர்க்களத்தில் வீரர்கள் சுடுலதற்குக் கண நேரம் தாமதித்தாலும் சுட்டு வீழ்த்தப்படுகிறார்கள்.

அந்தக் கணம் தீர்மானிக்கிறது வாழ்வையும், சாவையும். சொல்லுங்கள், ஒரு நாள் தாமதமாய்ப் போய்ச்சேர்கிற பிறந்தநாள் வாழ்த்து எவருக்கு மகிழ்ச்சியளிக்கப்போகின்றது? நேரம் ஓடிக்கொண்டேயிருக்கிறது. நீங்களும் அதனுடன்போட்டியிட்டுஓடுங்கள். கொஞ்சம்சுணங்கினாலும் தோற்றுப் போவீர்கள்.

**உங்கள் நேரத்தைச் செலவிடுவதில் எச்சரிக்கையாயிருங்கள். நீங்கள் எப்படிச் செலவழிக்கிறீர்கள் என்பதைப் பொறுத்தே அமையும் எதிர்காலம். ஒவ்வொரு நாளும் உதயமாகின்றது புதிய வாய்ப்புகளுடன். உங்கள் உயர்வும், தாழ்வும் அந்தப் பொன்னான கணங்களை நீங்கள் பயன்படுத்தும் முறையைச் சார்ந்திருக்கிறது.**

சிறுகதை

இராஜினிதேவி சிவலிங்கம்

# விதி வரைந்த பாதையிலே..!



வீட்டின் முன்புறம் அமைக்கப்பட்டிருந்த பெரிய பந்தலில் அலங்கரிப்பு வேலைகள் மும்முரமாக நடந்துகொண்டிருந்தன. மணவறையை அழகுபடுத்துவதில் அருணும் அவன் நண்பர்களும் ஈடுபட்டிருந்த நேரத்தில் அப்பாவின் குரல் கேட்டது."அருண் வாசலிலே வாழைக்குலை கட்டுறாங்கள் அதை ஒருக்காப் பார் அப்பன்…" "சரி…அப்பா நான் போய்ப் பாக்கிறன்" சொல்லியவன் முன்புறம் விரைந்தான்.

அக்கா சாருலதாவின் திருமணத்துக்கு நாள் குறித்த நாள்தொடக்கம் அருண்தான் ஓடிஓடி எல்லாக் காரியங்களையும் செய்கின்றான். அவனுக்கு உதவியாக நண்பர்களான திலீபனும், மகிந்தனும், சுதனும் இருந்தது பெரும் ஆறுதலாக இருந்தது.

அப்பா சரவணமுத்து கால் நடக்க முடியாதவர். அவரால் ஓடியாடி ஒரு காரியத்தையும் செய்யமுடியாது. சாருலதாவும் அருணும் அவரது இரண்டு கண்கள். சாருலதா தெற்கிலுள்ள தேசிய கல்வியியல் கல்லூரியில் விரிவுரையாளராக கடமையாற்றுகின்றாள்.


பல்கலைக்கழக விரிவுரையாளனாகப் பணியாற்றும் சரவணனுடன் கொண்ட நட்பு, காதலாக மலர்ந்து இப்போது இரு வீட்டாரின் சம்மதத்துடன் திருமணம் நடைபெறப் போகின்றது.

சாருலதா அன்பும், அழகும், அறிவும் நிறைந்தவள். பெற்றோர்களின் மீதும் தம்பி அருண் மீதும் அளவு கடந்த பாசம் நிறைந்தவள். ஒவ்வொரு கிழமையும் பெற்றோர்களைப் பார்ப்பதற்கு வந்துவிடுவாள்.

அருண் ஊரிலுள்ள இந்துக் கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியராகக் கடமையாற்றுகின்றான். அவன் வெளிமாவட்டத்தில் கடமையாற்றி ஏழு வருடங்களின் பின் ஊரோடு வந்தது பெற்றோருக்குப் பெரும் உதவியாக இருந்தது.

கைதடியில் உள்ள திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெறுவதாக இருந்தாலும் அதற்கான ஒழுங்கமைப்புக்கள் வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்குவது எல்லாமே அருண்தான் செய்ய வேண்டியிருந்தது.

அப்பா சுறுசுறுப்பாக இயங்கிய காலத்தில் அருண் செல்லப்பிள்ளை, அவன் படிப்பென்றும் வேலையென்றும் திரிந்ததால் வீட்டுப் பொறுப்பு எதுவுமே தெரியாமல் வளர்ந்துவிட்டான்.



அன்றொருநாள் வயலைப் பார்க்கச் சென்ற சரவணமுத்து வயலுக்குப் பக்கத்திலே பண்படுத்தப்படாமல் பற்றையாக இருந்த நிலத்துக்கு அருகில் சென்றுவிட்டார். அங்கே புதைக்கப்பட்டிருந்த கன்னிவெடியில் கால் வைத்துவிட்டார். வெடிச்சத்தமும் அவரது அலறல் சத்தமும் கேட்டு ஓடிவந்தவர்கள் அவரை மருத்துவமனைக்கு எடுத்து சென்றனர்.

சாவகச்சேரி மருத்துவமனையிலிருந்து அம்புலன்ஸ் மூலம் யாழ் போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்ட செய்தியை அறிந்து அவரது குடும்பத்தவர்கள் மருத்துவமனைக்கு விரைந்தனர்.

அவசர பிரிவில் அனுமதிக்கப்பட்ட அவருக்கு உடனடியாகவே சத்திரசிகிச்சை செய்யப்பட்டுக் கால் முழங்காலுக்குக் கீழே அகற்றப்பட்டது. அந்தக் காலம் தொடக்கம் அவருக்கு சக்கர நாற்காலியே தஞ்சமாகி விட்டது.

இதுவரை குடும்பத்தைக் கண்ணுங் கருத்துமாகப் பார்த்து வந்த சரவணமுத்து முடங்கிப்போனது குடும்பத்துக்குப் பேரிடியாகிப் போனது. அப்போது அருணும் வன்னியிலே தொழில் பார்த்ததால் ஒவ்வொரு வெள்ளியும் வீட்டுக்கு வந்து திங்கள் அதிகாலையில் செல்ல வேண்டியிருந்தது. ஏழு வருடங்கள் வெளிமாவட்டத்தில் சேவையாற்றியதால் இடமாற்றம் கிடைத்து சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் கடமையாற்றுகின்றான்.

சாருலதாவின் திருமணத்துக்குச் செய்ய வேண்டிய ஏற்பாடுகள் எல்லாவற்றையும் அவன் ஊரோடு வந்ததினால் செய்வது இலகுவாயிற்று.

நாளை விடிந்தால் திருமணவீடு உறவினர்களால் நிறைந்திருந்தது. சரவணமுத்துவின் சகோதரர்களும் பிள்ளைகளும் மங்களத்தின் சகோதரர்களும் வந்திருப்பதால் வீடு கலகலப்பாக இருந்தது. சாருலதாவின் நண்பிகளும் முதல்நாளே வந்துவிட்டனர்.

மாப்பிள்ளை சரவணனின் வீடு சங்கத்தானையில் இருந்தமையால் இரண்டு வீட்டுக்காரரும் கைதடியிலுள்ள திருமண மண்டபத்தை ஒழுங்கு செய்திருந்தனர்.

சரவணன் வீட்டில் ஒரே மகன். ஆதலால் அவன்தான் எல்லா வேலைகளையும் செய்ய வேண்டியிருந்தது. இயல்பாகவே எல்லோருடனும் சகஜமாகப் பழகுகின்ற குணம் அவனிடம் இல்லாததால் அவனுக்கு ஊரிலே நண்பர்களும் குறைவாகவே இருந்தனர்.

சரவணனின் தந்தை சோமசுந்தரத்தின் சகோதரியின் மகன் திவாகரன்தான் சரவணனுக்கு உதவியாக இருந்தான். விடிந்தால் திருமணமண்டபத்தின் ஒழுங்கமைப்பைப் பார்த்து வர அவன் புறப்பட்டபோது சரவணனும் "திவாகர்… நானும் உன்னோட வாறன் இரண்டு பேரும் மோட்டார் சைக்கிளில போட்டு வருவம்…"

"வேண்டாம் சரவணா நீ வரவேண்டாம். நாளைக்கு காலமை ஒன்பது மணிக்கு நாள் நீ வீட்டிலதான் நிக்க வேணும் நான் வேற யாரையும் கூட்டிக்கொண்டு போறன்…" திவாகரன் கூறியதைக் கேட்டுக்கொண்டு வந்த அம்மா பூரணமும் "தம்பி..இந்த இரவு நேரத்தில நீ போகவேண்டாம் மாப்பிள்ளை இந்த நேரத்தில போகக்கூடாது நீ போக வேண்டாம்"

"அம்மா…நானும் திவாகரும் மண்டபத்தை ஒருக்காப் பார்த்திட்டு வாறம். உடனே வந்திடலாம் றோட்டில் வாகன ஓட்டங்களும் குறைவு. நாங்கள் கவனமாப் போட்டு வாறம்" சரவணன் பிடிவாதமாகத் திவாகரனுடன் புறப்பட்டுவிட்டான்.

மண்டபத்தின் ஒழுங்கமைப்பில் அவனது நெருங்கிய உறவினர்களான பாபு, செல்வம், சுமன், பார்த்தீபன் ஆகியோர் ஈடுபட்டிருந்தனர். இவர்களைக் கண்டதும் "சரவணா நீ ஏன் வந்தனி எங்களிற்ர ஒப்படைச்ச வேலையளை நாங்கள் செய்வோம் தானே. திவாகர் நீ ஏன் சரவணனை கூட்டிக்கொண்டு வந்தனி"

"நான் வரவேண்டாம் எண்டு சொல்லக் கேட்காமல் வந்திட்டார். நான் என்ன செய்யிறது?"

"சரவணா நீங்கள் வீட்டை போங்.ோக நாங்கள் எல்லா வேலையளையும் பாப்பம். இரண்டு பேரும் கவனமாப் போங்கோ" பாபு கூறியதைக் கேட்டதும் இருவரும் வீட்டுக்குப் புறப்பட்டனர்.

சரவணன் மோட்டார் சைக்கிளைச் செலுத்தப் பின்னால் ஏறி அமர்ந்த திவாகர் "சரவண்ணா கவனமாய் ஓடு இரவு நேரம் கண்ணை மூடிக்கொண்டு ஸ்பீட்டா வருவாங்கள்"

"திவாகர் நான் நிதானமாகத்தான் ஓடுறனான்" சிரித்த வண்ணம் கூறினான் சரவணன்.

நிதானமாக மோட்டார் சைக்கிளை ஓட்டிய சரவணனுக்குப் பின்னால் அமர்ந்திருந்த திவாகர் "சரவணா நீங்கள் இரண்டு பேரும் வேறவேற இடத்திலை வேலை செய்யிறீங்கள் ஒரே இடத்தில இருக்கக் கூடியதாய் ஏதாவது ஒழுங்கு செய்"


"நான் எப்பிடியும் தை மாதத்தோட யாழ்ப்பாணம் வந்திடுவன். சாருவையும் இங்கால எப்பிடியும் எடுக்கிறதுக்குத்தான் முயற்சி செய்யிறன்" கூறிய சரவணன் பிரதான வீதியிலிருந்து தாங்கள் செல்ல வேண்டிய குறுக்கு வீதியில் திருப்பினான்.

திடீரெனக் குறுக்கு வீதியிலிருந்து முதன்மை வீதிக்கு வேகமாக வந்த சைக்கிள் சரவணனது சைக்கிளுக்கு நேராக வந்தது. நிதானத்துடன் சரவணன் மோட்டார் சைக்கிளை வீதியின் மறுபுறத்துக்கு வெட்டித் திருப்பினான். வேகமாக வந்த சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து பக்கத்திலிருந்த மரத்துடன் மோதியது.

திடீரென குறுக்கு வீதியிலிருந்து முதன்மை வீதிக்கு வேகமாக வந்த சைக்கிள் சரவணனது சைக்கிளுக்கு நேராக வந்தது. நிதானத்துடன் சரவணன் தன் மோட்டார் சைக்கிளை வீதியின் மறுபுறத்துக்கு வெட்டித் திருப்பினான். வேகமாக வந்த சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து பக்கத்திலிருந்த மரத்துடன் மோதியது. பிரமையில் வெலவெலத்துப்போன சரவணன் மரத்துடன் மோதிய சைக்கிளை நோக்கி ஓடினான். அவன் பின்னால் ஓடிவந்த திவாகர் "சரவணா கிட்டப்போகாதே எங்களில் பிழையில்லை அவன் வேகமாக வந்து மோதியிருக்கின்றான். இங்க நிண்டால் பிழை நாளைக்கு உன்ரை கலியாணம் பொலிஸ் அது இதெண்டு போனா பெரிய பிரச்சினையாப் போயிடும் வா…"

கொஞ்ச நாள்களாக அவனின் வலது காலுக்கு ஏதேதோ சோதனைகள் வந்துகொண்டுதானிருக்கின்றன. அன்றாடம் கூலி வேலை செய்து வயிற்றைக் கழுவும் செல்வராசாவுக்கு இது மிகவும் துன்பகர மான ஒன்றாகவேயிருந்தது. அன்றும் ஒருநாள் நமசிவாயம் ஓவசியருக்குக் கிணறு வெட்டப் போயிருந்தான். கிணறு வெட்டப் பூதம் வந்ததென்று ஒரு கதை உண்டு. ஆனால் இவனுக்குக் கிணறுவெட்ட வலதுகாலில் சேதம் வந்தது.

# அட்டமத்துச் சனி



சிரிப்பு

மிருசுவில் தமிழ்தாசன்

செல்வராசா நடந்து செல்வதைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. வலது காலைத் தூக்கி வைத்து நடப்பதற்கு மிகுந்த சிரமப்பட்டான். கொஞ்ச நாள்களாக அவனின் வலது காலுக்கு ஏதேதோ சோதனைகள் வந்துகொண்டுதானிருக்கின்றன. அன்றாடம் கூலிவேலை செய்து வயிற்றைக் கழுவும் செல்வராசாவுக்கு இது மிகவும் துன்பகர மான ஒன்றாகவேயிருந்தது.

அன்று ஒருநாள் நமசிவாயம் ஓவசியருக்குக் கிணறு வெட்டப் போயிருந்தான். கிணறு வெட்டப் பூதம் வந்ததென்று ஒரு கதை உண்டு. ஆனால் இவனுக்குக் கிணறுவெட்ட வலதுகாலில் சேதம் வந்தது. கிணற்றில் கல் இடிந்து வீழ்ந்து வலது காலை மிகவும் பாதித்துவிட்டது. மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுச் சற்றுக் குணமாகிச் சில நாள்களின் பின்பு கட்டடவேலைக்குப்போக, அங்கே உயரமான மரச் சாரத்திலிருந்து தவறிக் கீழே வீழ்ந்து வலது காலை முறித்துக் கொண்டான்.

மீண்டும் மருத்துவமனை வாசம். எப்படியோ குணமாகிவிட வழமைபோல் கூலி வேலைக்குச் சென்றவனுக்குப் பொன்னம்பலம் வாத்தியார் வீட்டில் துப்புரவுப் பணிசெய்து கொண்டிருக்கும்போது வலதுகாலில் தேளோ, பூச்சியோ என்ன இழவோ கடித்துவிட்டது. அவனால் வலி தாங்க முடியவில்லை. எனினும் இந்தத் தடவை மருத்துவமனைக்குப் போவதாக உத்தேசமிருக்கவில்லை. நேராக நாட்டு வைத்தியர் நடராசா வீட்டுக்குச் சென்றான்.

★ ★ ★

"பூச்சி பூரான் ஏதேன் கடிச்சிருந்தால் நடராசாப் பரியாரிற்றை மூண்டு நேரப் "பார்வை' யோடை எல்லாம் மாறிப்போம். மனிசன் வேப்பம் குழை அடிச்சே மாத்திப் போடுவார்" செல்வராசனுக்கு இப்படியொரு நம்பிக்கை. வைத்தியரின் மனைவி மணி அக்கா குசினி வாசற்படியிலிருந்து அரிசி புடைத்துக் கொண்டிருந்தாள்.

"மணி அக்கா நாய் கடிக்குமே?"

"அது கடியாது மோனை நீ பயப்படாமல் வா" மணி அக்கா சொல்லி வாய் மூட முன்பு வீட்டுச் செத்தைக்குள் சுருண்டு படுத்திருந்த சுருட்டை வாலன் நாய் பாய்தோடிவந்து ஏற்கனவே காயப்பட்டிருந்த செல்வராசனின் அதே வலது காலில் கடித்துவிட குருதி பீறிட்டுப்பாய்ந்தது. அவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவனுடைய வலது காலுக்கும் அவனுக்கும் பொருத்தமில்லாது இருப்பதற்குரிய காரணத்தை அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை.

"எடே செல்வராசா உனக்கு இப்ப அட்டமத்திலை சனிப் பார்வை. நீ என்ன செய்தாலும் உனக்குப் பிரச்சினைதான். ஒண்டும் செய்யாமல் சும்மாவிருந்தாலும் ஏதோ பிரச்சினைகள் வந்தே தீரும். நல்லாய்க் கடவுளைக் கும்பிடு"

சாஸ்திரி சண்முகம் உறுதிகாகக் கூறினார். செல்வராசன் இயல்பாகவே மிகுந்த கடவுள் பக்தி கொண்டவன். இருந்தும் இப்படியாகச் சோதனைகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றதே. அப்படியானால் சாஸ்திரி கூறியது போல் அட்டமத்துச் சனியனின் ஆதிக்கம் தான்போலும்.

★ ★ ★

தொடர்ந்து உழைப்புப் பிழைப்பில்லா மலிருந்தால் அடுப்புக்குள் பூனை உறங்கப் போகும் அபாய நிலையிருப்பதை அவன் உணராமலில்லை. எனவேதான் நண்பன் கணேசனிடம் போய் சில நாள்களையாவது எப்படியோ ஓட்டிவிடலாம் எனத் திட்டங்கள் தீட்டினான். இத்தனை காலமும் ஊரிலே வாழ்ந்து வந்த கணேசன் அண்மையில் தான் தன்னுடைய மனைவியின் ஊரில் வசிக்கத் தொடங்கியிருந்தான். அரச அலுவலகமொன்றில் சிற்றூழி யர்வேலை. செல்வராசனைவிட வசதியாக வாழ்பவன். அதுமட்டுமல்ல செல்வராசன் மீது அளவற்ற நம்பிக்கையும் அக்கறையும் கொண்டவன். எப்போதும் வேளையறிந்து உதவி செய்வான். அவனைச் சென்றடைவதற்கு ஆறு கிலோ மீற்றர் தூரம் பஸ்சில் பயணிக்கவேண்டும். எங்கேயாவது பயணத்துக்கென்று புறப்பட்டுவிட்டால் வழமையாக அரைமணித்தியாலமாவது பஸ்சுக்குக் காத்திருக்கவேண்டும். என்ன அதிசயம். இன்று மட்டும் செல்வராசன் பஸ்தரிப்புக்கு வந்த மறுகணம் சொல்லிவைத்ததுபோல் பஸ் வந்தது.

அவனும் மகிழச்சியுடன் ஏறிக்கொள்ள இனியென்ன சுகமான பயணம் தான். சகுனங்களெல்லாம் சாதகமாக அமைந்து கொண்டதில் செல்வராசனுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. இனி எந்தப் பொல்லாப்புக்களுமின்றி நண்பனிடம் கடன் வாங்கி வந்து... கற்பனைகளை வளர்த்துக்கொண்டான்.

★ ★ ★

பஸ்சிலிருந்து இறங்கியாயிற்று. சரியாக அரைக்கிலோ மீற்றர் நடக்கவேண்டும். நடக்கத்தொடங்கினான். கிருஷ்ண பரமாத்மாவைச் சந்திக்கச்சென்ற குசேலர், கையில் ஒரு சிறிய அவல் பொதியாவது கொண்டு சென்றார். இவன் பாவம். ஒரு ஐம்பது ரூபா பிஸ்கெட் பக்கெட்டைக் கூட நண்பனின் வீட்டுக்கு வாங்கிச் செல்லமுடியாதவனாக நடந்து கொண்டிருந்தான். வழியில் அழகானதொரு பிள்ளையார் ஆலயம். கோயிலின் முகப்பில் மாட்டப்பட்டிருந்த சுவர்க் கடிகாரத்தில் மாலை நாலரை மணியென்று காட்டியது.

"எடக் கடவுளே! நேரமும் வெள்ளனவாய்க் கிடக்குது. அஞ்சு மணிக்குத்தானே கணேசன் வருவான். அப்ப அஞ்சு மணிவரைக்கும் உந்தக் கோயிலுக்கை போய்க் கும்பிட்டிட்டு ஆறுதலாய்ப் போவம். உந்த அட்டமத்துச் சனியனும் கொஞ்சம் குறையுமாம் எல்லே."

பிள்ளையார் கோயிலின் பெரிய இரும்புக் கதவுகளில் ஒன்று சாத்தப்பட்டிருக்க மற்றையது திறபட்ட நிலையிலிருந்தது. ஐந்து மணிக்கு மாலைப்பூசை ஆரம்பமாகும்வேளையில் தான் இரண்டு கதவுகளும் திறக்கப்படுமோ என்னவே. உள்ளே சென்று பிள்ளையாரின் சன்னிதானத்தில் நின்று தலையில் குட்டி மூன்று தோப்புக்கரணங்கள் போட்டுப் பயபக்தியாகக் கும்பிட்டான். கோயிலில் எவருமேயில்லை. மடைப்பள்ளியில் மட்டும் ஏதோ சத்தம் கேட்டது.

"பின்னேரப் பூசைக்கு ஐயர் பிரசாதம் செய்கிறார்போலை. கொஞ்சம் மினைக்கெட்டு நிண்டனெண்டால் பிரசாதமும் வாங்கிச் சாப்பிட்டுப் பசியாறிக்கொண்டு போகலாம். எதுக்கும் உள்வீதிக்குப்போய் மற்றச் சாமியளையும் கும்பிட்டிட்டு வருவம்."

நினைத்தபடி உட்பிரகாரம் சுற்றி மீண்டும் பிள்ளையார் சன்னிதானம் வந்தபோது செல்வராசனுக்கு மாபெரும் அதிர்ச்சி காத்திருந்தது. வாசல் கதவுகள் இரண்டும் வெளிப்புறமாகப் பூட்டப்பட்டிருந்தன. ஏற்கனவே மாலைப் பூசையை முடித்துவிட்ட ஐயர், செல்வராசன் வந்ததையே கவனித்திருக்காத நிலையில் இவ்வாறு ஓர் இக்கட்டான நிலையை உருவாக்கிவிட்டார். ஆரம்பமாகியது அடுத்த சனியன் என்று நினைத்துக் கொண்டான் செல்வராஜன்.

★ ★ ★

கையில் கைபேசியுமில்லை. இருந்தால் கணேசனுக்குக்காவது அறிவித்து ஏதாவது நடவடிக்கை எடுத்து அந்தச் சிக்கலிருந்து மீண்டுகொள்ளலாம். இனி மறுநாள் காலைப்பூசைக்குத்தான் ஐயர் வருவார். அதுவரைக்கும் கோயிலுக்குள்ளே அடைபட்டுக்கிடக்க வேண்டியதுதான். அட்டமத்துச் சனியின் பார்வையில் இதுவும் ஒன்றோ, என்னவோ?

இரவு முழுவதும் தூக்கமின்றிக் குழம்பிய நிலையிலிருந்த செல்வராசன் அதிகாலையில் மிகவும் சோர்வடைந்த நிலையில் தன்னை மறந்து உறங்கிக்கொண்டிருந்தான். பொழுது புலர்ந்துவிட்டதுகூடப் புரியவில்லை.

"டேய் எழும்படா கள்ளா இண்டைக்குத் தான் வளமாய் அம்பிட்டிருக்கிறாய். இவ்வளவு காலமும் உவடத்துக் கோயிலுகளுக்கை எல்லாம் களவெடுத்தது நீ தானே!" தூக்கக் கலக்கத்தில் ஒன்றுமே புரியாது பேந்தப் பேந்த விழித்துக்கொண்டிருந்த செல்வராசனின் வலதுகாலில் ரீப்பைத் தடியால் ஓங்கி ஒன்றுபோட்டார் ஐயர். விடயமறிந்து ஊரவர்கள் கூடிவிட செல்வராசனின் உடலில் மத்தள ஒலி கேட்கத் தொடங்கியது.

"கடவுளே அட்டமத்துச் சனியனே! இன்னும் நீ என்னைவிட்டுப் போகயில்லையோ. ஒரு சோலிக்கும் போகாமல் சும்மா இருந்தாலும் பிரச்சினையள் தேடிவருமெண்டு சண்முகம் சாத்திரியார் சொன்னது சரிதானே. உந்தக் கோதாரிவிழுந்த அட்டமத்துச்சனியாலை நான் படுறபாடு போதும் என்ரை பிள்ளையாரே" இயலாத நிலையிலும் தோப்புக்கரணங்கள் போட்டுக்கொண்டான் செல்வராசன் எனும் துர்அதிர்ஷ்டசாலி.


டேய் எழும்படா கள்ளா இண்டைக்குத் தான் வளமாய் அம்பிட்டிருக்கிறாய். இவ்வளவு காலமும் உவடத்துக் கோயிலுகளுக்கை எல்லாம் களவெடுத்தது நீ தானே!" தூக்கக் கலக்கத்தில் ஒன்றுமே புரியாது பேந்தப் பேந்த விழித்துக்கொண்டிருந்த செல்வராசனின் வலதுகாலில் ரீப்பைத் தடியால் ஓங்கி ஒன்றுபோட்டார் ஐயர். விடயமறிந்து இன்னும் ஊரவர்கள் கூடிவிட செல்வராசனின் உடலில் மத்தள ஒலி கேட்கத் தொடங்கியது.


## வயலின்



வயலின் என்ற இசைக்கருவி, வில் கொண்டு வாசிக்கப்படும் மரத்தினாலான தந்திக் கருவியாகும்.
இது பழங்காலத்தில் பிடில் என்றும் வழங்கப்பட்டது. இது மேலைத்தேயம், கீழைத்தேயம் என இரண்டு பிராந்திய இசை வகைகளையும் வாசிக்கக்கூடிய ஒரே ஒரு வாத்தியக்கருவி ஆகும்.
இது முதன்மை வாத்தியமாகவும் பக்கவாத்தியமாகவும் வாசிக்கப்படுகின்றது. இது நான்கு தந்திகளைக் கொண்டுள்ளது. இந்தத் தந்திகளின் மேல் வில் ஒன்றைக் குறுக்காக செலுத்துவதன் மூலம் வயலின் வாசிக்கப்படுகின்றது.
எனினும், ஒரு சில வேளைகளில் விரல்களினால் அழுத்தப்பட்டும் இவை வாசிக்கப்படுகின்றன.
இவை சங்கீதத்தில் மிக முக்கியமானவை ஆகும். அத்துடன், பல வகையான இராகங்களை வயலின் மூலம் வாசிக்கலாம்.

## வழிகாட்டுவோம்





## அம்மா சொல் கேட்போம்!

செழிப்பான ஒரு புல்வெளியில் ஆடுகள் மேய்ந்துகொண்டிருந்தன. அவற்றை மேய்த்துக்கொண்டு வந்தவன், மரத்தடியில் உட்கார்ந்து கண் மூடி, புல்லாங்குழல் வாசித்துக்கொண்டிருந்தான்.
புல்வெளியைச் சுற்றி வேலி போடப்பட்டிருந்தது. அதன் அருகே, ஓர் ஆட்டுக்குட்டி மேய்ந்து கொண்டிருந்தது. வேலிக்கு வெளிப்பக்கம் இருந்த ஓநாய் ஒன்று ஆட்டுக் குட்டியைப் பார்த்தது.
வேலிக்குள் முகத்தை நுழைத்துக்கொண்டு, ஓநாய் எதையோ பார்ப்பது போல பாசாங்கு செய்தது. அதைப் பார்த்த ஆட்டுக்குட்டி, "உனக்கு என்னவேண்டும்?" என்று கேட்டது.
ஓநாயும் "நண்பா, நண்பா...இங்கே இளசான புல் கிடைக்குமா என்று பார்க்கிறேன்! இளம்புல் என்றால் எனக்கு ரொம்பப் பிரியம். அதைத் தின்று, ஜில்லென்று தண்ணீர் குடித்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! உங்களுக்கெல்லாம் அந்த யோகம் கிடைத்திருக்கிறது! எனக்கு அது கிடைக்கவில்லை....." என்று வருத்தத்துடன் கூறியது.
"அப்படியா! நீ புல்லா சாப்பிடுவாய்? நீ மாமிசத்தைத்தான் சாப்பிடுவாய் என்று என் அம்மாவும் அப்பாவும் சொன்னார்களே?" என்று ஆச்சரியத்துடன் கேட்டது ஆட்டுக் குட்டி.
"சேச்சே...அதெல்லாம் சுத்தப் பொய்!" என்றது ஓநாய்.
"அப்படியென்றால் இரு. நான் வெளியே வந்து, மலையின் அந்தப் பக்கம் இளம்புல் இருக்குமிடத்தைக் காட்டுகிறேன். நாம் இரண்டு பேரும் போய் மேயலாம்!" என்று சொல்லிவிட்டு ஆட்டுக்குட்டி வேலி இடுக்கின் வழியாக நுழைந்து, ஓநாயின் பக்கம் போயிற்று.
உடனே ஓநாய் அதன்மீது பாய்ந்து அதைக் கொன்று தின்றது.
ஆட்டுக்குட்டி அனுபவம் நிறைந்த அம்மா, அப்பா பேச்சை கேட்டிருந்தால், மதிப்பு வாய்ந்த, தன் உயிரை இழந்திருக்காது.



## சகாரா பாலைவனம்

உலகிலேயே மிகப் பெரிய பாலைவனம் சகாரா. இது ஆபிரிக்க கண்டத்தின் வட பகுதியில் உள்ளது. இதன் பரப்பு ஆபிரிக்காகக் கண்டத்தின் பரப்பில் நான்கில் ஒரு பகுதிக்கு அதிகமாகும். சகாரா முழுவதுமே மணற் பரப்பாக இல்லை. இங்கு மிக உயர்ந்த மலைகளும் பாறைகள் நிறைந்த பீட பூமிகளும் உள்ளன. பெரும்பாலான இடங்களில் புல்லும் புதர்களும் வளர்ந்திருக்கின்றன.
பகலில் இங்கு வெப்பம் அதிகம். 70 பாகை வரை வெப்பநிலை உயரும். இரவில் மிகக் குளிராக இருக்கும். பனி உறையும் நிலைக்குக் கீழாக வெப்ப நிலை குறைந்து விடும். இவ்வாறு இங்கு அதிக வெப்பமும் அதிக குளிரும் மாறி மாறி நிலவுவதால் பாறைகள் வெடித்து சிதறி மணலாகி விடுகின்றன. காற்றினால் இந்த மணல் அடித்துச் செல்லப்பட்டு அலை அலையாகப் பல பகுதிகளில் படிந்து விடுகிறது.
இங்கு மழை மிகக் குறைவு. இரவில் பனி பெய்யும். பகலில் மணல் புயலடிக்கும். சில இடங்களில் நீர் ஊற்றுக்கள் வெளிப்பட்டுத் தண்ணீர் தேங்கி நிற்பதுண்டு. இந்த இடங்களில் பேரீச்சை மரங்களும், பிற செடி கொடி வகைகளும் வளர்ந்து பசுமையாக இருக்கும். இப்படிப்பட்ட இடத்தை பாலைவனச் சோலை என்று அழைப்பார்கள். இங்குள்ள மக்கள் மணல் வீடுகளைக் கட்டிக் கொண்டு வாழ்கிறார்கள். பேரீச்சம்பழம் இவர்களின் முக்கிய உணவு. இங்கு நாடோடிகளாக வாழ்வோரும் சிலர் உள்ளனர். இவர்கள் ஆடுகளை வளர்க்கிறார்கள். இங்குள்ளோர் பொருள்களைச் சுமந்து செல்ல ஒட்டகத்தையே பயன்படுத்துகிறார்கள். அதனால் ஒட்டகத்துக்கு 'பாலைவனத்துக் கப்பல்' என்று பெயர். தற்பொழுது சில இடங்களில் பேருந்து வண்டிகள் பயன்பாட்டில் வந்துள்ளன.

## எறும்பே...

இன்பம் உள்ள எறும்பே
எங்கள் கட்டிக் கரும்பே
துன்பம் ஒன்றும் புரியோம்
தின்பதற்கும் தருவோம்

உன்னைப்போல உழைப்போம்
ஊக்கம் கொண்டு பிழைப்போம்

காலை தன்னில் எழுவோம்
கடவுள் பாதம் தொழுவோம்
நூலைக் கற்போம் சீராய்
நுண்ணெ றும்பே வாராய்...



## காலி நகரம்



காலி இலங்கையின் தென் பகுதியிலுள்ள ஒரு நகரம். இலங்கையின் பெரிய நகரங்களுள் ஒன்று. இலங்கையின் எட்டு மாகாணங்களுள் ஒன்றான தென் மாகாணத்தின் தலைநகரமும் இதுவே. இலங்கையின் முக்கிய துறைமுகங்களில் ஒன்றான காலித் துறைமுகமும் இங்கே அமைந்துள்ளது. 2004 ல் ஏற்பட்ட சுனாமியினால் இந்த நகரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது.
இங்குள்ள வெளிச்சவீடு பழமை வாய்ந்தது. இது 1934 ஆம் ஆண்டில் தீயினால் அழிந்ததை அடுத்து 1939 ஆம் ஆண்டில் புதிதாகக் கட்டப்பட்டது. இதன் உயரம் 26.5 மீற்றர், வட்ட இரும்புக் கோபுரமாகவும், மேற்பக்கம் தட்டை உருவம் உடையதாகவும் உள்ளது. கோபுரம் முழுவதும் வெள்ளை நிறத்தாலும் அடிப்பகுதி சிவப்பு நிறத்தாலும் நிறம் தீட்டப்பட்டுள்ளது.
இதன் காலநிலை வெப்பமண்டல மழைக்காடுகளின் காலநிலையை ஒத்ததாக உள்ளது. இங்கு வறட்சி என தனிக் காலம் இல்லாவிடிலும் ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் சற்று வறட்சி தென்படும்.




## 'கொலவெறி' சாதனையை முறியடித்த 'ரவுடி பேபி'




யுவன்சங்கர்ராஜாஇசையமைப்பில் தனுஷ், சாய் பல்லவி நடிப்பில் கடந்தாண்டுஇறுதியில்வெளியான மாரி 2 திரைப்படத்தின் ரவுடி பேபி பாடல் 'யூடியூப்பில்' கொலவெறி பாடலின் சாதனைகளை முறியடித்துள்ளது.

தனுஷ் நடிப்பில் பாலாஜி மோகன் இயக்கத்தில் வெளியான திரைப்படம் மாரி 2. இந்தப் படத்துக்கு யுவன்சங்கர்ராஜாஇசையமைத்துள்ளார். மேலும் தனுஷுக்கு ஜோடியாக சாய் பல்லவி நடித்துள்ளார். படம் வெளியாகி கலவையானவிமர்சனங்களைப் பெற்றுள்ளது. இந்தப் படத்தின் ரவுடி பேபி பாடல் இன்றும் இணையத்தில் டிரெண்டிங்கில் உள்ளது. குறிப்பாக இந்தப் பாடலுக்கு நடிப்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.






## ருவீற்ஸ்

MOHANRAM.KO @MOHANRAMKO



பீட்சா,பர்கர் நிறைய
சாப்பிடாதீங்க,
'நிறை'ய
குறைச்சிடலாம்

அன்புடன் கதிர்@KATHIR_TWITS



யாரையும் சேர்த்து
வைத்து அழகு
பார்த்ததில்லை
கத்திரிகோல்!

எனக்கொரு டவுட்டு @THAADIKKARAI



இக்கரைக்கு
அக்கரை
'கட்டடங்கள்'

# இன்றைய நாள்

**மேடம்:** மனதில் குழப்பம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் இலக்கு நிறைவேற கால அவகாசம் தேவைப்படும். அளவான பணவரவு கிடைக்கும். பெண்கள் அதிக பயன் தராத பொருள் வாங்க வேண்டாம்.

**இடபம்:** உங்களின் நற்செயலை சிலர் பரிகாசம் செய்வர். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். லாபம் சுமாராக இருக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**மிதுனம்:** செயலில் நேர்மை அதிகரிக்கும். தொழில், வியாபாரம் அபரிமிதமான வளர்ச்சி பெறும். தாராள பணவரவு கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**கடகம்:** மனதில் புத்துணர்ச்சி மேம்படும். தொழில், வியாபாரம் வளர்ச்சியில் முன்னேற்றம் உருவாகும். உரிவருமானம் கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**சிங்கம்:** இடையூறு செய்பவரிடம் விலகுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் பணிச்சுமை ஏற்படும். முக்கிய செலவுகளுக்குச் சேமிப்புப் பணம் பயன்படும்.

**கன்னி:** மனதில் குழப்பம் ஏற்பட்டு மறையும். தொழில், வியாபாரத்தில் குறுக்கிடும் இடையூறுகளை சரி செய்வது நல்லது. மிதமான பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாவர்.

**துலாம்:** அனுபவ அறிவால் நன்மை காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற புதிய வாய்ப்புக் கிடைக்கும். தாராள பணவரவில் கொஞ்சம் சேமிப்பீர்கள். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்.

**விருச்சிகம்:** புதிய பொறுப்புகளால் சிரமத்துக்கு ஆளாவீர்கள். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத்தை பாதுகாப்பது நல்லது. அளவான பணவரவு கிடைக்கும்.

**தனுசு:** அடுத்தவர் நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபா ரத்தில் நிலுவைப்பணி எளிதாக நிறைவேறும். ஆதாயம் கூடும். பெண்கள் இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவர்.

**மகரம்:** உங்களிடம் சிலர் பொறாமையுடன் பேசுவர். தொழில், வியாபார வளர்ச்சிக்கு இதமான அணுகுமுறை உதவும். திடீர் செலவால் சேமிப்புக் கரையும்.

**கும்பம்:** சவால்களை ஏற்று செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணவரவு கிடைக்கும். 'பணியாளர்கள் பணியிடத்தில் செல்வாக்குக் காண்பர்.

**மீனம்:** மதிநுட்பத்துடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து வளரும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். சமூகத்தில் உங்களின் மதிப்பு உயரும்..

## ஹைக்கூ

உருவம் இல்லாத உறுப்பு,
உள்ளத்தில் இருப்பதே சிறப்பு
**தன்னம்பிக்கை**

பண்படுத்தப் படைத்தவை
புண்படுத்தப்பயன்படுகின்றன
**மதங்கள்!**

ஏழைகள் வீட்டில்
விருந்தாளி
**கடன் காரர்கள்..!**

மேனி விரும்பும் நிறம்
தலை விரும்பாத நிறம்
**வெள்ளை**

## பணி

தலையைச் சொறி
நாக்கைக் கடி
பல்லை இளி
முதுகை வளை
கையைக் கட்டு
காலைச் சேர்
என்ன இது
வயிற்றைக் கேள்
சொல்லுமது



## மனதுக்கு பயிற்சி புத்தக வாசிப்பு



இந்த வாழ்வின் ஆகச் சிறந்த கேளிக்கை..
கொண்டாட்டம் ஓசையின்றி நடக்கிறது..
அதுதான் புத்தக வாசிப்பு. - **எமர்சன்**

எங்கே தங்க விரும்புகிறீர்கள் என்று லண்டன்
தோழர்கள் கேட்டபோது எது நூலகத்துக்கு
அருகில் உள்ள இடம் எனக் கேட்டவர்
- **டொக்டர் அம்பேத்கர்.**

தான் தூக்கிலிடுவதற்கு ஒரு நிமிடம்
முன்புவரை வாசித்துக்கொண்டு இருந்தவர்
- **பகத்சிங்**

ஒரு கோடி ரூபாய் கிடைத்தால் என்ன
செய்வீர்கள் என்று கேட்டபோது ஒரு நூலகம்
கட்டுவேன் என்றவர் - **மகாத்மா காந்தி**

நல்ல புத்தகங்களை வாசிக்காத ஒருவன்
வாசிக்கவே தெரியாதவனைவிட உயர்ந்தவன்
அல்ல. - **மார்க் டிவைன்**

உடலுக்கு எப்படி உடற்பயிற்சியோ அதுபோல
மனப் பயிற்சிக்குப் புத்தக வாசிப்பு
**சிக்மண்ட் பிரய்ட்**

எவ்வளவோ கேளிக்கைகளை
குழந்தைகளைக் கவர ஏற்படுத்தினேன்.
எல்லாவற்றையும் விட அதிக புதையல்
புத்தகங்களிலே உள்ளன. **வால்ட் டிசினி**

ஒவ்வொரு படமும் நடிக்க
ஒப்புக்கொள்ளும்போது வரும் முன்பணத்தில்
முதல் நூறு டொலருக்குப் புத்தகம் வாங்குபவர்
- **சார்லி,சாப்லின்**

ஒரு நூலகம் திறக்கப்படும்போது ஊரில் ஒரு
சிறைச்சாலை மூடப்படும். -
**விவேகானந்தர்.**

வேறு எந்தச் சுதந்திரமும் வேண்டாம். சிறை
யில் புத்தக வாசிப்பை மட்டும் அனுமதிக்க
வேண்டும். - **நெல்சன் மண்டேலா.**

புரட்சிப்பாதையில் கைத் துப்பாக்கிகளைவிட
பெரிய ஆயுதங்கள் புத்தகங்களே - **லெனின்.**

எங்கே நல்ல புத்தகங்கள்
எரிக்கப்படுகின்றனவோ அங்கு விரைவில்
நல்ல மனிதர்களும் எரிக்கப்படுவார்கள்.
- **சேகுவாரா**

உண்மையான வாசகன் வாசிப்பை முடிப்பதே
இல்லை - **ஆசுகார் வைல்ட்**

# காலம் x மனிதன்=வரலாறு



காலம் எங்கோ தொடங்கி எங்கோ சென்று கொண்டிருக்கிறது. இடையில் வந்த நாம் அதற்கு ஆண்டு, மாதம், வாரம், நாள், மணி, நொடி, கடந்தகாலம், நிகழ் காலம், எதிர்காலம் என ஏதேதோ பெயர் சொல்லி அழைக்கிறோம்.
ஆன்மிகமும், அறிவியலும் விளக்கமுடி யாத புள்ளியில் மையம் கொண்டிருக்கிறது காலம்.
காலத்தைப் புரிந்துகொள்வது அவ்வளவு சுலபமானதல்ல.

காலத்தைப் புரிந்துகொள்ளாதவர்களுக்குக் காலம் முதலாளியாக இருக்கிறது!

காலத்தைப் புரிந்துகொண்டவர்களுக்குக் காலம் நல்ல பணியாளாக இருக்கிறது!


காலத்தைப் புரிந்து கொள்ளாதவர்கள் வரலாறு படிக்கிறார்கள்!

காலத்தைப் புரிந்து கொண்டவர்கள் வரலாறு படைக்கிறார்கள்!!

# வள்ளுவர் கண்ட தமிழ்த் தேசியம்

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை





## தமிழ்நாடு வினி இளங்குமரன் அடிகளாரின் தனிநாயகம் அடிகளாரைப் பற்றிய பேருரை

கடந்த 4ஆம் திகதியன்று யாழ்ப்பாணம் முதன்மை வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் தனிநாயகம் அடிகள் ஆய்வுமைய பணிப்பாளர் அமிர்த யெயசேகரம் அடிகளார் தலைமையில் நடைபெற்ற தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் 3ஆம் நினைவுப் பேருரை பற்றி இந்த ஆக்கம் பேசுகிறது.

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் மேலும் அவரின் பணி மேலும் கொண்ட பற்றால் கனடாவில் வசிக்கும் அன்ரன் பிலிப் சின்னராசா யாழ்ப்பாணம் முதன்மை வீதியில் தனிநாயகம் அடிகள் ஆய்வுமையம் ஒன்றை நிறுவி ஒவ்வோர் ஆண்டும் நினைவுப் பேருரையை நடத்திவருகிறார். அந்த வகையில் 3ஆவது நினைவுப் பேருரை நடந்தேறியுள்ளது.

**இளங்குமரன் அடிகளாரின் உரை**

உலகெங்கும் பரவியிருக்கும் தமிழ் கத்தோலிக்க மக்களுக்கென தமிழ்நாட்டில் இருந்து டேவிற் ஆரோக்கியம் அடிகளார் தலைமையில் இயங்கும் மாதா தொலைக்காட்சியில் தினமும் காலையில் குறள் வழி இறைமொழி என்னும் நிகழ்ச்சியின் நடத்துனர் வினி இளங்குமரன் அடிகளார் வள்ளுவன் கண்ட தமிழ்த்தேசியம் எனும் தலைப்பில் பேருரை நிகழ்த்தினார். மேற்படி நிகழ்வின் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மறைமாவட்ட குருமுதல்வர் கலாநிதி பி.ஜே.ஜெபரட்ணம் அடிகளார் கலந்து கொண்டு செ.ரெ.வெனி இளங்குமரன் அடிகளாருக்கு பொன்னாடை போர்த்தி மதிப்புறுத்தினார்.

*'என்னை இறைவன் நன்றாய்ப் படைத்தனன்*
*தன்னை நன்றாய்க் தமிழ்ச் செய்யுமாறே'*

இது திருமந்திரம் தந்த ஏழாம் நூற்றாண்டுச் சித்தர் திருமூலரின் கூற்று. இந்தச் செய்தியைச் செயலாக்கி இறைபணிக்குப் புதுவடிவம் தந்தவர், தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் ஆவார்.


*அறிவுரு ஆராய்ந்த கல்வி இம்மூன்றன்*
*செறிவுடையான் செல்க வினைக்கு (684)*

கூர்மையான அறிவு, மதிப்பான தோற்றப் பொலிவு, ஆராய்ச்சியோடு கூடிய கல்வி இவற்றை முழுமையாகப் பெற்றவர் தூது செல்லத் தகுதியானவர்.

குறள் கூறும் இம் மூன்றிலும் செறிவுடையவராய்க் திகழ்ந்த தனிநாயகம் அடிகள் உலகின் பல்வேறு நாடுகளிடையே தமிழுக்குத் தூது சென்றார். 1964ஆம் ஆண்டில் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தை உருவாக்கினார். முதல் நான்கு உலகத் தமிழ் மாநாடுகளை முறையே கோலம்பூர் (மலேசியா 1966) சென்னை (தமிழ்நாடு 1968) பாரிஸ் (பிரான்ஸ் 1970) யாழ்ப்பாணம் (தமிழீழம் 1974) ஆகிய இடங்களில் நடத்தினார்.

தமிழ், ஆங்கிலம், இலத்தீன், இத்தாலியம், பிரெஞ்ச், ஜெர்மன் போர்த்துக்கீசியம், ஸ்பானியம் ஆகிய மொழிகளில் புலமை பெற்றிருந்த அடிகள் தமிழ் கள்ச்சர் என்னும் ஆங்கில முத்திங்களிதழின் ஆசிரியராகச் செயல்பட்டார். 1679ஆம் ஆண்டிலேயே இந்திய மொழிகளுள் முதலாவதாக அச்சிடப்பட்ட 'தமிழ் போர்த்துக்கீசியம் அகராதி' என்ற நூலைக் கண்டுபிடித்து மறுபதிப்பு செய்து மாநாட்டில் வெளியிட்டார்.

அன்னாரின் பெயரில் இயங்குகின்ற 'தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் ஆய்வுமையம்' ஏற்பாடு செய்துள்ள பேருரை அரங்கிற்கு வருகை தந்துள்ள தமிழ் ஆர்வலர்கள், தமிழை அன்போடு மதிக்கின்ற சான்றோர்கள் ஆகியோரின் எண்ணிக்கை பெருக வேண்டும் 'இறைவனைத் தமிழிச் செய்ய வேண்டும்' என்பதே நம் விருப்பம். 'குறள் வழி இறைமொழி' என்னும் 'மாதா தொலைக்காட்சி வழியாகக் கிடைத்த வாய்ப்புக்காக அதை ஏற்பாடு செய்த நல்லுள்ளங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு 'வள்ளுவர் கண்ட தமிழ்த் தேசியம்' பற்றி இவண் என் எண்ணங்களை எழுதுகிறேன்.



**திருக்குறள்**

ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி. சொல்லில், சுவையில், கருத்தில், கவிதைச் சிறப்பில், பண்பினில், பயன்பாட்டில் அழகு நிறைந்த வாழ்க்கை நெறி, காலத்தை வென்ற காவியம், இடங்களையும் வென்று உலகப் பொதுமறையாக உயர்ந்தோங்கி நிற்கும் கலங்கரை விளக்கம் அதுவே பொய்யாமொழிப் புலவர் திருவள்ளுவர் தந்த திருக்குறள். ஐ, ஆல், கு, இன், அது, கண் போன்ற வேற்றுமை உருபுகள் தமிழ் இலக்கணத்தில் இருக்கலாம். ஆனால் தமிழின் அடையாளத்தை ஏற்றிருக்கும் தமிழர் நடுவில் பாகுபாடு, வேறுபாடு, மாறுபாடு என எதுவுமே இருக்கக்கூடாது. பிளவு, ஏற்றத்தாழ்வு, தீண்டாமை, போன்ற தீயனவற்றிற்கு சவுக்கடி கொடுக்கும் குறள் சொல்கிறது :

*பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா*
*செய்தொழில் வேற்றுமை யான் (972)*

*ஒத்த தறிவான் உயிர்வான் மற்றையான்*
*செத்தாருள் வைக்கப் படும் (214)*

*'தொழில்' என்பது இங்கே பண்பை அல்லது ஒரு செயலைக் குறிக்கின்றது.*

*அந்சுவ தந்சாமை பேதைமை அஞ்சுவ*
*தஞ்சல் அறிவார் தொழில் (428)*

'கடுகைக் துளைத்து ஏழு கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்' என்று இடைக்காடர் குறிப்பிடுகிறார்.

'வள்ளுவன் தன்னை உலகிற்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று பாரதியார் பாடுகிறார்.

'திருக்குறளின் அறச் சிந்தனைகளை அறியாமலேயே என் நாட்டு (இங்கிலாந்து) இளைஞர்கள் வாழ்க்கையை முடித்து விடக்கூடாது' என்று உறுதிபடக் கூறுகிறார், 'இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்குகிறான்' என்று தன் கல்லறையில் எழுதி வைக்கச் சொன்ன மேலைநாட்டு அறிஞர் ஜி.யு.போப். திருவிவிலியத்துக்கு அடுத்த நிலையில் அதிகமான மொழிகளில் (132 மொழிகள்) மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட நூல் திருக்குறள். இத்தகைய சிறப்புக் கூறுகளைக் குறள் கொண்டிருந்தாலும் தமிழ், தமிழர் என்ற சொற்கள் ஒருமுறை சொல் கூட அதில் இல்லை.

திருக்குறளில் 133 அதிகாரங்கள், ஆயிரத்து 330 குறள்கள், 14 ஆயிரம் சொற்கள், 42 ஆயிரத்து 194 எழுத்துகள் உள்ளன. தமிழின் 247 எழுத்துகளுள் 37 எழுத்துகள் மட்டும்தான் குறளில் இடம் பெறவில்லை.

*எனை ஈன்ற தந்தைக்கும் தாய்க்கும் மக்கள்*
*தனை ஈன்ற தமிழ்நாடு தனக்கும் என்னால்*
*தினையளவு நன்மை பயக்கு மென்றால்*
*செத்தொழியும் நான் எனக்குத் திருநாளாகும்*
*என்று புரட்சி தெறிக்க பாடுகிறார் பாரதிதாசனார்.*

*கெஞ்சுவதில்லை பிறர்பால் அவர் செய் கேட்டினுக்கும்*
*அஞ்சுவதில்லை மொழியையும் நாட்டையும் ஆளாமல்*
*துஞ்சுவதில்லை எனவே தமிழர் தோள் எழுத்தால்*
*எஞ்சுவதில்லை எவரும் உலகில் எதிர்நின்றே*
என்று முழங்குகிறார் பாவரேறு பெருஞ்சித்திரனார்.

*தமிழே உயிரே வணக்கம்*
*தாய் பிள்ளை உறவம்மா உனக்கும் எனக்கும்*
*தமிழே உனக்கேன் கலக்கம்*
*தாயே பொறம்மா முழக்கம் வெடிக்கும்*
*அமிழ்தே உனை எவன் தொட்டால்*
*அவனை என்கைவாள் அழிக்கும் முடிக்கும்.*

என்று இயம்புகிறார் உணர்ச்சிப்பாவலர் காசிஅனந்தன். இவ்வாறு தமிழ் தொடர்பாக இப் பாவலர்கள் எழுதியது போன்று திருக்குறளில் இடம்பெறவில்லை 'தமிழ்' என்ற சொல் கூட இல்லை அப்படியெனின் 'தமிழ் தேசியம்' பற்றி திருக்கு றள் என்ன சொல்லியிருக்க முடியும்.

இருப்பினும் தமிழ் திரைப்படத்தில் வரும் ஒரு நகைச்சுவை போன்று (வரும் ........ ஆனா வராது) சற்று மாற்றி சொல்லலாம் அதாவது 'இருக்காது, ஆனா இருக்கும்' அதற்குச் சான்று, முதல் குறளும் இறுதிக் குறளும் ஆகும்.

*அகர முதல எழுத்தெல்லாம் ஆதி*
*பகவன் முதற்றே உலகு (001)*

*ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம்*
*கூடி முயங்கிப் பெறின் (1330)*

அகரத்தில் தொடங்கி நகரத்தில் நிறைவு பெறுகிறது குறள். தமிழ் இங்கே இயல்பாக இருக்கிறது. அந்த வகையில் குறளில் தமிழ்த்தேசியம் பற்றி இல்லாதது போன்று இருக்கும் ஆனால் அதில் தமிழ்த்தேசியம் பற்றி நிறைவாகவே இருக்கிறது. தமிழ்த்தேசியம் என்ற சொல் குறளில் இல்லை.

எனினும் அதுவே தமிழ்த் தேசிய நூல் ஆகும். திருக்குறள் மட்டுமே போதும், தமிழ், உயர் தனிச் செம்மொழி என்று அறிவிப்பதற்கு என்று அறிஞர் ஒருவர் கூறுகிறார்.

**வள்ளுவரின் தேசியப்பார்வை**

திருக்குறளில் உலகத்தைக் குறிக்கும் சொற்கள் 104 இடங்களில் வருகின்றன. (உலகம் 59, ஞாலம் 10, வையம் 11, நிலம் 24) தமிழ் அறம் செறிந்த ஊடாக, குறளில் சொல்லப்பட்டுள்ள செய்திகள் அனைத்தும் உலகனைத்துக்கும் பொருந்தும் எல்லா நாட்டுக்கும் என்பதனால் அது தமிழர் வாழும் நாட்டுக்கும் தான். ஏற்கேனவே அமைந்திருக்கின்ற, மொழி வழி தேசிய இனங்களின் அடிப்படையில் அமைய விருக்கின்ற, நாடுகள் அனைத்துக்கும் பொருந்தம்.

*பகுத்துண்டு பல்லுயிர் ஒப்புதல் நூலோர்*
*தொகுத்தவற்று ளெல்லாம் தலை (322)*

*மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்க் கில்லென்*
*தன்னுயிர் அஞ்சும் வினை (244)*

'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பதற்கேற்ப அறத்தோடு பொருளீட்டி இன்பமாய் வாழ்தல் என்ற வாழ்க்கை நெறியைக் கற்றுக் கொடுப்பதற்கே வள்ளுவர் அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பாலையும் முன்வைக்கிறார். குறல் கூறும் இவ்வழிகாட்டு நெறிகளைஎல்லாம்கணிப்பில்எடுத்துக்கொண்டு, எல்லா உயிர்களும் பாதுகாப்போடு, விடுதலையாய் வாழ்வதற்கு இனி என்ன செய்ய வேண்டும் என்று பார்ப்போம்.

**இனி என்ன?**

வள்ளுவர் கண்ட தமிழ்த் தேசியத்தை மூன்றுதளங்களில்கூர்மைப்படுத்தலாம். மொழி, அறம், நாடு என்பவையே அவை.

**தமிழ் மொழி**

உலகில் உள்ள பல்லாயிரம் மொழிகளைப் போன்றே தமிழும் 'ஒரு' மொழி என்றே தமிழர் தமிழை பார்க்கின்றனர். மேலும், மக்கள் தம் வாழ்க்கைத் தேவைக்காகப் பயன்படுத்தும் பல்வேறு கருவிகளைப் போல் தமிழும் ஒரு 'கருவி என்றுஅணுகும்தமிழர்பலரும்உள்ளனர். ஆனால், தமிழ் ஏதோ 'ஒரு' மொழியன்று அது தமிழரின் 'தாய்மொழி'. தமிழ், உலக மொழிகளின் தாய். தமிழ், திராவிட மொழிகளின் தாய் என்றெல்லாம் உலக மக்களை ஏற்றுக்கொள்ள வைப்பது கூட எளிது. காரணம், உலகப் பேரறிஞர்கள் தமிழின் மேன்மையை அறிந்து அறிவித்துள்ளார்கள். ஆனால் 'தமிழ் தமிழின் தாய்' என்று தமிழர்களை ஏற்க வைப்பதுதான் கூடுதல் கடினமாக உள்ளது.

***மொழி, அறம், நாடு என்பன பற்றிய பகுதியை அடுத்த வாரம் நோக்குவோம்.***

# நித்திய சுகம் 410

உடலே கோயில்

மருத்துவர் எஸ்.கேதீஸ்வரன்

# சூரிய ஒளி உடலுக்கு அவசியம்!



அண்மையில்மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி உலகில் பலருக்கு விற்றமின் டி பற்றாக்குறையிருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஆண்டு முழுவதும் சூரிய ஒளி குறைவில்லாமல் கிடைக்கும் இலங்கை போன்ற நாடுகளில்விற்றமின் டி குறைபாடு உள்ளது அதிர்ச்சிகரமான விடயமாகும். வெள்ளையர்களை விட கறுப்பான தோலுடைய ஆசிய நாட்டவர்களில் தோலில் அதிகம் காணப்படும் மெலனின் எனனும் நிறப்பொருளால்சூரியஒளிதோலினுள் ஊடுறுவது குறைவடை கின்றது

நாம் சிறுவர்களை வெயிலில் நிற்காதே மழையில்நனையாதேஎன்று கட்டுப்படுத்துகின்றோம். வெயிலைத் தவிர்க்கக் குடை, தொப்பி, நீளமான ஆடைகள் சூரிய ஒளியைத் தடுக்கும் பூச்சுக்கள் என்பவற்றைப் பாவிக்கின்றோம். இது எவ்வளவு தூரம் சரியானது. சூரிய ஒளியிலுள்ள புற ஊதா கதிர்கள் எமது தோலுக்கு அவசியமாகும். எமக்குத்தேவையானவிற்றமின் டியில் பெரும்பகுதி (90-95 வீதம்) சூரியஒளிமூலமாகத்தோலில்உற்பத்தியாகின்றது. போதியசூரியஒளிநேரடியாகத் தோலில் படாவிட்டால் விற்றமின் டி குறைபாடு ஏற்பட்டு பல நோய்கள் ஏற்படலாம்.

**விற்றமின் டி குறைபாடு பொதுவான ஒன்றுதான்**

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி உலகில் பலருக்கு விற்றமின் டி பற்றாக்குறையிருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஆண்டு முழுவதும்சூரியஒளிகுறைவில்லாமல் கிடைக்கும் இலங்கை போன்ற நாடுகளில் விற்றமின் டி குறைபாடு உள்ளது அதிர்ச்சிகரமான விடயமாகும். வெள்ளையர்களைவிட கறுப்பான தோலுடைய ஆசிய நாட்டவர்களில் தோலில் அதிகம் காணப்படும் மெலனின் எனனும் நிறப் பொருளால் சூரிய ஒளி தோலினுள் ஊடுறுவது குறைவடைகின்றது. இதனால் வெள்ளையர்களைவிடஆசியநாட்டவர்களானநாம் அதிக நேரம் வெயிலை உடலில் படவிடவேண்டும். இடம்பெயர்ந்து மேலைத்தேய நாடுகளில் வாழும் ஆசிய நாட்டவர்களில் அதிலும் குறிப்பாகப்பெண்களில்விற்றமின்டிகுறைபாடு அதிகமாகக் காணப்படுகின்றது. இதற்குக்காரணம்எம்மவர்கள்குளிர் காரணமாக உடலை மூடிய உடைகளை அணிவதும் வீட்டைவிட்டு வெளியில்வருவதுகுறைவாகஇருப்பதுமேயாகும்.

**சூரிய ஒளியின் நன்மைகள் சில**

சூரியஒளியால்உடலுக்குக்கிடைக்கும் நன்மைகள் எவை?

1. விற்றமின்டிகல்சியம்அகத்துறிஞ்சப்படுவதற்கு அவசியமாகும். எனவே, எலும்பு, பல் ஆரோக்கியத்துக்கு சூரிய ஒளி அவசியமாகும். குறிப்பாக மாதவிலக்கு நின்றபின் பெண்களில் ஏற்படும் Osteoporosis எனும் நோய்க்கு கல்சியம் குறைவது காரணமாகும்.


2. சூரிய ஒளியால் எமது உடலில் Sorotonin எனும்ஓமோன் அதிகமாகச் சுரக்கப்படுகின்றது. இந்த ஓமோன் சோம்பல் இல்லாமல் சுறுசுறுப்பாக வைத்திருக்கஉதவுகின்றது. சூரியஒளி குறைந்தகுளிர்காலங்களில்மேலைத்தேய நாடுகளில் நரம்புத் தளர்ச்சி அதிகம் ஏற்படுகின்றது.

3. சூரிய ஒளியானது உடலின் கொலஸ்ரோல்அளவு, குருதியமுக்கம் என்பவற்றைக் குறைக்கின்றது. வெயில் குறைந்த குளிர் காலங்களிலேயே மாரடைப்பு பொதுவாக ஏற்படுகின்றது. எனவே சூரிய வெளிச்சம் மாரடைப்பைக் குறைக்கின்றது என்பதை ஊகிக்கலாம்.

4. அது மட்டுமா! சூரிய ஒளி உடலில் படுவதால் உடல் பருமன் குறைவடைவதுடன் நீரிழிவுஏற்படுவதும்குறைவடைகின்றதாகஆய்வுகள்தெரிவிக்கின்றன.

5. சூரியஒளியால்உடல்நோ, மூட்டுவாதம் என்பன குறைவடைகின்றன.

6. அதிகமான சூரியஒளி குறிப்பாக வெள்ளையர்களில் தோலில் புற்றுநோயைஏற்படுத்தலாம். ஆனால்அளவானசூரியஒளிஉடலில்படுவதால்பல புற்றுநோய்கள் ஏற்படுவது குறைவடைவதாக அண்மையில் வெளியான ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மார்ப்புப் புற்றுநோய், குடல் புற்றுநோய், கருப்பைப் புற்றுநோய், இரப்பைப் புற்றுநோய் என்பன அவற்றில் சிலவாகும்.







7. மிதமான சூரிய ஒளியால் மாதவிலக்குப் பிரச்சினைகள் குறைவடைகின்றன. அத்துடன் மாதவிலக்கு நிற்பதும்தள்ளிப்போகப்படுகின்றது. அதுமட்டுமல்லாமல்பெண்களிலும் ஆண்களிலும் பிள்ளை பெறும் பாக்கியமும் அதிகரிக்கின்றது.

8. சூரியஒளிஉடலில்படுவதால்நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கின்றது.

சூரிய ஒளி தவிர ஏனைய வழிகளால் விற்றமின் டி இனை எவ்வாறு பெற்றுக்கொள்ளலாம்? என்ற கேள்வி எழுவது இங்கே அவசியமாகிறது. எண்ணெய்த் தன்மையுள்ள மீன்களில் விற்றமின் டிகாணப்படுகின்றது. பால், முட்டை என்பவற்றிலும் காணப்படுகின்றது. ஆனால்உணவுமூலம்எடுக்கப்படும் விற்றமின் டி உடலுக்குப் போதுமானது அல்ல. விற்றமின் டி உள்ள மாத்திரைகள் இப்போது பாவனையில் உள்ளன.

ஆசிய நாட்டவர்களாக நாங்கள் ஒவ்வொரு நாளும் சுமார் அரைமணி நேரம்வெயிலில்நின்றால்போதுமானதாகும். குறிப்பாக காலை 6 மணி தொடக்கம்10மணி வரை அல்லது மாலை 4 மணி முதல்6மணிவரையுள்ளநேரத்தில்சூரியஒளி படத்தக்கவாறு நிற்கலாம். இந்த நேரத்தில் உடற்பயிற்சி அல்லது நடப்பதால் எமக்கு இரட்டிப்பு நன்மை ஏற்படும்.

எனவேவிலையுயர்ந்த மருந்துகளை நாடிச்செல்லும் நாம் இயற்கையான சூரியஒளி, கடற்கரைகாற்று, இயற்கை அழகுஎன்பவற்றைஏன்பயன்படுத்தக் கூடாது. இவற்றால்எமதுஉடலும்உள்ளமும் நலன்பெறும். வெயிலில் நின்றால் முகஅழகு குன்றிவிடும் எனப் பயப்படாதீர்கள். காலை, மாலைவெயிலால்ஏற்படும்நன்மைகள்பல.

**கட்டுரையாளர்**
**பொதுவைத்திய நிபுணர்,**
**யாழ்.போதனா மருத்துவமனை**

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கொய்யாத்தோட்டம்
புதுவீதியில் 6 பரப்புக் காணி
வீட்டுடன் உடன் விற்பனைக்கு.
மாலை 3 - 7 வரை

**076 861 9947**

**பெயர்மாற்றம்**

கல்வளை வீதி, சண்டிலிப்பாயைச் சேர்ந்த **சுதர்யகி** ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை **சுவேந்தினி** எனப் பெயர்மாற்றம் செய்து இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

**- சுவேந்தினி -**

(CS/23209)(11.17)

**வேலைவாய்ப்பு**

திருநெல்வேலிலுள்ள பிரபல
விருந்தினர் விடுதி ஒன்றுக்கு
(Near Northorn Hospital)
கணக்காளர் மற்றும் வரவேற்பாளர்
ஆண்.பெண் இருபாலாரும்
விண்ணப்பிக்கலாம்.

**077 239 7898/ 071 417 2364**

**வேலையாள்கள் தேவை**

மாடு, ஆடு, கோழி ஆகிவற்றுடன் கூடிய
**விவசாய பண்ணைக்கு**
பராமரிப்பாளர் தங்கி இருந்து வேலை
செய்வதற்கு ஆள்கள் தேவை.

**077 773 0567**

**SPECIAL SCHOLARSHIP FOR SRI LANKA STUDENTS**
இலங்கை மாணவர்களுக்கான விசேட புலமைப்பரிசில்

ENTRY FREE

# INDIA EDUCATION FAIR 2019

**WORLD CLASS EDUCATION AT AFFORDABLE COST**
குறைவான கட்டணத்தில் உலகத்தரம் வாய்ந்த கல்வி

11 & 12 FEBRUARY 2019

**THE VALAMPURI HOTEL, JAFFNA**
Mon & Tue, 10 am to 6 pm



Supported by
Consulate General of India
Jaffna, Sri Lanka

In Association

Online Partner
College of India
www.collegeofindia.org
edufaironline.com

Event Managed by
SAPE
www.sapeevents.com
Leading education fair organiser of Asia & Africa

facebook
India education fair Jaffna

Everyday Free Lucky Draw Prizes
Tab, i-Pod, Mobile Phone
and other exciting prizes for the visitors

Study in INDIA

## இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம்

சுற்றுலாதுறை அபிவிருத்தி, வனஜீவராசிகள் மற்றும்
கிறிஸ்தவ சமய விவகார அலுவல்கள் அமைச்சு

சுற்றுலா மற்றும் ஏற்பாட்டியல் துறைகளுக்கான மனித வளத்தினை மேம்படுத்தும் வகையில்
கல்வியும் பயிற்சியும் வழங்கும் நாட்டின் முதன்மை நிறுவனம்




**யாழ்ப்பாணம் SLITHM இல்,**
**2019 மார்ச் 05ம் திகதி**
ஆரம்பிக்கப்படும் கற்கைநெறிகளுக்கு
விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

**பாடநெறி** — **கைவினை மட்டம்**
(முழு நேரம் - 03 மாதங்கள்)

| விடயம் | கட்டணம் (ஒரு மாதத்திற்கான) |
|---|---|
| ஹோட்டல் வரவேற்பு கோட்பாடுகள் | - ரூ. 1,500 |
| உணவு மற்றும் பானங்கள் | - ரூ. 1,500 |
| ஹோட்டல் பராமரிப்பு | - ரூ. 1,500 |
| சமையல் கோட்பாடுகள் | - ரூ. 1,500 |

**வெற்றிகரமாக திட்டத்தை நிறைவு செய்த பின்னர்**
அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் ஒன்று வழங்கப்படும்
SLITHM இன் உயர் டிப்ளோமா கற்கைகளுக்கான மேலதிக தகமையாகும்

**பதிவுக்கட்டணம்** ரூ. 500/-
**நுழைவு தகுதிகள்** 16 வயதுக்கு மேல்

இறுதி திகதி 2019 பெப்ரவரி 28ம் திகதி, Pub admin Rest, 4வது மைல்கல் அருகில், ஊர்காவற்துறை வீதி, யாழ்ப்பாணம்

முகவரி:
**பதிவாளர், SLITHM, 78, காலி வீதி, கொழும்பு 03.**

இணையம் : http://slithm.edu.lk
விசாரணைகளுக்கு : 077 595 6119 (நிரஞ்சலா)

## விற்பனைக்கு

சணல் குட்டித்தாச்சி ஆடுகள். குட்டிகள். சினைப்படுத்தக்கூடிய கிடாய்கள். பொமேரியன் நாய்கள். ஆண். பெண் என்பன விற்பனைக்குண்டு.

**077 101 6407** (CS 23201)(11.17)

## வீடு விற்பனைக்கு

சங்கானை பிரதான வீதி. கொமர்சல் வங்கிக்கு முன்பாகவுள்ள குளத்தடி வீதியில் (பிரதான வீதியிலிருந்து 20m தூரம்) புதியமாடி வீடு விற்பனைக்குண்டு.

**077 217 8541**

## வீடு விற்பனைக்கு

சாவகச்சேரி கைலாயபிள்ளை வீதியில் 6 பரப்புக்காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

**076 350 8303** (C/9355)(11.17)

## 3மாடி கடை வாடகைக்கு

A9 வீதி கிளிநொச்சியில் இலங்கை வங்கி. மக்கள் வங்கிக்கு முன்னால் வியாபார நிலையத்திற்கான 3மாடி கட்டடம் வாடகைக்குண்டு. ஒவ்வொன்றும் தலா 162 சதுர மீற்றர் கொண்டது.

(CS 00472)(04.17)

**077 777 9867**

## நீர்கசிவை தடுப்பதற்கு

வட மாகாணத்தில் Water Proofing ஐ தடுப்பதற்கான மருந்து வகைகளை முதன் முதலில் அறிமுகம் செய்தவர்கள் 10 வருட உத்தரவாதத்துடன் நீர்க்கசிவை நிறுத்தி தருகிறோம்.

**077 232 3000 / 077 524 4177**

## வீடு விற்பனைக்கு

கொழும்பு சொய்சாபுரவில் முதலாம் மாடி C - Type வீடு விற்பனைக்குண்டு. விலை 58 இலட்சம். தரகர் தேவையில்லை.

**021 227 1921**

## வீடு வாடகைக்குண்டு

யாழ் மார்ட்டீன் வீதி. திருக்குடும்ப கன்னியர் பாடசாலைக்கு அருகில் இரு அறைகளுடன் வசதி வாய்ப்பான வீடு ஒன்று வாடகைக்கு உண்டு. (2019.02.16 வீடு பார்வையிடலாம்.)

(CS 23121)(04.17)

**077 041 9058/077 986 5300**

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை பண்டத்தரிப்பு வீதியில் யூனியன் கல்லூரிக்கு மிக அருகில் காணி உடனடி விற்பனைக்கு உண்டு. 8திகதி. 9. 10. நாள்களில் காலை 10 மணி தொடக்கம் 4 மணிவரை பார்வையிடலாம். தரகர் தேவையில்லை.

தொடர்பு - 077 854 4600

## WANTED

**MUST HAVE ENGLISH LANGUAGE SKILL**

**1.Graphic Designer**

- A Minimum of 2 year's experience in Graphic Designing
- Proficient in Adobe Suite - Photoshop, Illustrator, InDesign & CorelDraw

Please Send Your CV to:-
(CS 23263)(11.17) **hrlanka2019@gmail.com**

## Luxury Apartment வாடகைக்கு

நாள், கிழமை, மாத அடிப்படையில் கொழும்பு 3, 4, 6, மற்றும் தெஹிவளையில்

1 B/Room, 2 B/Room, 3 B/Room

Sea View, Complete Furnished, Wi-fi, Cable TV, Kitchen Appliance, Washing Machine and Parking, 24 Hours Security Also Provide Transport Facilities

077 35 40 632 / 077 44 40 453
077 99 19388 / 077 77 33 122
011 2363991

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வதற்குப் பணிப்பெண் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தங்குமிட வசதிகள் செய்துதரப்படும்.

**077 4804239, 077480 8786** (CS 23207)(11.17)

## காணி விற்பனை

யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் இரண்டேகால் பரப்பு உயர்குடியிருப்பு நிலமும் யாழ். இந்துமகளிர்கல்லூரி அருகில் மிகப்பிரபல்யம் வாய்ந்த பகுதியில் ஒன்றரைப்பரப்பு நிலமும் விற்பனைக்கு உண்டு.

**077 921 5550, 077 773 2893**

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் வீதி ஐந்து சந்தியிலுள்ள காணி உடன் விற்பனைக்கு உண்டு. அதி கூடிய விலை கேட்போருக்கு விற்கப்படும்.

**077 432 2836**

## விற்பனையாளர்கள் தேவை

**கண்ணாடி** வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்கள் **பழக** விரும்புபவர்கள் தேவை
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்

**த.குமாரசாமி அன் சன்ஸ்**
**252, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**






## மரண அறிவித்தல்கள்



# வீரசிங்கம் இலட்சுமிப்பிள்ளை

கைதடி வடக்கு, கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் இலட்சுமிப்பிள்ளை 08.02.2019 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வீரசிங்கத்தின் பாசமிகு மனைவியும், சிவஞானப்பிரகாசம் (பொறியியலாளர் - ஆஸ்திரேலியா), சிவஞானராணி (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற திருஞானப்பிரகாசம், நவஞானராணி (ஓய்வுபெற்ற நூலகர்) , அருள்ஞானப்பிரகாசம் (பொறியியலாளர் - புரூணை) ஆகியோரின் அன்புத்தாயும், இராஜலட்சுமி, காலஞ்சென்ற வல்லிபுரம், குமாரகுலசிங்கம், ஜானகி ஆகியோரின் அன்பு மாமியும், சரண்யா - சாரங்கன், ஜெனனி - சுதர்சன், எழினி - விக்கினேஸ்வரன் , அனுறுக்சி, வரப்பிரியன், சகானன், மாதினி ஆகியோரின் அன்புப்பேர்த்தியும், மகாலக்ஸ்மி, ஜெய்சரன், மகிஷா, சாயிஷா, அபிஷா, ஆத்விகா, அஸ்விகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2019) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊற்றல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**077 900 3321, 021 205 7450**

# திருமதி நாகேஸ்வரி இரத்தினசபாபதி



யாழ்.வேலணை முதலாம் வட்டாரம் மணியகாரன் வீட்டடியைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி இரத்தினசபாபதி கடந்த 08.02.2019 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - பொன்னாச்சி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - பொன்னம்மா தம்ப திகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இரத்தினசபாபதியின் அன்பு மனைவியும், இரத்தினேஸ்வரி, சிவதாஸ், ஞானேஸ்வரி, மகேஸ்வரி, விமலேஸ்வரி, காலஞ்சென்ற கிருபானந்தவதி மற்றும் ரஜனிதேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும், இரத்தினராஜா, இந்திராணி, பரராஜசிங்கம், சடாச்சரன் (ஜெகன்), கேதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற வர்களான செல்வராசா, ஏகாம்பரம், குலசேகரம்பிள்ளை, கிருஷ்ணலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம், மகாலட்சுமி, செல்லம்மா, ஆறுமுகம், அன்னலட்சுமி மற்றும் ரதி, வரதா, அம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனியும், உதிஷ்ட்ரா - விமலதாசன், தனஞ்ஜினி - சிவாஸ்கரன், சுதர்ஸனன் - சர்மதா, ஷாரங்கன், காலஞ்சென்ற தபோதனன் மற்றும் சஞ்சயன் - கஜீதா, ஜனார்த்தனி - கஜீரன், சாம்பவி , பிரணவி, காலஞ்சென்ற கிருஷானந் மற்றும் கௌரிசங்கர் - ஜீவனா, கயன், குபேரன், மயூரி - ஜெயகாந்தன், ஷாமளை - ராகசுதன், விதுரன், கீதசபா, வைஷ்ணவி - கதிர்வேல், விதுஷன், நிதுஷன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், மாதுளா, மாதவன், சியாமளன், சேயோன், ஐஸ்வர்யா, அவிக்னன், சேனன், லக் ஷ்மி, ரிஷிகேசன், ஹாசினி, மாதினி, சனகன், சரண், யஸ்வின், ராதுஷாந் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**41/4, ஆத்திசூடி வீதி,**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.** (cs/23214)(11,17)

**தகவல்:**
**இ.சிவதாஸ் (தவம்- மகன்)**

**077 725 0986**

## இலங்கையின் 71ஆவது சுதந்திர தின கொண்டாட்டங்கள் Colombo City Centre இல் கொண்டாடப்பட்டன.



நமது தேசத்தின் பெருமைக்குரிய 71ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடும் இந்த நாட்களில் தேசப்பற்று, அமைதி மற்றும் நல்லிணக்கம் ஆகிய அம்சங்களை உள்ளடக்கியபல்வேறுநடவடிக்கைகளை Colombo City Centre ஏற்பாடு செய்திருந்தது. Freedom is an Emotion என்ற தொனிப்பொருளின் கீழ் பெப்ரவரி 2ஆம் திகதி முதல் 4ஆம் திகதி வரை Colombo City Centre காட்சியறை வளாகத்தில் இந்த விசேட சுதந்திரதின நிகழ்வுகள் நடைபெற்றன.

Colombo City Centre சர்வதேச கடைத்தொகுதிகளுக்கு வரும் வாடிக்கையாளர்கள் சுதந்திர தினத்தை எவ்வாறு உணர்கிறார்கள் என்பதனை ஒரு சிறிய கடதாசியில் எழுதி அங்குள்ள சுவரின் மீது ஒட்டவேண்டும். பின்னர் அவர்கள் எழுதிய கருத்திற்கு அமைவானஒரு சித்திரத்தை ஓவியக் கலைஞர் ஒருவர் அவ்விடத்திலேயேசித்திரமாக வரைந்தார். அதேபோல் Colombo City Centre உணவகங்கள் மற்றும் சிற்றுண்டிச் சாலையில் பணியாற்றும் Michelin சமையல் வல்லுனர்கள் House on the Moon என்ற பெயரில் விசேட இனிப்பு ஒன்றைதயாரித்து அதை தேர்ந்தெடுக்கப்பட்ட 10 வாடிக்கையாளர்களுக்கு இலவசமாக வழங்கினார்கள். சிறுவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த பிரதேசத்தில் ஒரு நிமிடத்தில் பரிசுகளை வெற்றிபெறக்கூடிய விளையாட்டுக்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.அதேநேரம் பகுமுகக்கூட(Lobby)பிரதேசத்தில் தேசிய கொடியின் வர்ணங்களைக் கொண்டு உருவாக்கப்பட்டிருந்த இலங்கையின் வரைபடம் வருகைத்தந்த அனைத்து வாடிக்கையாளர்களையும் வெகுவாக கவர்ந்தது.

Colombo City Centre கூட்டுத் திட்டமானது, முதலீட்டு வாரியத்தின் அனுமதியைப் பெற்றுள்ள இலங்கையின் முதலாவது கூட்டுத்திட்டமாகும். 180 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் உருவாக்கப்பட்டுவரும் இந்த கூட்டுத்திட்டத்தை அபான்ஸ் நிறுவனம் மற்றும் சிங்கப்பூரின் NextStoryGroupஆகிய நிறுவனங்கள் கூட்டிணைந்து உருவாக்கி வருகின்றன. அன்மைக் காலமாக இலங்கையில் உருவாக்கப்பட்டு வரும் பிரம்மாண்ட முதலீட்டுத் திட்டமான இது 47 அடுக்கு மாடிகளுடன் கொழும்பின் மையப் பகுதியில் மிகவும் பிரம்மாண்டமாக அமைந்துள்ளது.

புகழ்பெற்ற வணிக இதழான AsiaOneMagazine இனால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆசிய விருதுகள் மற்றும் தலைமைத்து விருதுவழங்கும் விழாவில் 'ஆசியாவின் மிகச்சிறந்த விற்பனை நாமம்" மற்றும் "வருடத்தின் . மிகச்சிறந்த கூட்டுத்திட்டம்" என்ற விருதினையும். கோல்டன் குளோப் டைகர்ஸ் BrandExcellence விருதினையும், சிறப்பம்சங்களுக்காக சிங்கப்பூரில் இடம்பெற்ற CMO ஆசிய விருது வழங்கும் விழாவில் உயர் மதிப்புமிக்க நாளைய எதிர்ப்பார்ப்பிற்கான கூட்டுத் திட்டத்திற்கான விருதினையும் ColomboCityCentre தனதாக்கிக்கொண்டது. உலகின் தலைசிறந்த நகரங்களில் காணக்கூடிய சௌகரியத்தையும், சொகுசையும் இல்ங்கையின் தலைநகருக்கு ColomboCityCentre தந்திடும் என்பதனை மிகவும் உறுதியாக சொல்ல முடியும்.

உலகளாவிய விசேட விற்பனை நாமங்களைக் கொண்ட ஷொப்பிங் மால், 700 பேருக்கும்அதிகமாக அமர்ந்து உணவு உண்ணக்கூடிய அதிசொகுசு உணவங்கள் மற்றும் 6 திரைகளைக்கொண்ட மல்டிபிளெக்ஸ் சினிமா அரங்கம் மற்றும் 164 அறைகளைக் கொண்ட NEXTஹோட்டல் மற்றும் 192 அதிசொகுசு அப்பார்ட்மென்ட் ஆகியவை ColomboCityCentre இன் சொகுசையும், சௌகரியத்தையும் மிகச்சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றது. இதன் முகம்பார்த்துவிரிந்திருக்கும் பேய்ரே ஏறியின் அழகு, தொலைதூர இந்துசமுத்திரத்தின் ரம்யமான தோற்றம்அடிக்கடி மாறும் கொழும்பு நகரத்தின் அழகு மற்றும் நீல வானம் ColomboCityCentre இன்அழகை மேலும் மெருகூட்டுகிறது.

உலகின் தலைசிறந்த முன்னணி விற்பனை நாமங்களை உள்ளடக்கிய கடைத்தொகுதிகள், 192 அதிசொகுசு குடியிருப்புகள், உயர் தரத்திலான உணவகங்கள், சிறுவர் பொழுதுபோக்கு அம்சங்களை உள்ளடக்கிய வளாகம், சுதந்திரமாகவும், அமைதியாகவும் நேரத்தை செலவிட கூடிய வளாகங்களுடன், அதிக வாகனங்களை நிறுத்தக்கூடிய வசதி இங்குள்ளது. அதேபோல் கொழும்பில் வசிப்பவர்களை போன்று நாடளாவிய சகலருக்கும் Colombo City Centre இல் மறக்க முடியாத அனுபவங்களை பெற்றுக்கொள்ள முடியும். (C/32408)

## மரண அறிவித்தல்

பிறப்பு 06 . 08 . 1928



இறப்பு 09 . 02 . 2019

# திருமதி சரஸ்வதி கார்த்திகேசு

புவனேஸ்வரி அம்பாள் வீதி, நல்லூரைப்பிடமாகவும் மாகியப்பிட்டி, சண்டிலிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி - கார்த்திகேசு நேற்று (09.02.2019) சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசுவின் அன்பு மனைவியும் சுலோசனா, காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் சறோஜினிதேவி, திருச்செல்வம், பாஸ்கரன், ஆகியோரின் அன்பு தாயாரும் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம், பூமணி மற்றும் ஜீவநாதன், யோகாம்பிகை, அற்புதாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரது இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (10.02.2019) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று நண்பகல் 12.00மணிக்குபூதவுடல்நல்லடக்கத்திற்காக உடுவில்மல்வத்திலுள்ள சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அந்தியேட்டி அழைப்பும்




அமரர்

## பொன்னையா நாகரத்தினம்

(அதிபர்)

கடந்த தை மாதம் (14.01.2019) சிவபதம் அடைந்த எங்கள் குடும்ப விளக்கின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (11.02.2019) திங்கட்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் 13.02.2019 புதன்கிழமை எமது இல்லத்திலும் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சுன்னாகம்

குடும்பத்தினர்
077 584 8339

# INDIA EDUCATION FAIR 2019

**WORLD CLASS EDUCATION AT AFFORDABLE COST**
குறைவான கட்டணத்தில் உலகத்தரம் வாய்ந்த கல்வி

Facilitating the widest range of career assessment opportunities at the doorsteps, the latest edition of *India Education fair 2019* would once again reach out to the students of Sri Lanka **on 11 and 12 February, 2019, at The Valampuri Hotel,Jaffna organized by "SAPE Events & Media Pvt. Ltd."** supported by the **High Commission of India,Colombo, Ministry of Higher Education,Government of Sri Lanka** and **S.R Global Services Pvt.Ltd S**ri Lanka which is bringing a delegation of around 15 **Universities** from India for **conducting an Education Seminar and Fair at The Valampuri Hotel,Jaffna from 10am to 6pm**.The focus of the event will be to **"invite students to study in India under various scholarships"**.

Apart from bringing students and best of educational institutions under one roof, the event also helps the aspirants and the guardians have a detailed discussions about the facilities and fee structures of Indian institutions along with expert guidance. It also facilitates an easy comparison to help in making informed decisions, best suited as per individual needs.

Education is an important area of cooperation between India and Sri Lanka. Both countries have a shared legacy of intellectual, cultural, religious and linguistic discourse dating back to more than 2500 years. People to people contacts are at the core of this special relationship. In recent years, a number of steps have been taken to encourage deeper and meaningful interactions between the two peoples.Educational linkages between India and Sri Lanka occupy a special place in this framework of interactions.

SAPE is one of the leading event management and educational promotion organization of South East Asia, dedicated to serve the student community by providing them with an easy access to education options and prospects almost at their doorsteps.The basic objective of SAPE is to reach to the students inthe cities where educational options are limited. With more than fourteen years of experience, SAPE Education Fair is now the most seeked education fair in India and various other South Asian countries. The Education Fairhas extended to more than eighteen cities and has proudly held more than 200 education shows till now.The initiative has been appreciated by the exhibitors and their continuous support has made it possible for us to explore new market.Education Fair organised by SAPE is not just an Indian fair but also acclaimed in several South East Asian countries.They have been the first organiser of educational fair in Bhutan, Nepal, Bangladesh, Myanmar, Indonesia,Vietnam and Cambodia and have enjoyed the status of *First Mover Advantage*, succeeding in proving beneficial for both the students and the institutes.

A large number of Sri Lankan students take admission in Indian universities every year for studies at different levels and in varied courses. The proximity, cultural linkages, and world class Indian education at comparatively low costs have been a major attraction for Sri Lankan students. India also provides a large number of scholarships in various disciplines to further encourage and support Sri Lankan students in their quest for a better education. These scholarships are administered through the High Commission of India, in collaboration with Government of Sri Lanka. Last year,India offered more than 700 scholarship slots to deserving Sri Lankan students, at the"A" level, undergraduate, postgraduate and at research levels. In addition, under the Indian Technical and Economic Cooperation Scheme

This "India Education Fair, Sri Lanka" will help in apprising Sri Lankan Youth about the opportunities available in India as well as give Indian Universities and Education Institutions an idea about opportunities available in Sri Lanka.

The students can also gain information on education expenses that are a definite requirement to fund today's growing expense in education. The students can also use this platform to avail scholarships and on the spot admissions. For further details contact **Ruwani Perera at 0094-772270213**

**Email – ruwanip.srglobalservices@gmail.com**

Regards
Sanjoy Thapa
Founder & MD

# மரண அறிவித்தல்கள்

## நடராசா தனபாலசிங்கம்



ஐயனார் கோவிலடி, கொக்குவில் மேற்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் முத்தட்டுமட ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு, கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா தனபாலசிங்கம் நேற்று (09.02.2019) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - பவளம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற அம்பலவாணர் மற்றும் யோகேஸ்வரி தம்பதிகளின் மருமகனும் விஜயகுமாரியின் பாசமிகு கணவரும் சஜீபன், தனுஷா, கனிஸ்ரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் விமலாதேவி, சிவயோகசிந்தாமணி, மகேந்திரராஜா, பாலசுந்தரம், தேவராசலிங்கம், தவராசலிங்கம், சிவலிங்கம், கௌசலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் நடராசா, அமிர்தலிங்கம், வசந்தகுமாரி, நகுலேஸ்வரி, விஜயகுமாரி, காலஞ்சென்ற உதயகுமாரி மற்றும் சிவகுமாரி, கிருஸ்ணகுமாரி, றஞ்சிதகுமாரி, சூரியகுமாரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2019) ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

076 400 4414
(மகன் - சஜீபன்)

(CS 23711/15/17)

தகவல்:
குடும்பத்தினர்.



## திருமதி செல்லம்மா செல்லத்துரை

யாழ்.சுன்னாகம், ஐயனார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், லண்டன் Red bridge Newbury park ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா செல்லத்துரை 02.02.2019 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும், சுதாகரன் (சுதா - ஜேர்மனி), சுதாமதி (சுகி - லண்டன்), தயாகரன் (தயா - லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, குட்டிப்பிள்ளை, மாணிக்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், றேனாத்தை, உதயகுமாரன் (உதயன்), லின்டா ஆகியோரின் பாசமிகு மாமியாரும்,ஹய், நற்றலி, லிசா, சபரிஸ் சாயினா, சாயினியா, சயோன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2019) ஞாயிற்றுக்கிழமை East Ham Town Hall 328, Barking Rd, London E6 2RP, UK எனும் இடத்தில் நடைபெற்று பூதவுடல் City of London Cemetery and Crematorium Aldersbrook Rd, Manor Park, London E12 5DQ, UK என்னும் இடத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சுன்னாகம் ஐயனார் கோவிலடியில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.**

தகவல்: குடும்பத்தினர்.

சுதாமதி, தயாகரன் - லண்டன்) - 0044 7405 990 024,
சுதாகரன் (மகன் - ஜேர்மனி) - 0049 178 3356 995

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



யாழ்ப்பாணம், நல்லூர் ஸ்ரீ கைலாசபிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட

## அமரர் தியாகராஜா தங்கராஜா (சின்னத்தம்பி)

(உரிமையாளர் - முருகன் மோட்டோஸ் ஸ்ரோர்ஸ் - யாழ்ப்பாணம்)

மலர்வு
10.04.1938

உதிர்வு
23.01.2018

திதி:-
10.02.2019

அப்பா! நீங்கள் இந்த மண்ணில் மீண்டும்
வந்து பிறக்க வேண்டும்
உங்கள் குரலை, உங்கள் பாடல்களை
உங்கள் புன்னகையை, உங்கள் நகைச்சுவையை
மற்றும் நீங்கள் என்னை கேட்கும் ஆயிரம்
கேள்விகளை எல்லாம்
இந்த பன்னிரு மாதங்களில் தொலைத்து விட்டேன்
"அப்பாவின் அன்பை தோற்கடிக்கும் இன்னொரு
அன்பை மீண்டும் யாரும் தரப்போவதில்லை –
இந்த உலகம்"
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

88/5, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவில்
குடும்பத்தினர்.

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

மலர்வு
14.03.1972



உதிர்வு
13.01.2019

கடந்த 13.01.2019 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

## திருமதி ஜனனி செல்லகாந்தன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (10.02.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 12.02.2019 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.12/1, இந்துக்கல்லூரி முன்வீதி,
உரும்பிராய்.

குடும்பத்தினர்.

# வேலைவாய்ப்பு - முதியோர் பராமரிப்பு தாதி - யாழ்ப்பாணம்

